விலை: 30.00
பக்கங்கள் : பதினாறு + 16
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி.
யாழ்ப்பாணம்.
Email:kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1500/= + 500/= மட்டுமே

சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2052 ஆடி 30 ஞாயிற்றுக்கிழமை (15.08.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 239

எழுமாற்று பரிசோதனை
## கிளிநொச்சியில் 43 பேருக்கு தொற்று

(கிளிநொச்சி)
கிளிநொச்சி நகர் மற்றும் அதனை அண்மித்த பகுதிகளில் நேற்று 15

கோவிட் கோரதாண்டவம்
## 160 நாட்டில் ஒரே நாளில் பேர் உயிரிழப்பு

நேற்றும் +3,245 பேருக்கு தொற்று

(கொழும்பு)
இலங்கையில் கொரோனாத் தொற்று உக்கிரமாக பரவி வருகின்றது. நாட்டில் ஒரே நாளில் 160 பேர் கொரோனாவால் உயிரிழந்துள்ளனர்.
நேற்றும் +3,245 பேர் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர்.
அரசாங்க தகவல் திணைக் களம் நேற்று இரவு குறித்த தக வலை வெளியிட்டுள்ளது. இதனால் ஒரு நாளில் அதிக மரணங்கள் இடம் பெற்ற நாளாக நேற்று 15

பலத்த கெடுபிடிகளுக்கு மத்தியில்
## செஞ்சோலை படுகொலையின் 15ஆம் ஆண்டு நினைவேந்தல்

(யாழ்ப்பாணம்)
செஞ்சோலை சிறுவர் இல்லம் மீது இலங்கை விமானப் படையினர்



15

டெல்டா தீவிரமாக பரவுவதால் தினமும்
# 250 பேருக்கு மேல் உயிரிழப்பார்கள்

5 ஆயிரத்தை தாண்டி தொற்று பதிவாகும்

(கொழும்பு)
நாட்டில் டெல்டா வைரஸ் தீவிரமாக பரவி வருவதனால் ஒவ்வொரு நாளும் 250 பேருக்கு மேல் உயிரிழப்பார்கள். மேலும் 5 ஆயிரம் பேருக்கு மேல் தொற்றாளர்கள் அடையாளம் காணப்படுவர் என அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.
(15ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் 76 பேருக்கு கொரோனா

(வவுனியா)
வவுனியாவில் 76 பேருக்கு கோவிட் தொற்று ஏற்பட்டுள்ள தாகச் சுகாதாரப் பிரிவினர் தெரி வித்துள்ளனர்.
வவுனியாவில் இனங்காணப்பட்ட 15

படகு விபத்தில்
## காணாமல்போன மன்னார் மீனவர் சடலமாக மீட்பு

(அராலி)
இரணைதீவில் கடந்த இரு நாட்களுக்கு முன்பு இடம்பெற்ற படகு விபத்தில் காணாமல்போன மீனவர் ஒருவர் நேற்றைய தினம் மண்டைதீவு கடலில் சடலமாக மீட்கப்பட் 15

## வல்லிபுரம் ஆழ்வார் மகோற்சவம்

மாசி மாதத்துக்கு ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)
வடமராட்சி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் 15

## சுய கட்டுப்பாட்டை கடைப்பிடியுங்கள்

சுகாதார பரிசோதகர்கள் சங்கம் மக்களிடம் வலியுறுத்து



(கொழும்பு)
நாளை திங்கட்கிழமை முதல் 7 நாட்கள் பயணக் கட்டுப்பாடுகளை 15

## கொரோனாவால் வடக்கில் 6 பேர் பலி

(யாழ்ப்பாணம்)
கிளிநொச்சி, வவுனியாவில் தலா இருவர் உட்பட வடக்கில் கொரோனாவால் 6 பேர் உயிரி ழந்துள்ளனர்.
வவுனியாவில் கோவிட் தொற் றாளர்கள் இருவர் மரணமடைந் துள்ளதாக மாவட்ட சுகாதாரப் பிரி வினர் தெரிவித்துள்ள னர். 15

## கொரோனா தொற்று பேரவலத்தால் ஈக்களைப் போல் மக்கள் மடிகின்றனர்

அவிசாவளை கோவிட் விடுதியில் பணிபுரியும் மருத்துவரின் உணர்ச்சிபூர்வமான பதிவு

(கொழும்பு)
நாட்டில் கொரோனாத் தொற் றால் ஈக்கள்போல மக்கள் இறக்கின்றனர்" என அவிசாவளை மருத்துவமனை கோவிட்-19 விடுதியில் பணிபுரியும் மருத் துவர் உணர்ச்சிபூர்வமான பதிவு ஒன்றை பதி விட்டுள்ளார். 15

போதனா பரிசோதனையில்
## யாழ்ப்பாணத்தில் 86 பேர் உட்பட வடக்கில் 138 பேருக்கு தொற்று

(யாழ்ப்பாணம்)
யாழ்.மாவட்டத்தில் 86 பேர், முல்லைத்தீவு மாவட்டத்தில் 20 பேர் உட்பட வடக்கு மாகாணத் தில் 138 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள் ளது.
யாழ்.போதனா வைத்திய சாலையில் நேற்று 575 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரி சோதனையில் 138 பேருக்கு தொற்று உறுதி 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## நாய்க்குட்டிகள் விற்பனைக்கு

60 நாட்களான ஜேர்மன் சர்ப்பட் (German Shepherd) நாய்க்குட்டிகள் விற்பனைக்கு. கோண்டாவில் .

(7655)

**077 745 3835**
**075 511 3457**



## கட்டடம் / வீடு வாடகைக்கு தேவை

கே.கே.எஸ் வீதியில் கொக்குவில் சந்திக்கும் மருதனார்மட சந்திக்கும் இடைப்பட்ட பகுதியில் பிரதான வீதியில் தொழிற்கல்விசார் நிறுவனம் ஒன்றிற்கு வீடு வாடகைக்கு தேவை. (C-2535)

**077 104 1923**




## வைத்திய கலாநிதி கதிரவேற்பிள்ளை காலமானார்

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையின் வைத்திய அதிகாரியாக நீண்டகாலம் கடமையாற்றி ஓய்வுபெற்ற வைத்திய கலாநிதி சி. கதிரவேற்பிள்ளை நேற்று கொழும்பில் காலமானார். அவருக்கு வயது 88. மிக நெருக்கடியான யுத்தகாலத்தில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையின் இயங்குநிலைக்குத் தன்னை முழுமையாக அர்ப்பணித்த வைத்திய கலாநிதி சி. கதிரவேற்பிள்ளை அவர்கள் மற்றவர்கள் மீது அன்பும் மதிப்பும் காட்டி வடமராட்சி மக்களின் மிக உயர்ந்த மரியாதைக்குரியவராக விளங்கியவர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. (ம-03)


## 5ஆம் ஆண்டு 4ஆம் ஆண்டு நினைவுகள்



**வயிரமுத்து சிவலிங்கம்**
( ஓய்வுநிலை ஆசிரியர் )
திதி : அட்டமி
பிறப்பு : 12.05.1939
இறப்பு : 10.08.2016

**சிவலிங்கம் கனகமணி**
திதி : திரயோதசி
பிறப்பு : 23.11.1950
இறப்பு: 24.05.2017

கண்முன்னே வாழ்ந்த காலம் கனவாகிப் போனாலும்
எம்முன்னே உங்கள் முகம் எந்நாளும் உயிர்வாழும்
மண்விட்டு மறைந்த நீங்கள் விண்ணோக்கிச் சென்றாலும்
கண்விட்டு மறையாமல் காலா காலம் இருப்பீர்கள்.

(7649)

குப்பிளான் தெற்கு,
ஏழாலை.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.



## விமலம் திருமண சேவை

தங்கள் தேடுதலுக்கும் தகுதிக்கும் ஏற்ற மணமகன்/மணமகள் தேவையெனின் எம்முடன் தொடர்புகொள்ளவும். எம்மிடம் லண்டன், கனடா, அவுஸ்திரேலியா, ஜேர்மனி, சுவிஸ், நோர்வே ஆகிய வெளிநாடுகளிலும் இலங்கையிலும் அவரவர் கல்வித் தகைமைக்கேற்ற மணமகன், மணமகள் தாராளமாக உள்ளனர்.

### மணமகன் இலங்கையில் தேவை

1993, 1990 இல் பிறந்த திருவாதிரை, மகம் நட்சத்திர மணப்பெண்களுக்கு இலங்கையில் மணமகன்மார் தேவை. (இருவரும் கனடா சிற்றிசன்)

தொடர்புகளுக்கு (7648)

077 333 2262 -யாழ்ப்பாணம்
+14372446737 -கனடா - Viber
004917643399372 -ஜேர்மனி (Whatsapp, Viber)
0094762049298 -IMO



## மணமகன் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம் வயது 43 A/L படித்து 4 வருடம் சங்கீத கலை படிப்பு தனியார் துறையில் அல்லது அரசாங்கதுறையில் வேலை செய்பவராக இருத்தல் விவாகரத்து செய்தவர்களும் தாரம் இழந்தவர்களும் தொடர்புகொள்ளலாம்.

தொடர்புகளுக்கு (7618)

Whatsapp- **071 684 8191**
**075 476 9477**



## NORTH CONSTRUCTION

Rent for Construction Equipments & Vehicles



LOWEST PRICE

Per Day Rs.8500

(7642) *conditions apply

**077 732 1615**

991, K.K.S Road, Thaddatheru, Jaffna.



## மணிவிழா வாழ்த்து



திரு. **சுப்பிரமணியம் இராசேந்திரம்**
( சாரதி : பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர் பணிமனை – கிளிநொச்சி )

வேலையை திறம்பட செய்தும்
குடும்பத்துடன் பாசமாக இருந்தும்
உறவுகளுடன் உறவாடி திரிந்தும்
சமூக வேலைகளில் சலிக்காதும்
வேலையிலிருந்து ஓய்வு பெற்று இன்று
அறுபதாவது அகவையை கொண்டாடும்
எம் இனிய சகோதரனுக்கு எமது
பிறந்த நாள் வாழ்த்துக்கள்.

(C-2528)


26 வருடங்கள் வலயக்கல்விப் பணிமனை கிளிநொச்சியிலும் 5 வருடங்கள் நீர்ப்பாசனத் திணைக்களம் கிளிநொச்சியிலும் சேவையாற்றியுள்ளார்.

மணியம் குடும்பம்
( கண்டாவளை )


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலிகள்

## ஆதார வைத்தியசாலை, பருத்தித்துறை



### வைத்திய கலாநிதி.

## அமரர். சி. கதிரவேற்பிள்ளை

மலர்வு: 16.11.1933 உதிர்வு: 13.08.2021

**பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் நீண்டகால மாக மாவட்ட வைத்திய அதிகாரியாக கடமையாற்றி ஓய்வு பெற்று அமரத்துவமடைந்த அமரர். வைத்திய கலாநிதி சி.கதிரவேற்பிள்ளை அவர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.**

### மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரின் அஞ்சலி செய்தி



எமது பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையின் முன்னாள் மாவட்ட வைத்திய அதிகாரி கலாநிதி சி.கதிரவேற்பிள்ளை ஐயா அவர்கள் அமரத்துவமடைந்துவிட்டார்.

ஒரு நீண்ட பாரம்பரியத்தைக்கொண்ட பருத் தித்துறை ஆதார வைத்தியசாலையின் வரலாற்றில் அமரர்.வைத்திய கலாநிதி சி.கதிரவேற்பிள்ளை ஐயாவுக்கென ஒரு தனி இடம் உண்டு.

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் நீண்ட காலமாக மாவட்ட வைத்திய அதிகாரியாகப் பணியாற்றியவர்.

அவர் நெருக்கடிகள், இடப்பெயர்வுகள் நிறைந்த யுத்தகாலப் பகுதியில் வடமராட்சிப் பிரதேச மக்களுக்கான மருத்துவ சேவையை வழங்குவதில் அரும்பணியாற்றியவர். பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையின் உளநல மருத்துவ விடுதியின் வைத்திய உத்தியோகத்தராக நீண்ட காலம் கடமையாற்றினார். அவர் எல்லோருடனும் அன்புடனும் பண்புடனும் பழகக்கூடிய சமூக சேவையாளன்.

நான் யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளராக பணிபுரிந்த காலத்திலும் சிறிது காலம் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையின் மாவட்ட வைத்திய அதிகாரியாக என்னோடு பணியாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

அன்னாரது இழப்பினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**வைத்திய கலாநிதி ஆ. கேதீஸ்வரன்,**
**மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர்,**
**மாகாண சுகாதார சேவைகள் பணிமனை,**
**வடமாகாணம்.**

### பதில் வைத்திய அத்தியட்சகரின் அஞ்சலி செய்தி



எமது பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையின் முன்னாள் மாவட்ட வைத்திய அதிகாரி கலாநிதி சி.கதிரவேற்பிள்ளை ஐயா அவர்கள் இறையடி சேர்ந்துவிட்டார்.

வடமராட்சி பிரதேசத்தின் தனித்துவமான ஆதார வைத்தியசாலையாக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை திகழுகின்றது. அமரர்.கதிரவேற்பிள்ளை ஐயா அவர்களின் நீண்ட கால அளப்பரிய மருத்துவ சேவை எமது வைத்தியசாலையின் தற்போதைய வளர்ச்சிக்கு அடிப்படையாக அமைந்தது எனக் குறிப்பிடலாம்.

நெருக்கடியான யுத்த காலத்தில் பல இடர்பாடுகளின் மத்தியில் பதிவு வைத்திய அதிகாரிகளுடன் இணைந்து எமது மக்களுக்கான மருத்துவ சேவையை சிறப்பாக வழங்கியிருந்தார். எமது வைத்தியசாலையின் உளநல மருத்துவர் விடுதியின் வைத்திய அதிகாரியாகவும் பணிபுரிந்து சேவையாற்றினார்.

எமது வைத்தியசாலையில் Medicine Sans Frontiers (MSF) என்னும் தன்னார்வ மருத்துவ தொண்டு அமைப்பு சேவையாற்றிய போது அவர்களுக்குரிய ஏற்பாடுகளை செய்து கொடுத்து எமது மக்களுக்கு அவர்களுடைய சேவையைப் பெற்றுக்கொடுத்தவர். கதிரவேற்பிள்ளை ஐயா அவர்கள் ஒரு வைத்தியருக்கு உரிய மனிதாபிமான பண்புகளுடன் எல்லோருடனும் அன்பாகவும் ஆதரவாகவும் பேசி அவர்களுடைய பிணியைத் தீர்த்தவர் எங்கள் ஐயா அவர்கள். அவர்களுடைய ஆன்மீகத் தொண்டின் அடையாளம் தான் பருத்தித்துறை ஆதார வைத்தியாசாலையின் ஆதார விநாயகர் ஆலயம். அன்னாரது இழப்பினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**வைத்திய கலாநிதி வே.கமலநாதன்,**
**பதில் வைத்திய அத்தியட்சகர், ஆதார வைத்தியசாலை,**
**பருத்தித்துறை.**

(சி-2526)

**வைத்திய அத்தியட்சகர் ,வைத்தியசாலை உத்தியோகத்தர்கள்,**
**வைத்தியசாலை ஊழியர் நலன்புரிச் சங்கம், நோயாளர் நலன்புரிச் சங்கம்.**

**ஆதார வைத்தியசாலை,**
**பருத்தித்துறை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவுஸ்திரேலிய வீரர்களுக்கு ஐ.பி.எல்.தொடர் வரப்பிரசாதம்

கொரோனா வைரஸ் தொற்று காரணமாக இந்தியாவில் நடைபெற்ற ஐ.பி.எல் தொடர் பாதியிலேயே ரத்து செய்யப்பட்டு ஒத்திவைக்கப்பட்டது. இதனால் மீதமுள்ள போட்டிகளை 2ஆவது பாதியாக ஐக்கிய அரபு அமீரகத்தில் நடத்த இந்திய கிரிக்கெட் வாரியம் முடிவு செய்தது.

அதன்படி அடுத்த மாதம் 19ஆம் திகதி முதல் ஒக்டோபர் 15ஆம் திகதி வரை ஐ.பி.எல் போட்டி நடைபெறவுள்ளது. ஐ.பி.எல் போட்டி முடிவடைந்த இரண்டு நாட்களில், அதாவது ஒக்டோபர் மாதம் 17 ஆம் திகதி இருபது-20 உலகக் கோப்பை கிரிக்கெட் தொடர் ஆரம்பமாகிறது. நவம்பர் 14 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

கொரோனா வைரஸ் தொற்று காரணமாக கிரிக்கெட் போட்டிகள் அதிக அளவில் நடைபெறவில்லை. மேலும், அவுஸ்திரேலியாவின் பேட் கம்மின்ஸ், வார்னர் உட்பட முக்கிய வீரர்கள் வங்காளதேசம் உட்பட சில தொடர்களில் இருந்து விலகியுள்ளனர். இதனால் அவர்கள் தற்போது வரை சுமார் நான்கு மாதங்கள் கிரிக்கெட் விளையாடாமல் உள்ளனர்.

இந்த நிலையில் உலகக் கோப்பைக்கு முன் ஐ.பி.எல் கிரிக்கெட் தொடர் நடைபெற இருப்பது, உலகக்கோப்பைக்கு சிறந்த தயார்படுத்தலாக இருக்கும் என அவுஸ்திரேலியாவின் முன்னாள் கப்டனும், டெல்லி கேப்பிட்டல்ஸ் அணியின் பயிற்சியாளருமான ரிக்கி பாண்டிங் தெரிவித்துள்ளார். (4-6)



# ஆசிய கரப்பந்தாட்ட போட்டிகளிருந்து இலங்கை அணி விலக முடிவு

ஆசிய கரப்பந்தாட்ட சாம்பியன்ஷிப் போட்டியிலிருந்து இலங்கை விலகுவதற்கு முடிவு செய்துள்ளது.

தேசிய கரப்பந்தாட்ட அணியில் உள்ள அனைத்து வீரர் களும் கொவிட்-19 தொற்றினால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வரும் நிலையில், அவர்களில் எட்டு பேர் டெங்கு தாக்கத் துக்கும் உள்ளாகியுள்ளமை கண்டறியப்பட்ட நிலையிலேயே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

கொழும்பு சுகததாச ஹோட்டலில் தங்கியிருந்த தேசிய கரப்பந்தாட்ட (ஆண்கள்) அணி யில் மொத்தம் 20 வீரர்கள் சேர்க்கப்பட்டனர்.

ஒகஸ்ட் 1 ஆம் திகதி அணி யின் பயிற்சி தொடங்கிய பிறகு ஆறு வீரர்களும் பயிற்சியாளர் ஒருவருக்கும் கொவிட் தொற்று இருப்பது கண்டறியப்பட்டது.

இதன் பின்னர் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனைகளில் 20 வீரர்களும் பயிற்சியாளர்களும் கொவிட் தொற்றினால் பாதிக்கப்பட்டிருப்பது கண்டறியப் பட்டுள்ளது.

இதற்கான சிகிச்சைகள் அவர்களுக்கு வழங்கப்பட்டு வரும் நிலையில், வீரர்களிடம் மேற் கொண்ட அடுத்த கட்ட மருத்துவ பரிசோதனைகளில் எட்டுப் பேர் டெங்கு பாதிப்புக்கு முகங்கொடுத்துள்ளமையும் தெரியவந்துள் ளது.

இந்த நோயாளிகள் தற்போது ஸ்ரீ ஜயவர்தனபுர வைத்தியசா லையில் சிகிச்சை பெற்று வருவதாக தெரியவருகிறது.

16 அணிகள் பங்குகொள்ளும் ஆசிய கரப்பந்தாட்ட சாம் பியன்ஷிப் போட்டிகள் செப்டெம்பர் 12 முதல் 19 ஜப்பானின் சிபாவில் நடைபெறவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (4-6)

# இலங்கை குழாம் இன்று நைரோபி பயணம்

கென்யாவின் தலைநகரான நைரோபியில் நடைபெறவுள்ள இளையோர் உலக மெய்வல்லுநர் போட்டியில் இலங்கையிலிருந்து வீர, வீராங்கனைகள் 7 பேர் பங்கேற்கவுள்ளனர். 44 போட்டி நிகழ்வுகளைக் கொண்டதாக அமைந்துள்ள இளையோர் உலக மெய்வல்லுநர் போட்டியில் இலங்கை 5 போட்டி நிகழ்வு களில் பங்கேற்கவுள்ளது. இதில் பங்கேற்கும் இலங்கை குழாம் இன்று பண்டரநாயக்க சர்வதேச விமாநிலையத்திலிருந்து கென் யாவின் நைரோபி நகர் நோக்கி பயணமாகவுள்ளது. (4-6)


## ஐந்தாண்டு நினைவஞ்சலி

15.08.2021



மண்ணில்
1949.08.13

விண்ணில்
2016.08.11

அமரர் **சபாரத்தினம் தர்மரத்தினம் CTB**

( ஓய்வு நிலை சிரேஷ்ட சாலைப் பரிசோதகர் பருத்தித்துறை சாலை )

காலங்கள் கடந்தாலும் சில நினைவுகள்
ஞாலத்தில் அழிந்துபோவது இல்லை
காலத்தின் கணக்கு முடியும்வரை - நாம் காத்திருப்போம்
ஞாலத்தில் வாழ மீண்டும் வருவீர்கள் என்று
ஐந்து ஆண்டுகள் ஆனாலும் உங்கள் நினைவு
எங்கள் உயிர் உள்ள வரை அழியாது அப்பா
நீங்கள் எங்களுக்கு முன்மாதிரியாக வாழ்ந்து காட்டினீர்கள்
நீங்கள் காட்டிய பாதையில் நாம் செல்கின்றோம்
உங்கள் ஆத்மா ஆலடிப் பாலகணபதியின்
பாதங்களில் சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

(C-2531)

மனைவி - த.கலாவதி
பிள்ளைகள் - வி.செந்தூரன்,
வி.குமரன்,
வி.துவாரகன்

கலாகேந்திரா,
அல்வாய்.



## மணிவிழா வாழ்த்துக்கள்



திருமதி
**ஜெயமணி தேவேஸ்வரன்**

கல்விப் புலத்தில்
ஆசிரியர் பணி
22.11.1989 - 07.08.2012
அதிபர் பணி
08.08.2012 - 14.08.2021

யா/ மட்டுவில் சாந்தநாயகி
வித்தியாலயத்தில்
அதிபராக பணிபுரிந்து 14.08.2021 (சனி)
அன்று மணிவிழாக் கண்ட
அதிபருக்கு எமது வாழ்த்துக்கள்.

C-2534

தென்மராட்சி அதிபர் சங்கம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சடலங்களுடன் உறங்கும் அவலம்
# பேரவலத்தின் உச்சத்தில் இலங்கை

(கொழும்பு)

நாட்டில் உள்ள வைத்திய சாலைகளில் கொரோனா சிகிச்சை விடுதிகள் முற்றாக நிரம்பி வழியும் நிலையில் ஒரு படுக்கையை 3 நோயாளர்கள் பங்கிட்டுக் கொள்ள வேண்டிய நிலை உருவாகியுள்ளதாக சுகாதாரத்துறை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

3 நோயாளர்கள் ஒரே கட்டிலைப் பகிர்ந்துகொள்ளும் நிலையில் அவர்களில் ஒருவர் உயிரிழக்கும் போது ஏனைய இருவரும் அதனை அச்சத்துடன், மௌனமாகப் பார்த்துக் கொண்டிருக்கும் பரிதாபங்களும் நேருவதாக அந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

கொரோனா விடுதிகளில் தினசரி சாதாரணமாக பல மரணங்கள் இடம்பெறுவதைக் காணக் கூடியதாக உள்ளது. இந்நிலையில் முன்கள சுகாதாரப் பணியாளர்கள் மூச்சு விடக்கூட நேரமின்றி ஓயாது பணியாற்றி வருகின்றனர்.

இதுவே தற்போதைய நாட்டில் நிலைமை எனவும் சுகாதார துறை சார்ந்தவர்கள் கவலையுடன் சுட்டிக் காட்டுகின்றனர். (நி-5)


## கண்ணீர் அஞ்சலி

அமரர். பொன்னையா பஞ்சலிங்கம்



மண்ணில்: 1936.12.18 விண்ணில்: 2021.08.12

87 ஆவது அரியாலை சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாவின் (2006ஆம் ஆண்டு) தலைவரும் இலங்கை மற்றும் யாழ். மாவட்டத்தின் சிறந்த குறுந்தூர மெய்வன்மை வீரரும் விமானப் படையில் இணைந்து பல தேசிய மட்டப் போட்டிகளில் சாதனை படைத்தவரும் அரியாலை ஐக்கிய கழகம், அரியாலை சனசமூக நிலையம் போன்றவற்றின் முன்னைநாள் தலைவர், செயலாளர், நிர்வாக சபை உறுப்பினராக சேவையாற்றியவரும் மற்றும் அரியாலையின் பல பொது அமைப்புக்களில் சேவையாற்றியவரும் ஓய்வு நிலை விமானப்படை தொலைத்தொடர்பு அதிகாரியும் சமாதான நீதவானுமாகிய பொன்னையா பஞ்சலிங்கம் அவர்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்போம்.

(C-2527)

நிர்வாக சபை,
அரியாலை 102ஆவது சுதேசிய திருநாட்கொண்டாட்ட விழா



## 13ஆம் ஆண்டு நினைவேந்தலும் 31ஆவது பிறந்த நாளும்



அமரர். செல்வி
கணேசலிங்கம் பத்மஜா

மண்மகிழ 15.08.1990 மனம் நெகிழ 30.08.2008

மண்ணைவிட்டு நீ மறைந்து
விண்ணோக்கிச் சென்றாலும்
கண்கள் விட்டு அகலாமல்
கனக்கின்றாய் எம் மகளே
விழுதாக உனை நினைத்தோம்
விதியழைத்துச் சென்றதேனோ
கண்முன்னே வாழ்ந்த காலம்
கனவாகிப் போனாலும்
எங்கள் முன்னே உந்தன் முகம்
எந்நாளும் உயிர்வாழுமம்மா

(C-2525)

குடும்பத்தினர்
புத்தூர் கிழக்கு, புத்தூர்


## அடுத்த 6 வாரங்கள் எச்சரிக்கை மிக்கது

### சுகாதார அமைச்சர்

(கொழும்பு)

அடுத்துவரும் 6 வாரங்கள் இலங்கைக்கு ஆபத்துமிக்கது. எனவே சுகாதார வழிக்காட்டில் களை பின்பற்றி மக்கள் அவதானத்துடன் இருக்க வேண்டும். மேல் மாகாணத்தில் 60 வைத்திய நிபுணர்கள் மற்றும் 200 வைத்தியர்கள் கொண்ட சிறப்பு குழு அறிகுறியற்ற தொற்றாளர்களை வீடுகளில் வைத்து சிகிச்சையளித்துவருவதாக சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தெரிவித்தார்.

இரண்டு தடுப்பூசிகளையும் வழங்கி விட்டால், உயிரிழப்புகளை குறைக்கலாம் என்பது சுகாதார தரப்புகளின் கணிப்பாக உள்ளதெனவும் நாட்டின் தற் போதைய நிலைமை என்னவென்பது அனைவருக்கும் தெரிந்த விடயமாகும். அதனை எதிர்கொள்ளக்கூடிய வகை யில் சுகாதார பாதுப்பு வழிமுறைகளை பின்பற்ற ஊக்குவிக்க வேண்டும். எதிர்வரும் செப்டெம்பர் மாதம் நடுப்பகுதியில் இரண்டாம் கட்ட தடுப்பூசிகளை வழங்க முடியும். இந்த காலகட்டம் தான் மிக நெருக்கடியானது. தொற்றாளர்களில் 80 வீதமானோருக்கு எவ்வித நோய் அறிகுறிகளும் காணப்படுவதில்லை. இது மிகவும் ஆபத்தான நிலைமையாகும் என அவர் தெரிவித்தார். (நி-8)


## கண்ணீர் அஞ்சலி

அமரர். செல்வி
வனிதா பூவிலிங்கம்



எமது கல்லூரியின் ஆரம்பப் பிரிவு ஆசிரியை செல்வி. வனிதா பூவிலிங்கம் அவர்களின் மறைவு எமது கல்லூரிக்குப் பேரிழப்பாகும். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு ஆசிரியையின் ஆத்மா கர்த்தருக்குள் அமைதியடைய மண்டாடுகின்றோம்.

(7647)

நெஞ்சிருத்தி அஞ்சலிக்கும்
அதிபர், ஆசிரியர் மற்றும் கல்விசாரா ஊழியர்கள்.
நலன்புரிச் சங்கம், யா/ இனுவில் மத்திய கல்லூரி.



## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



மண்ணில் 09 - 02 - 1942

விண்ணில் 16 - 07 - 2021

அமரர் வைத்திய கலாநிதி லயன்.
Dr. சிற்றம்பலம் இராஜலிங்கம்

(ஓய்வுபெற்ற வைத்தியசாலை பொறுப்பதிகாரி அச்சுவேலி பிரதேச வைத்தியசாலை, CHARTER PRESIDENT INTERNATIONAL LIONS CLUB OF ATCHUVELY CIRCLE 306 B.1 , அகில இலங்கை சமாதான நீதவான், முன்னாள் தலைவர், அச்சுவேலி தோப்பு போதிப் பிள்ளையார் தேவஸ்தானம் மற்றும் ஆலய தர்மகர்த்தா தோப்பு முதலியம்மன் கோயில்)

எமது குடும்பத்தலைவரை இழந்து கலங்கி நின்றவேளை நேரடியாகவும் தொலைபேசி வாயிலாகவும் எமக்கு ஆறுதல்களை தெரிவித்த அனைத்து அன்பு உள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகள் உரித்தாகட்டும். அன்னார் காலமான செய்தியறிந்து அன்னாரின் இல்லத்திற்குச் சென்று பல்வேறு வழிகளிலும் உதவிய அனைவருக்கும் நன்றி கூறக்கடமைப்பட்டுள்ளோம். மேலும் சுகாதார வழிகாட்டலுக்கமைய பூதவுடலானது கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு மின்தகனம் செய்யப்பட்டவேளை அன்னாரின் இறுதிப் பயணத்தில் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தியவர்களுக்கும் மற்றும் இலத்திரனியல் சமூக ஊடகங்கள் மூலமாகவும் பதாகைகள் மூலமாகவும் தமது இரங்கல்களைத் தெரிவித்தவர்களுக்கும் எமது நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.

குறிப்பு: அன்னாரின் அந்தியேட்டி கிரியைகள் 15.08.2021 இன்று ஞாயிற்றுக்கிழமை லண்டனிலுள்ள REDBRIDGE SPORTS & LEISURE CENTRE, JEAN BROWN INDOOR ARENA, FOREST ROAD, BARKING SIDE ILFORD,IG6 3HD இல் லண்டன் நேரப்படி காலை 11.30 மணியளவில் நடைபெறும் என்பதை அறியத் தருகின்றோம். (7626)

"இராஜ கோட்டம்"
இராஜவீதி, தோப்பு,
அச்சுவேலி

தொடர்புகளுக்கு:
மதன் (மகன்) +447443926044
சுதர்சினி(மகள்)+447854314021
காண்டீபன் (மகன்)+447443925974

குடும்பத்தினர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வட மாகாண கல்வித் திணைக்களத்தின் ஏற்பாட்டில்

# தரம் 3-11 வகுப்பு மாணவர்களுக்கான நிகழ்நிலை நிலையறி பரீட்சை

(யாழ்ப்பாணம்)

வடமாகாண கல்வித்திணைக்களத்தால் தரம் 3 தொடக்கம் 11 வரையான வகுப்புகளுக்கு நிகழ்நிலை முறையில் நடைபெறவுள்ள நிலையறி பரீட்சை நாளை 16 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது என வடமாகாண கல்வித் திணைக்களம் அறிவித்துள்ளது.

google form ஊடாக பகுதி-1 வினாத்தாள்களும் பகுதி 1, பகுதி 2 வினாத்தாள்கள் ஏனைய செயலிகள் வாயிலாகவும் வலயக் கல்விப் பணிமனை ஊடாக மாணவர்களுக்கு அனுப்பி வைக்கப்படும்.

google form ஊடாக விடையளிக்கும் வினாத்தாளுக்கு மாணவர்கள் விடைகளை உடனடியாக பெற்றுக்கொள்ள முடியும். பகுதி 1 மற்றும் பகுதி 2 இற்கு மாணவர்கள் விடையளித்த பின்னர் விடைத்தாள்களை அறிவித்தலுக்கு அமைய பாடசாலையில் ஒப்படைக்க வேண்டும்.

அந்தவகையில் 16.08.2021 திங்கட்கிழமை தமிழ்மொழி 3 தொடக்கம் 11 வரை , 17.08.2021 செவ்வாய்க்கிழமை சுற்றாடல் தரம் 3 தொடக்கம் 5 வரை, வரலாறு தரம் 6 தொடக்கம் 11 வரை, 18.08.2021 புதன்கிழமை கணிதம் தரம் 3 தொடக்கம் 11 வரை, 19.08.2021 வியாழக்கிழமை ஆங்கிலம் தரம் 3 தொடக்கம் 11 வரை, 20.08.2021 வெள்ளிக்கிழமை சமயம் தரம் 03 தொடக்கம் 11 வரை, 23.08.2021 திங்கட்கிழமை விஞ்ஞானம் தரம் 6 தொடக்கம் 11 வரை, 24.08.2021 செவ்வாய்க்கிழமை குடியியல் தரம் 6 தொடக்கம் 9 வரை, தொகுதி I தரம் 10 தொடக்கம் 11 வரை, 25.08.2021 புதன்கிழமை அழகியல் தரம் 6 தொடக்கம் 9 வரை, தொகுதி 2 தரம் 10 தொடக்கம் 11 வரை, 26.08.2021 வியாழக் கிழமை சுகாதாரமும் உடற்கல்வியும் தரம் 6 தொடக்கம் 9 வரை, தொகுதி 3 தரம் 10 தொடக்கம் 11 வரை, 27.08.2021 வெள்ளிக்கிழமை புவியியல் தரம் 06 தொடக்கம் தரம் 9 வரை, 28.08.2021 சனிக்கிழமை பிரயோகத் தொழில்நுட்பத்திறன் தரம் 6 தொடக்கம் 9 வரை , 30.08.2021 திங்கட்கிழமை தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் தரம் 6 தொடக்கம் 9 வரை, 31.08. 2021 செவ்வாய்க் கிழமை இரண்டாம்மொழி சிங்களம் தரம் 06 தொடக்கம் 9 வரை நடைபெறவுள்ளது.

(4-7)




செஞ்சோலை படுகொலையின் 15ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வை முன்னிட்டு படுகொலையான வர்களுக்கு நேற்று வடமாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் எம்.கே. சிவாஜி லிங்கம் சுடரேற்றி அஞ்சலி செலுத்தினார். (படம்- சிவசாந்தன், ரவிசாந், கஜிந்தன்)

# போலி நிறுவனங்களிடம் ஏமாற வேண்டாம்


(யாழ்ப்பாணம்)

நடமாடும் சேவை மூலமாக சாரதி அனுமதிப்பத்திரம் பெற்றுத்தருவதாகக் கூறி வதிவிடங்களுக்கு வந்து விபரம் மற்றும் பணம் சேகரிக்கும் ஏமாற்றுக்காரர்களிடம் இருந்து பாதுகாப்பாக இருக்குமாறு யாழ் மாவட்ட சாரதி பாடசாலை உரிமையாளர்கள் அமைப்பு கேட்டுக்கொண்டுள்ளது.

நடமாடும் சேவை மூலமாக வாகன பயிற்சி அளித்து, அனுமதிப்பத்திரம் பெற்றுத்தருவதாக கூறி சுய விபரங்கள், பதிவுகளை மேற்கொண்டு பணம் வசூலிப்பவர்களிடம் ஏமாற வேண்டாம். தற்போது சாரதி அனும திப்பத்திர நடமாடும் சேவை முற்றிலுமாக நிறுத்தப்பட்டுள்ளது. இருப்பினும் மக் களை ஏமாற்றும் நோக்கில் சில நபர்கள் மோசடியில் ஈடுபட்டு வருவதாக அறிய முடிகிறது.

இவ்வாறான நபர்கள் வீடுகளுக்கு வரும் பட்சத்தில் அருகில் உள்ள பொலிஸ் நிலையத்திற்கோ அல்லது யாழ். மாவட்ட சாரதி பாடசாலை உரிமையாளர் அமைப்பிடமோ தகவல் வழங்குமாறு மேலும் அவர்கள் தெரிவித்துள்ளனர். (4-7-30)

# ஐந்து கோடி பெறுமதியான போதைப்பொருளுடன் மூவர் கைது



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்துக்கு எடுத்து வரப்பட்டு கடத்த முற்பட்ட 2 கிலோ 200 கிராம் ஐஸ் போதைப்பொருள் மற்றும் 120 கிலோ கிராம் கஞ்சாவுடன் மூவர் கைது செய்யப்பட்டனர்.

உயிர்கொல்லி போதைப் பொருளான ஐஸ் போதை பொருளின்பெறுமதி2கோடியே 50 லட்சம் ரூபாய் எனவும் கஞ்சா போதைப் பொருளின் பெறுமதி 2 கோடியே 50 லட்சம் ரூபாய் எனவும் மதிப்பிடப்பட்டுள்ளதாக கடற்படையினர் தெரிவித்தனர்.

பொலிகண்டி கடற்கரை வீதியில் நேற்று அதிகாலை இந்த கடத்தல் முறியடிக்கப்பட்டது எனவும் கடற்படையினர் குறிப்பிட்டனர்.

சந்தேக நபர்கள் 38, 34, 28 வயதுடைய மாங்குளம், இரணைமடு மற்றும் கிளிநொச்சியைச் சேர்ந்தவர்கள் என்று கடற்படையினர் தெரிவித்தனர்.

கடத்தலுக்கு பயன்படுத்தப்பட்ட வாகனமும் கைப்பற்றப்பட்டது.

சந்தேக நபர்கள் மூவரும் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்படவுள்ளனர் எனவும் கடற்படையினர் தெரிவித்தனர்.

(4-7-13-33-60)




## உன் அருள் கிடைக்க...

உயிருள்ளவரை உனை நேசிப்போம்
உயிர்வாழ வைக்க நீ எமை நேசி
உருமாறும் இக்கொடியவனை
உடன் கொல்ல எழுந்து வா

உம் பாதம் பணிகின்றோம்
உன் அருள் கிடைக்க
உலகுதனை
உவகை அடையச் செய் முருகா

கரிகாலன், ஊரெழு

## நல்லைக் கந்தனே வந்தருள் நீயே

அனுபூதி அளிக்கும் அழற்கண
வந்தோனே வருகவே
ஆகமர்தோன் தம்பியாய்
அவதரித்தவனே வருக
அருட்டி போக்கும் அருந்தன் நீயே
அருக்கு நீக்கும் ஆகமபதியும் நீயே

நல்லையம்பதி உறை
அருந்தபதியும் நீயே
நாட்டில் நன்மைகள் கூடிடும்
உன்னருளாலே
நல்லருள் வழங்கிட எழுந்துவா குகனே
நல்லையின் கந்தனே வந்தருள் நீயே

அரியாலையூர் கு.பிரதீபன்

## காத்திடுவாய் முருகா!

சூரன்வதம் செய்த நீ இருக்கையிலே அந்தக்
கோரக் கொரோனாவாம் நோயுமிங்கு சன்னதமா?
வீரத் திருவேலைக் கொண்ட திருமுருகா!
பாரினைக் காத்திடவே மயிலேறி வந்திடுவாய்!

நாயன்மார்கட்டு
ப.மகேந்திரதாசன்

## காட்சி வரம் தருவதெப்போ

வேல்வணங்கித் தொடங்குகிற
வேலை யாவும்!
வெற்றிபெறும் ரகசியத்தை வேலா சொன்னாய்!
வேங்கைமரம் வேடரூபம் போலே நானும்!
வேண்டும்படி காட்சிவரம் தருவதெப்போ

ப்ரியா காசிநாதன்
யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடு முடக்கப்படுவதைத் தவிர மாற்றுவழி ஏதுமில்லை

## எதிர்க்கட்சித் தலைவர்

(கொழும்பு) —

**கொவிட் அச்சுறுத்தலிலிருந்து மக்களை பாதுகாப்பதற்கு தற்போது தேவைப்படுவது பொருளாதாரமா? ஒட்சிசனா என்பதை அரசாங்கம் தீர்மானிக்க வேண்டும். கொவிட் ஆபத்திலிருந்து மக்களின் உயிரை பாதுகாப்பதே சகலரதும் பிரதான பொறுப்பாகும். அதன் பின்னர் பொருளாதாரத்தில் கவனம் செலுத்தலாம் என்று எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.**



தற்போது நாட்டில் நிலவும் உண்மையான நிலையை அரசாங்கம் உடனடியாக வெளிப்படுத்த வேண்டும். போலியான தரவுகளை மக்களுக்கு வழங்குவதை நிறுத்த வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

நாட்டின் மோசமான சூழ் நிலையில், மக்களை வாழ வைக்க தேவையானது பொருளாதாரமா அல்லது ஒட்சிசனா என்பதில் ஒன்றை அரசாங்கம் முடிவு செய்ய வேண்டும். நாடு உடனடியாக மூடப்படுவதைத் தவிர வேறு மாற்று வழியில்லை.

இந்த ஆபத்திலிருந்து மக்களைப் பாதுகாப்பது அனைவரினதும் பொறுப்பாகும். அதன் பின்னர் பொருளாதாரத்தை கருத்தில் கொள்ளலாம்.

இந்த நெருக்கடியான நேரத்தில் எரிவாயு விலையை உயர்த்தி, மக்கள் மீது சுமையை சுமத்தும் அரசாங்கத்தின் மனிதாபிமானமற்ற முடிவிற்கு கடும் எதிர்ப்பை வெளியிடுகின்றோம். எரிவாயு விலையை உடனடியாக குறைத்து அதன் மூலம் மக்களுக்கு நிவாரணம் வழங்க வேண்டும்.

தற்போது நாட்டில் நிலவும் உண்மையான நிலையை அரசாங்கம் உடனடியாக வெளிப்படுத்த வேண்டும். போலியான தரவுகளை மக்களுக்கு வழங்குவதை நிறுத்த வேண்டும்.

நாட்டுக்கு உண்மையை வெளிப்படுத்தும் பொறுப்பிலிருந்து அரசாங்கம் தப்பி ஓடக் கூடாது. இந்த பேரழிவை சமாளிக்க அனைவரும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (நி-8)


# கல்யாணமாலை
## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1977இந்து<br>நட்சத்திரம்: ரேவதி<br>கி.பா:17 ¼ செவ் 11 சூரி3 ல்<br>உயரம்:5'9"<br>தகைமை/ தொழில்: லண்டனில் பிறந்தவர், U.K வேலை 15 வருடம்.<br>எதிர்பார்ப்பு:ஆங்கிலஅறிவு முக்கியம். அழகியபெண்<br>தொ.இ: B/3095 | பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை<br>கி.பா: 53 ¼செவ் 5சூரி6 ல்<br>உயரம்:-<br>தகைமை/தொழில்:. தொழில் நுட்ப உத்தியோகத்தர்<br>எதிர்பார்ப்பு:விவாகரத்தானவர்.ஓர் ஆண் குழந்தையுண்டு. வெளிநாடு மட்டும் (UK, சுவிஸ்.ஜேர்மன்)<br>தொ.இ:G/6905 |
| பிறப்பு:1976 இந்து<br>நட்சத்திரம்: பூரம்<br>கி.பா: 9 ¾ செவ் 6 சூரி3 ல்<br>உயரம்: 6'<br>தகைமை/தொழில்:மொழி பெயர்ப்பாளர். பிரான்ஸ்<br>எதிர்பார்ப்பு:வெளிநாடு.உள்நாடு<br>தொ.இ: B/3122 | பிறப்பு:1988 இந்து<br>நட்சத்திரம்:பரணி<br>கி.பா:50செவ் 8 சூரி10 ல்<br>உயரம்:5'3"<br>தகைமை/தொழில்:B.A, MBA, Work-Development Officer<br>எதிர்பார்ப்பு:அரச தொழில்<br>தொ.இ:G/6918 |
| பிறப்பு: 1989இந்து<br>நட்சத்திரம்: சுவாதி<br>கி.பா:15 ¼ செவ்.சூரி 2 ல்<br>உயரம்:5'3"<br>தகைமை/தொழில்: A/L தனியார் வேலை (நெற்கபே)<br>எதிர்பார்ப்பு:அரச உத்தியோகம்<br>தொ.இ: B/3137 | பிறப்பு:1989இந்து<br>நட்சத்திரம்: கேட்டை<br>கி.பா:-செவ்12 சூரி1 ல்<br>உயரம்:5'1"<br>தகைமை/தொழில்:அரச ஆசிரியர்<br>எதிர்பார்ப்பு:அரசவேலை.காரைநகரை சார்ந்தவர் விரும்பத்தக்கது.<br>தொ.இ:G/6943 |
| பிறப்பு:1983 இந்து<br>நட்சத்திரம்: சதயம்<br>கி.பா: 48 செவ்.சூரி 11ல்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: A/L தனியார் கெம்பனிவேலை<br>எதிர்பார்ப்பு:கணனி அறிவு .A/L படித்த பெண்<br>தொ.இ: B/3161 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்:மகம்<br>கி.பா:- செவ் 9சூரி 3 ல்<br>உயரம்:-<br>தகைமை/தொழில்:BA,MA,பேராதனை ஆசிரியர்<br>எதிர்பார்ப்பு:வெளிநாடு மட்டும்<br>தொ.இ:G/6945 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.


## ஐக்கிய அரபு இராச்சியத்திற்கு செல்லும் பணியாளர்களுக்கு விமான நிலையத்தில் பி.சி.ஆர்

(கொழும்பு)

ஐக்கிய அரபு இராச்சியத்திற்கு செல்லும் பணியாளர்களுக்கு நேற்றிலிருந்து கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் Rapid PCR பரிசோதனை மேற்கொள்ளப்படுகின்றது.

இந்த பரிசோதனைகளுக்காக விமான பயணத்திற்கு 4 மணித்தியாலங்களுக்கு முன்னர் வருகை தர வேண்டும் என வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகம் அறிவித்துள்ளது.

ஐக்கிய அரபு இராச்சியத்தின் சுகாதார பிரிவினரால் மேற்கொள்ளப்பட்டுள்ள தீர்மானங்களுக்கு அமைய, அங்கு செல்லும் அனைவரும் கொரோனா பரிசோதனை மேற்கொண்டிருக்க வேண்டும்.

அதற்கமைய, ஐக்கிய அரபு இராச்சியத்திற்கு செல்லும் பணியாளர்களுக்கு, கொரோனா பரிசோதனைகளை மேற்கொள்வதற்கு தேவையான வசதிகளை விமான நிலையத்தில் ஏற்படுத்திக் கொடுத்துள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது. (நி-4)

## சிறைக்கைதிகளை பார்வையிட அனுமதி மறுப்பு

(கொழும்பு)

கொவிட் தொற்றின் தீவிர பரவல் காரணமாக மறு அறிவித்தல் வரை அனைத்து சிறைச்சாலைகளிலும் உள்ள கைதிகளை சந்திக்க பார்வையாளர்களுக்கு அனுமதி வழங்கப்படமாட்டாது என சிறைச்சாலை ஆணையாளர் சந்தன ஏக்கநாயக்க தெரிவித்தார்.

அதற்கமைய, வழக்கு நடவடிக்கை தொடர்பில் கைதிகளை சந்திக்க சட்டத்தரணிகளுக்கு அனுமதி வழங்கப்படமாட்டாது என்றும், சுகாதார வழிமுறைகளின் கீழ் வழக்கு தொடர்பான ஆவணங்கள் மாத்திரம் அவர்களுக்கு வழங்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (நி-4)


**HOTEL வேலைவாய்ப்பு**

வெள்ளவத்தையில் இயங்கும் HOTEL ஒன்றிற்கு WAITER (அனுபவமுள்ள) இறைச்சி மீன் வெட்டக்கூடிய,சமையல் உதவியாளர் அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும் தங்குமிட வசதியுடன் சிறந்த சம்பளம் வழங்கப்படும் - 077 160 5090

(சி-1469)



## அறிவித்தல்

தற்போதைய COVID-19 (கொரோனா) நோய் நிலைமையின் தீவிர பரவல் காரணமாக பக்தர்கள் வற்றாப்பளைக் கண்ணகி அம்மன் ஆலயத்துக்கு வருவதைத் தவிர்த்துக் கொள்ளுமாறு தயவுடன் வேண்டுகின்றோம்.

பரிபாலன சபை
வற்றாப்பளைக் கண்ணகி அம்மன் ஆலயம்

(சி-2523)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சாரதி அனுமதிப்பத்திரத்திற்கான வயதெல்லை அதிகரிப்பு

(கொழும்பு)

**சாரதி அனுமதிப்பத்திரத்தை பெற்றுக்கொள்வதற்கான வயதெல்லையினை 17 இல் இருந்து 18 ஆக அதிகரிப்பதற்கு தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை நடவடிக்கை எடுத்துள்ளது.**

அந்த அதிகார சபையின் தலைவர் முதித்த விதானபத்திரன கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு இதனைத் தெரிவித்துள்ளார்.

17 வயதிற்கு உட்பட்டவர்கள் சிறுவர்களாகவே கருதப்படுகின்றனர். அவர்களுக்கு சாரதி அனுமதிப்பத்திரம் வழங்குவதில் சிக்கல் நிலை உள்ளது.

எனவே, இந்த காரணிகளை கருத்திற் கொண்டு சாரதி அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்வதற்கான வயதெல்லையினை 18 ஆக அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவர் முதித்த விதானபத்திரன தெரிவித்துள்ளார். (நி-8)

# 2000 ரூபாவிற்கு தடுப்பூசி விற்பனை மருத்துவமனை ஊழியர் கைது

(கொழும்பு)

சினோபார்ம் தடுப்பூசிகளை 2,000 ரூபாவுக்கு விற்பனை செய்த குற்றச்சாட்டில் லுனாவ வைத்தியசாலை ஊழியர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் பேச்சாளர் தெரிவித்தார்.

50 வயதான நபர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் கொரோனா தடுப்பூசி செலுத்தும் போது வழங்கப்படும் அட்டையை தயாரிப்பதற்காக பணம் பெற்றுக்கொண்டுள்ளதாக விசாரணையின்போது தெரியவந்துள்ளது.

சந்தேக நபர் மொரட்டுவ பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன், நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பில் மொரட்டுவ பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (நி-8)

# மக்கள் உயிருடன் விளையாடும் கோட்டா

## அநுரகுமார குற்றச்சாட்டு

(கொழும்பு)

கொரோனா தொடர்பான தரவுகளை திரித்து மக்களுடன் ஒரு கொடிய விளையாட்டில் ஜனாதிபதி கோட்டாபய ஈடுபடுவதாக மக்கள் விடுதலை முன்னணி தலைவர் அநுரகுமார திஸாநாயக்க குற்றம் சாட்டியுள்ளார்.

நேற்று முன்தினம் ஜே.வி.பி தலைமை அலுவலகத்தில் ஆசிரியர் ,அதிபர்கள் மற்றும் தொழிற்சங்க கூட்டமைப்பின் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடிய பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதுபோன்ற தொற்றுநோய்களில் துல்லியமான தரவை வெளியிட வேண்டும். எனினும், தரவை மறைக்கவும் வைரஸ் தொற்றை தவிர்க்கவும் ஜனாதிபதி வேலை செய்கிறார்.

அரசு மருத்துவ அதிகாரிகள் சங்கம் மற்றும் கொவிட் ஒழிப்பு குழுவில் உறுப்பினர்களாக உள்ள சுகாதார அமைச்சர் மற்றும் சுகாதார இராஜாங்க அமைச்சர் கடுமையான பயணக் கட்டுப்பாடுகளை விதிக்க வேண்டும் என்ற குறிப்புகள் இருந்தும் ஜனாதிபதி மக்களுடன் ஒரு கொடிய விளையாட்டில் ஈடுபடுகிறார் எனத் தெரிவித்தார். (நி-8)

## சுகாதார வழிகாட்டல்களை

# சட்டமாக்க முடிவு



(கொழும்பு)

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் வெளியிடப்படும் சில சுகாதார வழிகாட்டல்களை சட்டமாக்குவதற்கான வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்படவுள்ளது.

நாளை திங்கட்கிழமை குறித்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்படும் என சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தெரிவித்தார். (நி-8)

# முகக்கவசமின்றி வெளியேற வேண்டாம்

## பொலிஸார் எச்சரிக்கை



(கொழும்பு)

முகக்கவசம் அணியும் சட்டத்தை கடுமையாக அமுல்படுத்த பொலிஸார் முடிவு செய்துள்ளனர்.

அதற்கமைய நாடளாவிய ரீதியில் நேற்று முதல் விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர், சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.


எக்காரணம் கொண்டும் முகக்கவசம் அணியாமல் வீட்டை விட்டு வெளியே வர வேண்டாம் என்று அவர் பொதுமக்களை கேட்டுக்கொண்டார்.

தனிமைப்படுத்தல் மற்றும் நோய் தடுப்புச் சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவிப்பின்படி, பொது இடத்தில் முகக்கவசம் அணியாத நபர் தனிமைப்படுத்தப்பட்ட சட்டம் மற்றும் குற்றவியல் சட்டத்தின் கீழ் தண்டிக்கப்படலாம்.

அத்தகைய குற்றத்தை செய்யும் ஒருவரை பிடியாணை உத்தரவு இல்லாமல் கைது செய்ய சட்ட ஏற்பாடுகள் உள்ளன.

இதனால் வீட்டிலிருந்து வெளியே வரும் போது முகக்கவசமின்றி வர வேண்டாம் என்றும் அவர் தெரிவித்தார். (நி-8)

# மதுரை ஆதீன சுவாமிகளின் மறைவையொட்டி இரங்கல் பகிர்வு



சைவத்திற்கும் தமிழுக்கும் தொண்டு செய்த மதுரை ஆதீனத்தின் 292 ஆவது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ அருணகிரிநாத தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் பரிபூரணம் பெற்றமையையிட்டு இலங்கை வாழ் சைவ மக்கள் சார்பில் பிரார்த்தனை செய்கிறேன்.

யாழ்ப்பாணம் நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீனத்தின் தாய்வீடாகத் திகழ்வது மதுரை ஆதீனம் ஆகும். இந்த ஆதீனம் திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் பாண்டிநாட்டில் தங்கி இருந்த பெருமைக்குரிய இடம் ஆகும். இத்தகைய பக்திச் சிறப்புமிக்க மதுரை ஆதீனத்தின் 291 ஆவது முதல்வரின் ஆசியுடன் 1966 இல் யாழ்ப்பாணத்தில் எமது குருநாதரால் சைவ ஆதீனம் நிறுவப்பட்டது.

அதன் போது ஆதீன முதல்வராக விளங்கிய ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் தனது குருநாதராகிய ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளது பெயரையே எமது குருநாதருக்குச் சூட்டி நல்லை ஆதீனத்தை நிறுவ உத்தரவளித்தார்.

மதுரை ஆதீன முதல்வர் சைவத்திற்காகவும் தமிழுக்காகவும் தொண்டு செய்த பெருந்தகை. சமய நல்லிணக்கம் குறித்து மிகவும் ஆர்வம் கொண்டிருந்ததோடு இலங்கை வாழ் சைவ மக்கள் குறித்தும் அதிக கரிசனை கொண்டு செயற்பட்டார்.

எமது அன்னை ஆதீனத்தின் முதல்வராக 40 ஆண்டுகள் விளங்கி இன்று தனது சிவலோக வாழ்வு பெற்ற குரு மகாசந்நிதானம் அவர்களுக்கு எமது பிரார்த்தனைகளைத் தெரிவிக்கின்றோம்.

**நல்லை ஆதீன முதல்வர்**

சைவசமயத்தினை தென்னகத்தில் நிலைநிறுத்தவும், திருநீற்றின் ஒளி எங்கும் பரவவும் மதுரையில் திருஞானசம்பந்தரால் தோற்றுவிக்கப் பெற்றது மதுரை திருஞானசம்பந்த சுவாமிகள் ஆதீனம்.

இவ் ஆதீனத்தின் 292 ஆவது மகாசந்நிதானமாக விளங்கிய அருணகிரிநாத ஸ்ரீ ஞானசம்பந்த தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் சமயப்பணிக்கு அப்பால் ஆன்மீகப்பணி, அரசியல் பணி, சமுதாயப்பணி, சமயநல்லிணக்கம் என பல வகையிலும் உழைத்ததுடன் குரல் கொடுத்தார்கள்.

எமது சமயத்திற்கு தொய்வு ஏற்பட்டுள்ளது போல ஆதீனத்தின் பரிபூரணமான செய்தி கிடைத்தது. ஆங்கில அறிவுடன் மாற்றுசமயநூல்களின் அறிவு அவரிடம் சிறப்பாக இருந்தமை கண்டு வியந்துள்ளோம். மேலும் இலங்கையில் சைவமும் தமிழும் தழைத்தோங்க தொண்டாற்றியவரும், சிவாகம சேகரம், சிவலிங்கபிரதிஷ்டா விதி உட்பட்ட பல சமஸ்கிருத, தமிழ் நூல்கள் இயற்றி வெளியிட்டுள்ள, எமது யாழ்ப்பாணம் அச்சுவேலி சிவாகமஞானபானு சிவஸ்ரீ ச.குமாரசுவாமி குருக்கள் அவர்களுக்கு "சிவாகம ஞானபானு " எனும் சிறப்புப் பட்டத்தினை பராபவ வருஷம் வைகாசி மாதம் 22 ஆம் நாள் 04.06.1966 இல் ஆதீன ஆதி குருமூர்த்தி திருஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் குரு பூஜை தினத்தில் வழங்கியமையை எண்ணிப்பார்க்கிறோம். மகாசந்நிதானம் அவர்கள் சிவப் பிராப்தி நிலை பெற்றிட அன்பே உருவான பரம்பொருளை வேண்டி இறை பிரார்த்தனையினை நாம் இலங்கையில் இருந்து இந்துக் குருமார் அமைப்பின் சார்பில் செய்கின்றோம்.

**கலாநிதி. சிவஸ்ரீ. கு.வை.க. வைத்தீஸ்வர குருக்கள்.தலைவர், இந்துக் குருமார் அமைப்பு.**

மதுரை ஆதீனம் 292-ஆவது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ அருணகிரிநாத ஞானசம்பந்த தேசிக பரமாச்சார்ய சுவாமிகள் பரிபூரணமடைந்தார்கள். அவர்களின் பிரிவு சைவ உலகுக்கு பேரிழப்பாகும்.

சிறந்த அறிவும் ஆற்றலும் மிக்க சுவாமிகள் சைவசமயத்தின் பாதுகாவலனாக விளங்கியவர். துணிந்து குரல் கொடுப்பவர். தமிழ், ஆங்கிலம், வடமொழிப் புலமைமிக்க சுவாமிகளுக்கு தென்நாட்டில் மட்டுமன்றி வடநாட்டிலும் மிகுந்த செல்வாக்கு இருந்தது. நல்லை ஆதீனம் மதுரை ஆதீன மரபைப் பின்பற்றி ஆரம்பிக்கப்பட்டது. நல்லை ஆதீனத்தின் வளர்ச்சிக்கு மூலமாக அமைந்த மதுரை ஆதீனத்தின் முதல்வரின் சமாதிச்செய்தி மிகவும் கவலை தரும் செய்தியாகும். சுவாமிகள் மதுரைச் சொக்கநாதரின் பாதக்கமலங்களில் பரிபூரணம் அடைந்து சைவ உலகை என்றும் ஆசீர்வதிக்க வேண்டுதல் செய்வோமாக.

**ஆறு.திருமுருகன்.**
**உப தலைவர் அகில இலங்கை இந்துமாமன்றம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராசிபலன்

15.08.2021
ஆடி 30, ஞாயிற்றுக்கிழமை
சப்தமி முற்பகல் 10.05 மணிவரை
சுவாதி காலை 6.43 மணிவரை
விசாகம் பின்னிரவு 5.06 மணிவரை
சுப நேரம் 9.05-10.35 மணிவரை
இராகுகாலம்-4.35-6.05
சந்திராஷ்டமம்: அச்சுவினி

வளவன்


மேஷம்

பொதுவாழ்வில் புகழ்கூடும் நாள், விருப்பங்கள் நிறைவேறும் வாய்ப்புண்டு, சான்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும்.


ரிஷபம்

தன்னம்பிக்கையும் துணிவும் அதிகரிக்கும், அதிகம் செலவாகுமென நினைத்த காரியம் குறைந்த செலவில் முடியலாம், நோயிலிருந்து நிவாரணம் பெறுவீர்கள்.


மிதுனம்

மனதில் இனம் புரியாத சந்தோசம் குடிகொள்ளும், பிள்ளைகளின் நலனில் ஆர்வம் காட்டுவீர்கள், தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம்.


கடகம்

புதிய பொறுப்புக்கள் வந்து சேரலாம், மனதில் நீண்ட நாட்கள் இருந்த பாரம் குறையும், தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் உருவாகும்.


சிம்மம்

நண்பர்கள் சொல்லும் ஆலோசனைகள் உங்களுக்கு நல்லதாக தெரியும், சுபகரியத் தேவைகள் பூர்த்தியாகும் வாய்ப்புண்டு, குடும்பத்தில் சுப நிகழ்வுகள் நடைபெறும் வாய்ப்புண்டு.


கன்னி

விவாதங்களைத் தவிர்ப்பதன் மூலம் வளர்ச்சி காணும் நாள், தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், திறமை மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும் வாய்ப்புண்டு.


துலாம்

குடும்பத்தில் ஏற்பட்ட கருத்து முரண்பாடுகள் அகலும், ஆழ்ந்த சிந்தனையுண்டு, கௌரவமிக்கவர்களின் சந்திப்பு இடம் பெறலாம், போசன சுகமுண்டு.


விருச்சிகம்

வீட்டுப்பிரச்சினைகள் நல்ல முடிவுக்கு வரலாம், தொழில் ரீதியாக எடுத்த முயற்சிகள் கைகூடும், தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள்.


தனுசு

பிரச்சினைகளிலிருந்து விடுபடுவீர்கள், தூர தேசத்திலிருந்து அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம். குடும்பத்தில் மகிழ்ச்சி மேலோங்கும், பிரபலங்களின் சந்திப்புண்டு.


மகரம்

அதிஷ்ட வாய்ப்புக்கள் உங்களை நாடி வரலாம், வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் எண்ணம் உருவாகும், உறவினர்கள், நண்பர்கள் வலிய வந்து உதவுவார்கள்.


கும்பம்

குடும்பத்தினரை அனுசரித்துச் செல்வது நல்லது, பணப்புளக்கம் அதிகரிக்கும் நாள், வீண்பழிகள் அகலும், ஆரோக்கியத்தில் அக்கறை காட்டுவீர்கள்.


மீனம்

கவலைகள் தீர கந்தனை வழிபட வேண்டிய நாள், உடல் நலனில் கவனம் தேவை, கொடுக்கல் வாங்கல்களில் நிதானம் தேவை, பொறுமையால் பெருமை காணும் நாள்.

உன் திறமைகளைப் பிறர் புகழட்டும்.

# உடனடி நடவடிக்கை எடுக்காவிட்டால் நிலைமை கட்டுப்பாட்டை மீறலாம்

## மீண்டும் எச்சரிக்கிறார் உபுல்

**(கொழும்பு)**

**நாட்டில் கோவிட் -19 நோயாளிகளின் எண்ணிக்கையும் கொவிட் உயிரிழப்புகளின் எண்ணிக்கையும் தினமும் அதிகரித்து வருவதாக பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹன எச்சரிக்கை விடுத்துள்ளார்.**



நாட்டின் தற்போதைய நிலைமைக்கு அரசாங்கத்தையோ அல்லது மக்களையோ குற்றம் சொல்ல முடியாது என்றும் தற்போதைய நிலைமைக்கு எதிராக உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும், இல்லையெனில் நிலைமை கட்டுப்பாட்டை மீறலாம் என்றும் அவர் கூறுகிறார்.

தற்போதைய நிலைமை இன்னும் சில நாட்களுக்கு தொடர்ந்தால், மருத்துவமனை அமைப்பு மற்றும் சுகாதார அமைப்பின் திறன் விரைவில் மீறப்படும்.

தற்போதுள்ள தீவிர சிகிச்சை பிரிவு வசதிகள், மருத்துவமனை படுக்கைகள் மற்றும் ஒட்சிசன் திறன் தீர்ந்துவிட்டதாக அவர் சுட்டிக்காட்டினார்.

ஒட்சிசனுக்கான தேவை கடுமையாக உயர்ந்துள்ளது. மருத்துவமனைகளுக்கு ஒட்சிசன் வழங்குவதில் சில இடையூறுகள் ஏற்படலாம்.

தற்போது, கொழும்பு, கம்பஹா மற்றும் களுத்துறை மாவட்ட மருத்துவமனைகளில் உள்ள கோவிட் நோயாளிகளின் திறன் அதிகமாக உள்ளது.

அத்தியாவசிய கடமை இல்லையென்றால், ஒருவர் தனது மற்றும் தனது அன்புக்குரியவர்களின் பாதுகாப்பைப் பற்றி சிந்தித்து, வீட்டை விட்டு வெளியேற வேண்டாம். சுகாதார வழிகாட்டுதல்களின்படி பாதுகாப்பாக செயற்பட வேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (நி-8)

# சுகாதார தொழிலாளர் பிரதேசத்திற்கு முன்னுரிமை வழங்குங்கள்

## பிரதேச சபை உறுப்பினர் கோரிக்கை

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பிரதேசசபை ஊடாக முன்னெடுக்கப்படும் அபி விருத்தித் திட்டங்களில் பிர தேசசபையின் சுகாதாரத் தொழி லாளர்களின் பிரதேசத்திற்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும் என பிரதேசசபை யின் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி உறுப்பினர் வை.ஜெகதாஸ் கோரிக்கை விடுத்துள்ளார்.


அண்மையில் பிரதேச சபையில் இடம்பெற்ற மாதாந்த அமர்வின் போதே அவர் இதனை வலியுறுத்திருந்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்து தெரிவிக்கையில்

சாவகச்சேரி பிரதேசசபையின் அபிவிருத்தி ஒதுக்க நிதியில் கொடிகாமம் மத்தி-முத்து மாரியம்மன் வீதியை அபிவிருத்தி செய்ய முன்னுரிமைப்படுத்தப்பட வேண்டும்.

ஒவ்வொரு மாரி காலமும் சுகாதாரத் தொழி லாளர்கள் குறித்த வீதி ஊடாக பல்வேறு சிரமங்களின்மத்தியில் பயணிக்கின்றனர் என சுட்டிக் காட்டினார்.

உறுப்பினரின் கோரிக்கைக்கு செவி சாய்த்த தவிசாளர் குறித்த வீதியை புனரமைக்க சுமார் 5 மில்லியன் வரை நிதி ஒதுக்க வேண்டி இருப்பதாகவும் எனவே வேறு நிதி மூலங்களினூடாக குறித்த வீதியை புனரமைப்புச் செய்ய நடவடிக்கை எடுப்பதாகவும் உறுதியளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (7-4-6-30)




செஞ்சோலைப் படுகொலை யின் 15 ஆம் ஆண்டு நினை வேந்தல் நிகழ்வுகள் முல்லைத்தீவு - கள்ளப்பாடு, வடக்குப் பகுதியில் அமைந்துள்ள முன் னாள் வடமாகாணசபை உறுப் பினர் துரைராசா ரவிகரனின் மக்கள் தொடர்பகத்திலும் புதுக் குடியிருப்பு பிரதேச சபை உறுப்பினர் சிவபாதம் குகனேசனின் இல்லத்திலும் நேற்று உணர் வெழுச்சியுடன் இடம்பெற்றது.

(படம்:தவசீலன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாலைப் பகுதியில் வெடிபொருள் அச்சம்

## கரைதுறைபற்று பிரதேச சபை உறுப்பினர் சுட்டிக்காட்டு



(அக்கராயன்)

முல்லைத்தீவு கரைதுறைபற்று சாலையில் வெடிப் பொருட்களின் அபாயம் உள்ளதாக கரைதுறைபற்று பிரதேச சபை உறுப்பினர் இ.ஹஜீதரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது. கடந்த 20 நாட்களுக்கு முன்னர் சாலைப் பகுதிக்கு விறகு சேகரிப்பதற்கு சென்ற நபரொருபர் வெடி பொருளில் சிக்கி படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னரே சாலைப் பகுதியில் வெடிப் பொருட்களின் அச்சம் உணரப்பட்டுள்ளது.

சாலைப் பகுதியில் உள்ள வெடிப் பொருட்களை அகற்றி பாதுகாப்பான சூழலை உருவாக்க வேண்டிய பொறுப்பு மாவட்டச் செயலகத்திற்கு உண்டு. வெடிப் பொருட்களின் அச்சுறுத்தலானது கால்நடை வளர்ப்பு, ஏனைய சுய தொழில் முயற்சிகளுக்கு பாதிப்புகளை உருவாக்கி உள்ளது. மேலும் சாலைப் பகுதியில் கால்நடைகளும் அடிக்கடி வெடிப் பொருட்களில் சிக்குவது வழமையாகி உள்ளது எனவும் பிரதேச சபை உறுப்பினர் தெரிவித்தார். (7-4-6-350)

# பணிப்புறக்கணிப்பினை கைவிட்டு பேருந்துகள் சேவையில் ஈடுபட்டன

(அக்கராயன்)

முல்லைத்தீவு மாவட்டச் செயலாளரின் உத்தரவிற்கமைய முல்லைத்தீவு இலங்கை போக்குவரத்து சாலையினரின் போராட்டம் முடிவுக்கு வந்து பேருந்துகள் நேற்று முதல் பணியில் ஈடுபடத் தொடங்கின.

நேற்று அதிகாலை 4 மணியில் இருந்து இலங்கைப் போக்குவரத்து சபை ஊழியர்கள் தமது சாலை யினை மூடி பணி புறக் கணிப்பு போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

முன் அறிவித்தலின்றி இலங்கை போக்குவரத்து சபையினர் போராட்டத்தில் ஈடுபட்டதனால் பேருந்துக்காக காத்திருந்த மக்கள் பெரும் நெருக்கடிகளை எதிர் கொண்டிருந்த நிலையில் மாவட்டச் செயலாளரின் உத்தரவுக்கமைய முற்பகல் 9.30 மணிக்குப் பின்னர் முல்லைத்தீவு சாலையின் இலங்கை போக்குவரத்து சபை யின் பேருந்துகள் பணியில் ஈடுபடத் தொடங்கின.

(7-4-6-350)




# குடிநீர் நெருக்கடி 20 குடும்பங்கள் பாதிப்பு

(அக்கராயன்)

முல்லைத்தீவு கரைதுறைபற்றின் மாத்தளன் கிராமத்தில் குடிநீர்த் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. 20 வரையான குடும்பங்கள் குடிநீரினைப் பெற்றுக் கொள்வதில் நெருக்கடிகளை எதிர் கொண்டுள்ளனர். இந் நிலைமை தொடர்பாக கரைதுறைபற்று பிரதேச சபை உறுப்பினர் இ.ஹஜீதரன் கருத்துத் தெரிவிக்கையில், மாத்தளனில் ஏற்பட்டுள்ள குடிநீர் நெருக்கடியினை தீர்ப்பதற்கு தெரிவு செய்யப்பட்ட ஓரிடத்தில் தாங்கி ஒன்றினை வைத்து முள்ளிவாய்க்காலில் இருந்து குடிநீரினைக் கொண்டு வந்து குறித்த தாங்கியினை நிரப்பி விடுவதன் மூலம் குடிநீர் நெருக்கடியினை எதிர்கொண்டுள்ள குடும்பங்கள் குடிநீரினைப் பெற்றுக் கொள்ளக் கூடிய வசதி ஏற்படும். இது தொடர்பான வேலைத் திட்டத்தினை முன்னெடுக்க உள்ளதாக தெரிவித்தார். (7-4-6-350)



சரவண பாபா நிதியத்தின் ஊடாக கிளிநொச்சி விவேகானந்தநகர் பகுதியில் தெரிவு செய்யப்பட்ட 30 குடும்பங்களை சேர்ந்த கர்ப்பிணி தாய்மார்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களிற்கு கடந்த 04 ஆம் திகதி உலர் உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டன. (படம் :- கிருஷ்ணகுமார்)



மன்னார் மாவட்டத்தில் இயங்கி வரும் டாக்டர் அரசகோன் கிளினிகின் நிதி அனுசரணையில் பசி இல்லா மன்னார் அமைப்பின் மன்னார் மாவட்ட இணைப்பாளர் ஏற்பாட்டில் இரட்டைகுளம் பகுதிகளை சேர்ந்த பாதிக்கப்பட்ட 25 குடும்பங்களுக்கு சுமார் 2500 ரூபா பெறுமதியான பொருட்கள் வழங்கி வைக்கப்பட்டது.

(படம் :- ஜோசப் நயன்)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 100 | 100 | 140 | 100 |
| உருளைக்கிழங்கு | 140 | 170 | 160 | 160 |
| பச்சைமிளகாய் | 180 | 200 | 200 | 200 |
| தக்காளி | 100 | 130 | 120 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 50 | 60 | 50 |
| கோவா | 180 | 170 | 180 | 200 |
| கரட் | 160 | 170 | 180 | 200 |
| பூசணி | 100 | 80 | 90 | 120 |
| புடோல் | 100 | 70 | 70 | 120 |
| வாழைக்காய் | 80 | 70 | 60 | 80 |
| சின்ன வெங்காயம் | 160 | 180 | 200 | 200 |
| பெரிய வெங்காயம் | 100 | 120 | 100 | 120 |
| பாகற்காய் | 250 | 280 | 250 | 200 |
| வெண்டிக்காய் | 50 | 80 | 60 | 120 |
| கருணைக் கிழங்கு | 140 | 160 | 150 | 160 |
| பயற்றங்காய் | 140 | 150 | 80 | 100 |
| லீக்ஸ் | 200 | 240 | 240 | 260 |
| பீற்றூட் | 120 | 100 | 90 | 100 |
| கறிமிளகாய் | 250 | 200 | 220 | 180 |
| முருங்கைக்காய் | 200 | 250 | 200 | 200 |
| போஞ்சி | 250 | 300 | - | 400 |
| கத்தரிதம்புள்ள | 80 | 80 | - | 80 |
| கீரை - 1 பிடி | 60 | 50 | 50 | 60 |
| தேசிக்காய் | 120 | 120 | 120 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 70 | 70 | 60 | 40-70 |
| இராசவள்ளி | - | - | - | 400 |
| வெங்காயப்பூ | 150 | 200 | 180 | 300 |
| முள்ளங்கி | 60 | 70 | 80 | 150 |
| பொன்னாங்காணி | 50 | 40 | 50 | 40 |
| வல்லாரை | 20 | 70 | 20 | 30 |
| ஈரப்பலா | 50 | 60 | 40 | 50 |

# சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபட்ட ஐவர் கைது



(தருமபுரம்)

தருமபுர பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் கடந்த 24 மணிநேர குற்றச் செயல்களை தடுக்கும் நோக்கில் பாதுகாப்பு கடமையில் ஈடுபட்ட பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கு அமைய கல்லாடர் பகுதியில் அனுமதிப்பத்திரம் முரணான வகையில் மணல் ஏற்றிய டிப்பர் இரண்டும் அதன் சாரதிகளும், புளியம்பொக்கணை தருமபுரம் பகுதியில் ஒரு டிப்பரும், கல்மடு பகுதியில் ஒரு உழவு இயந்திரம் அதன் சாரதியும் மற்றும் ஓர் டிப்பர் என்பன கல்மடுபகுதியில் வைத்து கைப்பற்றப்பட்டன.

இதன் போது கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் தருமபுர பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டு மேலதிக விசாரணைகள் நடைபெற்று பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டனர். மேலும் தற்பொழுது சூட்சுமமான முறையில் மணல் வெளி மாவட்டங்களுக்கு கொண்டு செல்லப் படுவதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை தருமபுரம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (7-4-6-100-316)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘தடுப்பு’ என்ற பெயரில் மனித உரிமைகள் அழிக்கப்படுவதை தடுக்க வேண்டும்

## ஐ.நா.கோரிக்கை

(கொழும்பு)

**பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் இலங்கை நிறை வேற்றுவதற்கு எதிர்பார்த்துள்ள புதிய விதிமுறைகளை கடுமையாக விமர்சித்துள்ள ஐக்கிய நாடுகள் சபை அதனை மீளப் பெறுமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் கோரியுள்ளது.**

இந்த வருடம் மார்ச் மாதம் 12ஆம் திகதி, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் வெளியிடப்பட்ட, கடும் அடிப்படைவாத கொள்கைகளிலிருந்து மீட்கும் உத்தரவு தொடர்பிலான வர்த்தமானி விதிமுறைகளானது "முழுமையான துல்லியம் மற்றும் சட்ட உறுதி இல்லாத, கருத்து சுதந்திரம், சித்தாந்தம் மற்றும் மத நம்பிக்கைகளுக்கு இடையிலான ஒரு மோதல்" என ஏழு சர்வதேச மனித உரிமை நிபுணர்களால் ஓகஸ்ட் 9 ஆம் திகதி ஜனாதிபதிக்கு அனுப்பிய கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஐ.நா.வின் விமர்சனங்களுக்கு பதிலளிக்குமாறு ஜனாதிபதியையும் அழைக்கும் கடிதம், அடுத்த ஜெனீவா மனித உரிமை அமர்விற்கு ஒரு மாதத்திற்கு முன்னதாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் சேர்க்கப்படும் புதிய விதிமுறைகள், சட்டத்தின் விதிகளுக்கு இணங்காமல் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட நபர், வழக்கு விசாரணையின்றிய "புனர்வாழ்வு" என்ற விடயமானது மனித சுதந்திரத்தை பறிக்க உத்தியோகபூர்வமாக அனுமதிக்கும் என நிபுணர் குழு கவலை தெரிவித்துள்ளது.

புதிய விதிகளுக்கு அமைய கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் காணாமல் போகும் மற்றும் சித்திரவதைக்கு ஆளாக நேரிடும் என ஐக்கிய நாடுகள் சபை அச்சம் வெளியிட்டுள்ளது.

"அதனைவிட விதிமுறைகள் சட்டப்பூர்வமாக இல்லாமல், "புனர்வாழ்வு" என்ற பெயரில் நபர்களின் சுதந்திரத்தை பறிக்க உத்தியோகபூர்வமாக அனுமதிக்கும்பல விதிமுறைகளைக் கொண்டிருப்பது சர்வதேச சட்டத்தின் கீழ் தன்னிச்சையான தடுப்புக்காவல். நிபுணர்களுக்கு மிகுந்த கவலையாக உள்ளது. " இலங்கை உறுதியளித்த சர்வதேச மனித உரிமைகள் நியமங்களுக்கு அமைய, இந்த விதிமுறைகளை மீள்பரிசீலனை செய்ய அல்லது இரத்து செய்யுமாறு நிபுணர் குழு இலங்கை அரசாங்கத்தை கேட்டுக்கொண்டுள்ளது.

புதிய பயங்கரவாத தடை விதிமுறைகள் தன்னிச்சையாக தடுத்து வைக்கப்பட்டுள்ள தனிநபர்களின் உரிமைகள் மற்றும் சுதந்திரங்களை குறைமதிப்பிற்கு உட்படுத்தும் - குறிப்பாக மத மற்றும் இன சிறுபான்மையினர், மற்றும் அரசியல் கருத்து வேறுபாடுகளை பயனுள்ள உரிய செயல்முறை இல்லாமல் குறைக்க அனுமதிக்கும். பயங்கரவாதத்தை தடுப்பு என்ற பெயரில் இலங்கையில் மனித உரிமைகள் மேலும் அழிக்கப்படுவதை தடுக்கும் நோக்கில் புதிய விதிமுறைகளை ஆராயுமாறு ஐக்கிய நாடுகள் சபை ஜனாதிபதியிடம் கோரியுள்ளது.

அதே சமயத்தில், பயங்கரவாதத் தடைச் சட்டத்தை ஒழிக்க வேண்டும் என ஐக்கிய நாடுகள் சபை பலமுறை வலியுறுத்தியதுடன், அது நடைமுறைப்படுத்தப்படுவதை உடனடியாக நிறுத்தவும் வலியுறுத்தியுள்ளது. மனித உரிமை மீறல்கள் குறித்த தொடர்ச்சியான கேள்விகளுக்கு முறையாக பதிலளிக்குமாறு ஐ.நா நிபுணர் குழு, ஜனாதிபதியிடம் தனது கடிதத்தின் ஊடாக கேட்டுக் கொண்டுள்ளது.

நீடித்த அமைதியையும் நல்லிணக்கத்தையும் அடைவதற்காகவும், பொறுப்புக்கூறல் மற்றும் மனித வளர்ச்சியை உறுதி செய்வதற்காகவும் ஐக்கிய நாடுகள் சபையுடன் இணைந்து பணியாற்றுவதற்கான தனது உறுதிப்பாட்டை ஜனாதிபதிகோட்டாபய ராஜபக்ஷ அண்மையில் அறிவித்தார்.

ஜூன் மாதம் நடைபெற்ற ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் 47ஆவது அமர்வில், ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் மிச்செல் பச்லெட் பயங்கரவாதத்திற்கு எதிராக புதிய சட்டங்களை அறிமுகப்படுத்தி முஸ்லிம்கள் மற்றும் தமிழர்களுக்கு எதிரான நல்லிணக்கத்தை ஆபத்தில் ஆழ்த்தியதாக இலங்கை அரசை கடுமையாக சாடினார். இந்த நிலையில் ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் 48 ஆவது அமர்வு செப்டம்பர் 13 ஆரம்பமாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-8)

# மாவட்ட எல்லைகளில் மேலதிக வீதித் தடைகள்

(கொழும்பு)

மாவட்ட எல்லைகளில் மேலதிக வீதித் தடைகளை இடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்காக பொலிஸாருடன் இராணுவத்தினரையும் கடமையில் ஈடுபடுத்தவுள்ளதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

மாவட்டங்களுக்கு இடையில் பயணிப்போர் தொடர்பில் ஆராயப்படுவதுடன், இந்த நடவடிக்கையை கடுமையாக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, நேற்று முன்தினம் நள்ளிரவு தொடக்கம் இரண்டு வாரங் களுக்கு அமுலாகும் வகையில், மாகாணங்களுக்கு இடையில் போக்குவரத்து தடை செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-8)

# கருவாடு உள்ளிட்ட சில பொருட்களுக்கு விசேட வரி விதிக்கப்பட்டு வர்த்தமானி வெளியீடு

(கொழும்பு)

நெத்தலி, கருவாடு உள்ளிட்ட சில பொருட்களுக்கு விசேட வரி விதிக்கப்பட்ட விசேட வர்த்தமானி அறிவித்தல் நிதி அமைச்சரினால் வெளியிடப்பட்டுள்ளது.



2007ஆம் ஆண்டு 48 ஆம் இலக்க விசேட பொருட்கள் வரி சட்டத்தின் பிரகாரம் இவ்வாறு வரி விதிக்கப்பட்டுள்ளது.

இதன்படி ஒரு கிலோ கருவாடு மற்றும் நெத்தலி ஆகியவற்றுக்கு 100 ரூபாய் வரியும் வெந்தயம் ஒரு கிலோ கிராமுக்கு 50 ரூபாய் வரியும் குரக்கன் மா ஒரு கிலோ கிராமுக்குவிற்கு 150 ரூபாய் வரியும் விதிக்கப்பட்டுள்ளது.

மேலும் கடுகு ஒரு கிலோ கிராமுக்கு 62 ரூபாய் வரியும் உப்பு ஒரு கிலோ கிராமுக்கு 40 ரூபாய் வரியும் பட்டர் ஒரு கிலோ கிராமுக்கு 880 ரூபாய் வரியும் விதிக்கப்பட்டுள்ளது.

இம்மாதம் 12 ஆம் திகதி முதல் எதிர்வரும் ஒரு வருடத்துக்கு அமுலாகும் வகையில் குறித்த வரி விதிக்கப்பட்டுள்ளது என நிதி அமைச்சு குறிப்பிட்டுள்ளது. (நி-8)

# அமெரிக்கா, இந்தியாவை விட இலங்கையில் உயிரிழப்பு அதிகம்

## அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் அதிர்ச்சித் தகவல்

(கொழும்பு)

கொவிட் தொற்றுக்குள்ளாகுபவர்கள் மற்றும் தொற்றினால் பாதிப்பிற்குள்ளாகி உயிரிழப்பவர்கள் வீதத்தில் இலங்கையானது அமெரிக்கா, பிரித்தானியா, சிங்கப்பூர், பூட்டான், நியுசிலாந்து மற்றும் இந்தியா ஆகிய நாடுகளுடன் ஒப்பிடும் போது மிகவும் உயர்மட்டத்திலுள்ளதாக தெரியவந்துள்ளது. அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் தரவு பகுப்பாய்வொன்றின் மூலம் இந்த அதிர்ச்சி தகவல் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

நாட்டில் காணப்படுகின்ற இந்த பாரதூரமான நிலைமையை வெற்றிகரமாகக் கட்டுப்படுத்துவதற்கு தற்போது முன்னெடுக்கப்படுகின்ற கொவிட் பரிசோதனைகளின் அளவு எந்தவொரு சந்தர்ப்பத்திலும் போதுமானதாக அமையாது.

இந்த தரவு பகுப்பாய்வின் ஊடாக கொவிட் பரவலைக் கட்டுப்படுத்தல் தொடர்பிலும் தடுப்பூசி வழங்கல் தொடர்பிலும் தொற்று நோயியல் பிரிவு மற்றும் அரசாங்கம் என்பன ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும் போது மிகவும் கீழ் மட்டத்தில் இருப்பது வெளிப்படுவதாகவும் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது. (நி-8)


GMOA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகில் இதுவரை இல்லாத அளவு வெப்பநிலை கடுமையாக உயர்வு

(வோஷிங்டன்)

**உலகில் இதற்கு முன்னர் ஒருபோதும் இல்லாத வாறு மிகக் கடுமையாக வெப்பநிலை இவ்வாண்டில் கடந்த ஜூலை மாதம் பதிவானதாக அமெரிக்க மத்திய அறிவியல் மற்றும் ஒழுங்குமுறை முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.**



நிலம் மற்றும் கடல் பரப்பின் ஒருங்கிணைந்த வெப்பநிலை கடந்த 20 ஆம் நூற்றாண்டின் சராசரி வெப்ப நிலையான 15.8 டிகிரி செல்சியஸை விட 0.93 டிகிரி செல்சியஸ் உயர்ந்ததாக தரவுகள் கூறுகின்றன.

உலகில் வெப்பநிலை விவரங்கள் கடந்த 142 ஆண்டுகளாகவே பதிவு செய்யப்பட்டு வருகின்றன. எனவே, தட்ப வெப்ப நிலைகளை பதிவு செய்யத் தொடங்கியது முதல் மிக அதிகளவு வெப்பம் 2021 ஜூலையில் பதிவானதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கு முன்னர் கடந்த 2016 ஜூலை அதிக வெப்பமான மாதமாகப் பதிவானது. அதன் பின் அதே சம அளவு வெப்பம் 2019 மற்றும் 2020ஆம் ஆண்டுகளில் பதிவு செய்யப்பட்டது.

பருவநிலை மாற்றத்தின் நீண்ட கால தாக்கமே மோசமான வெப்பநிலை அதிகரிப்புக்குக் காரணம் என நிபுணர்கள் கருதுகின்றனர்.

பருவநிலை மாற்றம் பூமியின் மீது இதுவரை இல்லாத அளவுக்கு பல தாக்கங்களை ஏற்படுத்துவதாக சமீபத்தில் ஐ.நா. வெளியிட்ட அறிக்கையில் எச்சரிக்கப்பட்டது.

அத்துடன், கால நிலை தீவிர மாற்றமானது மனித குலத்துக்கான அபாய எச்சரிக்கை என ஐ.நா. பொதுச் செயலர் ஆன்டோனியோ குட்டரஸ் தெரிவித்தார்

உலகம் ஒருங்கிணைந்து செயல்பட்டால் பருவநிலை மாற்றத்தினால் ஏற்படும் அழிவை தவிர்த்து உலகத்தை காப்பாற்ற முடியும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை புயல்களின் எண்ணிக்கையும் இந்த ஆண்டு வழக்கத்தை விட அதிகமாகப் பதிவானதாக தேசிய பெருங் கடல் மற்றும் வளிமண்டல நிர்வாக அமைப்பு வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (8-7)

**உலகளவில் கொரோனா**
**உயிரிழப்பு :- 4 63 639**
**தொற்று :-207 293 554**
**(நேற்றைய மாலை நிலவரம்)**

# ஒரு மாதத்தில் மட்டும் ஆப்கானில் 1,000 பொதுமக்கள் உயிரிழப்பு

## ஐ.நா. கவலை

(காபூல்)

ஆப்கானிஸ்தானின் வடக்கு பகுதி முழுவதும் தற்போது தலிபான்களின் கட்டுப்பாட்டில் வந்துள்ள நிலையில் கடந்த ஒரு மாதத்தில் மட்டும் நடந்த மோதல்களில் பொதுமக்கள் சுமார் 1,000 பேர் கொல்லப்பட்டுள்ளதாக ஐ.நா. தெரிவித்துள்ளது.

பல்லாயிரக்கணக்கான மக்கள் வன்முறைகளுக்கு பயந்து இடம்பெயர்ந்து வருகின்றனர். கிட்டதட்ட இந்த வாரம் மட்டும் 72 ஆயிரம் குழந்தைகள் அடைக்கலம் தேடி தலைநகர் காபூலுக்கு இடம்பெயர்ந்துள்ளனர்.

இதில் பலர் வீதிகளில் உறங்குவதாக 'சேவ் தி சில்ரன்' என்ற அமைப்பு தெரிவிக்கிறது.

இதனிடையே, ஆப்கானிஸ்தானின் இரண்டாவது மிகப் பெரிய நகரமான கந்தஹாரை தலிபான்கள் கைப்பற்றியுள்ளமை ஆப்கான் அரசாங்கத்துக்கு பெரும் வீழ்ச்சியாக கருதப்படுகிறது. கந்தஹார் நகரம் முன்னொரு காலத்தில் தலிபான்களின் வலுவான கோட்டையாக திகழ்ந்தது என்பது குறிப்பிடத்தக்கது. (8-7)

# ரஷ்யாவில் பேருந்தொன்றில் பாரிய வெடி விபத்து



(மொஸ்கோ)

ரஷ்யாவின் தென்மேற்கு நகரமான வோரோனேஜில் கடந்த வியாழக்கிழமை மாலை பேருந்தொன்றில் ஏற்பட்ட வெடி விபத்தில் இருவர் உயிரிழந்துள்ளதுடன், 17 பேர் காயமடைந்துள்ளதாக அந்நாட்டு செய்தி நிறுவனம் ஒன்று தெரிவித்துள்ளது.

வெடி விபத்தின்போது பேருந்தில் 30 க்கும் மேற்பட்டோர் இருந்துள்ளனர். வெடிப்பு நடந்த சிறிது நேரத்தில் ஒரு பெண் இறந்தார், மற்றொரு பெண் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் காலமானார். காயமடைந்தவர்களில் பலரின் நிலைமை கவலைக்கிடமாக இருப்பதாக அதிகாரிகள் கூறுகின்றனர்.

பெரும் குற்றங்களை விசாரிக்கும் புலனாய்வுக் குழுவின் வோரோனேஜ் கிளை, பஸ்ஸர் பராமரிப்பதில் ஏற்பட்ட கவனக்குறைவே விபத்து ஏற்படக் காரணம் எனக் கூறியது. (8-7)

# சுதந்திர தினத்தை முன்னிட்டு காஷ்மீரில் பலத்த பாதுகாப்பு



(டில்லி)

இந்தியாவின் 75 ஆவது சுதந்திர தினம் இன்று அந்நாடு முழுவதும் கோலாகலமாக கொண்டாடப்படும் நிலையில் அந்நாடு முழுவதும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

அந்த வகையில் காஷ்மீரிலும் பாதுகாப்பு பன்மடங்கு அதிகரிக்கப்பட்டுள்ளது.

"காஷ்மீர் பள்ளத்தாக்கின் பல்வேறு பகுதிகளில் பொதுமக்களிடமும் வாகனங்களிலும் சோதனைகள் மேற்கொள்ளப்படுகிறன.

பயங்கரவாதிகளின் தாக்குதல் முயற்சியை முறியடிக்க பல்வேறு இடங்களில் துணை இராணுவப் படையினரும் பொலிஸாரும் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் அதிகாரிகள் தெரிவித்தனர். (8-7)

# சீனாவில் இரண்டு புதிய டைனோசர் புதை படிமங்கள் கண்டு பிடிப்பு

(பீஜிங்)

சீனாவில் இரண்டு புதிய டைனோசர் இனங்களின் படிமங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

அந்நாட்டின் வடமேற்கு மாகாணமான ஸின்ஜியாங்கில் டெரோசாரஸ் என்ற பறவையின டைனோசரின் முட்டை மற்றும் எச்சங்கள் கண்டறியப்பட்டுள்ளன.

இந்த வகை உயிரினம் சுமார் 65 அடி நீளம் இருந்திருக்கலாம் என கணிக்கப்பட்டுள்ளது. உலகிலேயே மிகப் பெரிய உயிரினமாகக் கருதப்படும் நீலத்திமிங்கலத்தை விட பெரியதாக இருந்திருக்கும் என்று தெரியவந்துள்ளது.

இந்த உயிரினங்கள் 120 முதல் 130 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்திருக்கலாம் என்று ஆய்வில் தெரிய வந்துள்ளது. (8-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு கோடியில் நின்றுகொண்டு காட்டும் பிடிவாதம் ஒருபோதும் நிலைக்காது. நடுநிலையிலிருந்து கடைப்பிடிக்கும் நிதானமே நாளும் உறுதியாய் நிற்கும். – அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## நெருக்கடியான காலகட்டத்தில் மாற்றுவழி பற்றிச் சிந்தியுங்கள்

கொரோனாப் பெருந்தொற்றின் மிக மோசமான பேரவலத்தை நாடு சந்திக்கப் போகிறது என மருத்துவர்களும் பல்கலைக்கழகப் பேராசிரியர்களும் எச்சரிக்கை செய்த வண்ணமுள்ளனர்.

அவர்களின் எச்சரிக்கையை நியாயப் படுத்துவதுபோல கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை நாளாந்தம் அதிகரித்த வண்ணமுள்ளது.

தவிர, கொரோனாவால் ஏற்படுகின்ற மரணங்களும் அதிகரித்துள்ளன.

இந்த அதிகரிப்பு வட மாகாணத்தையும் விட்டுவைக்கவில்லை.

இதேவேளை, கொரோனாத் தொற்றால் இறந்தவர்களின் உடலங்களைத் தகனம் செய்வதில் மிகப்பெரும் இடர்பாடுகளைச் சந்தித்துள்ளதாக யாழ்.போதனா வைத்திய சாலையின் பிரதிப் பணிப்பாளர் மருத்துவர் ஸ்ரீபவானந்தராஜா கூறியுள்ளார்.

ஒரு நாளில் நான்கு உடலங்களை மட்டுமே மின்தகனம் செய்யக்கூடியதாக இருப்பதால், கொரோனாவால் இறந்தவர்களை எரியூட்டுவதிலும் சிக்கல்கள் எழுந்துள்ளன என்பது பிரதிப் பணிப்பாளரின் கருத்து.

ஆக, கொரோனாத் தொற்றால் ஏற்படக்கூடிய இறப்புகள் வடபகுதியில் அதிகரிக்கின்ற சந்தர்ப்பத்தில் உடல் தகனம் ஒரு பெரும் பிரச்சினையாக எழும் என்பது ஏற்றுக் கொள்ளப்பட வேண்டிய விடயமாகும்.

ஆம், யாழ்ப்பாணம் வண்ணை கோம்பயன் மணல் மயானத்தில் உள்ள மின்தகன வசதிகளைத் தவிர, வேறு மின் தகன வசதிகள் இல்லாத நிலையில் மாற்று வழிபற்றிச் சிந்திப்பது அவசியமானதாகும்.

இது விடயத்தில் யாழ்.போதனா வைத்திய சாலை மருத்துவ நிபுணர்கள், யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீடத்தினர் மற்றும் உள்ளூராட்சி சபையினர் கூடி ஆராய்ந்து மின் தகனத்துக்குப் பதிலாகச் செய்யக்கூடிய எரியூட்டல்கள் பற்றி முடிவெடுப்பது அவசியமானதாகும்.

இவை ஒருபுறமிருக்க, கொரோனாத் தொற்றுக் காலத்தில் மக்கள் ஒன்றுகூடுவது தடை செய்யப்பட்டிருப்பின், அந்தத் தடை எங்கும் எதிலும் பின்பற்றப்பட வேண்டும்.

மாறாக ஓர் இடத்தில் மக்கள் கூடுவதை இறுக்கமாகக் கட்டுப்படுத்துவதும் இன்னொரு இடத்தில் மக்கள் தாராளமாகக் கூடமுடியும் என்பதாகவும் இருந்தால், அதில் ஏதேனும் அர்த்தப்பாடுகள் உள்ளதா? என்பதை சம்பந்தப்பட்டவர்கள் சிந்திக்க வேண்டும்.

அண்மையில் யாழ். செயலக மோட்டார் போக்குவரத்துப் பிரிவில் அதிகளவான பொது மக்கள் கூடினர்.

சாரதிய அனுமதிப்பத்திரம் பெறுவது தொடர்பில் அப்படியொரு கூட்டம் கூட வேண்டியதாயிற்று.

எனவே இது விடயங்களில் பொலிஸாரின் ஒத்துழைப்பையும் பெற்று, சாரதிய அனுமதிப் பத்திரத்துக்கான கால எல்லை நீடிப்புகளை வழங்கி, புதிய சாரதி அனுமதிப்பத்திரங்களுக்கான விண்ணப்பங்களை மட்டுப்படுத்தப்பட்ட அளவில் பெற்றுக் கொள்ளுதல் என்ற ஏற்பாட்டைச் செய்வதன்மூலமாக,

பொதுமக்கள் நெருக்கடியாகக் கூடுவதைக் கட் டுப்படுத்த முடியும்.

ஆக, கொரோனாத் தொற்று ஏற்படுத்தியுள்ள நெருக்கடியான இவ்வேளையில் அவற்றைச் சமாளிக்க உரிய தீர்மானங்களை உரியவர்கள் உரிய நேரத்தில் எடுத்தாக வேண்டும்.

# எபிசிலோன் திரிபு நாட்டிற்குள் பரவினால் ஒவ்வொரு நிமிடமும் ஒருவர் இறப்பார்

## அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை

(கொழும்பு)

கோவிட் வைரஸின் திரிபான எபிசிலோன் என பெயரிடப்பட்டுள்ள திரிபு நாட்டிற்குள் பரவினால், ஒவ்வொரு நிமிடமும் ஒருவர் இறப்பார் என அரச வைத்திய அதிகாரிகளின் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

இதனடிப்படையில் ஒரு மணி நேரத்தில் 30 பேர் இறக்கக் கூடும் எனவும் அந்த சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

இந்த புதிய வைரஸை எதிர்கொள்ள மக்களின் உடலில் இருக்கும் நோய் எதிர்ப்பு சக்தி மற்றும் தடுப்பூசி மூலம் வழங்கப்படும் நோய் எதிர்ப்பு சக்தியும் போதாது என கண்டறியப்பட்டுள்ளதாக அரச வைத்திய அதிகாரிகள் ஒன்றியத்தின் தலைவர் மருத்துவர் ருக்ஸான் பெல்லன தெரிவித்துள்ளார்.(ம-3)

### பாராளுமன்றில் கடமையாற்றும்

## 10 பொலிஸாருக்கு கொரோனா தொற்று

(கொழும்பு)

பாராளுமன்ற பொலிஸில் கடமையாற்றும் 10 பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு கடந்த 2 ஆம் திகதி முதல் இதுவரை கொரோனா தொற்றியுள்ளதாக பொலிஸ் தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவர்களில் பெரும்பாலானோர் வீடுகளில் தனிமைப்படுத்தப்பட்டிருந்தபோதே கொரோனா வைரஸ் தொற்றி இருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

இதன் காரணமாக பாராளுமன்றத்தின் பாதுகாப்பை கவனத்தில் கொண்டு பாராளுமன்ற பொலிஸாரை சுகாதார பாதுகாப்பு முறையின்கீழ் கடமையில் ஈடுபடுத்த அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

அத்துடன் விடுமுறையில் சென்றுள்ள பொலிஸ் அதிகாரிகளுக்கு கொரோனா பரிசோதனை நடத்தி, அதன் முடிவுகளுக்கு அமைய பாராளுமன்றத்தில் கடமையில் ஈடுபடுத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது. (ம-3)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 16 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 8.30 மணியிலிருந்து பிற்பகல் 5 மணி வரை

**வவுனியா பிரதேசத்தில்** ஆச்சிபுரம், ஆசிக்குளம், எல்லப்பர் மருதங்குளம், கற்குளம் (சிதம்பரபுரம்), கூமரசங்குளம், மாதா கோவிலடி, மகா மயிலங்குளம், மதுராநகர், கல் நாட் டினகுளம், பெரிய கூமரசங்குளம், சமணங்குளம், சிதம்பரபுரம் பிரதேசங்களிலும் மின் தடைப்படும்.

## கொடிகாமம் நகரில் 17 பேருக்கு கொரோனா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தென்மராட்சியின் கொடிகாமம் நகர்ப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனை முடிவுகள் நேற்று வெளியாகியுள்ளன.

கொடிகாமம் பகுதியில் சந்தை வியாபாரி ஒருவருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டதை தொடர்ந்து கொடிகாமம் சந்தை மற்றும் அதனை அண்மித்த பகுதிகளைச் சேர்ந்த 84 பேருக்கு இரு நாட்களுக்கு முன் பிசிஆர் மாதிரிகள் பெறப்பட்டிருந்தன.

அவற்றின் முடிவுகள் நேற்று வெளியாகியுள்ளன.

அவற்றின் அடிப்படையில் 17 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

கொடிகாமம் சந்தை வியாபாரிகள் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர். (ம-03,60)

### பொலிகண்டிப் பகுதியில்

## போதைப்பொருளுடன் கைதானவருக்கு தொற்று

(யாழ்ப்பாணம்)

யாழ்.பொலிகண்டி பகுதியில் நேற்று அதிகாலை பெருமளவு போதைப் பொருளுடன் கடற்படையினால் 3 பேர் கைது செய்யப்பட்டதுடன் அவர்களில் ஒருவருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.


பொலிகண்டி பகுதியில் நேற்று அதிகாலைகடற்படையேரந்து நடவடிக்கையின்போது சுமார் 4 கோடிக்கும் அதிகமான பெறுமதி உடைய போதைப் பொருளுடன் 3 பேர் கைது செய்யப்பட்டனர்.

அவர்களை நீதி மன்றத்தில் முற்படுத்துவதற்காக நடத்தப்பட்ட அன்டிஜன் பரிசோதனையில் ஒருவருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக சுகாதாரப் பிரிவு தகவல்கள் தெரிவிக்கின்றன.

(ம-3)

(முன்னர் வந்த செய்தி உள்ளே)

## இயேசுநாதரின் திருவாக்கியங்கள்



❖"என்னைப் பின்பற்ற விரும்பும் எவரும் தன்னலம் துறந்து, தம் சிலுவையைத் தூக்கிக்கொண்டு என்னைப் பின்பற்றட்டும்.

❖ஏனெனில், தம் உயிரைக் காத்துக்கொள்ள விரும்பும் எவரும் அதை இழந்து விடுவார் என் பொருட்டும் நற்செய்தியின் பொருட்டும் தம் உயிரை இழக்கும் எவரும் அதைக் காத்துக் கொள்வார்.

❖"என் அன்பார்ந்த மைந்தர் இவரே இவருக்குச் செவிசாயுங்கள்" சிறுபிள்ளைகளுள் ஒன்றை என் பெயரால் ஏற்றுக் கொள்பவர் எவரும் என்னையே ஏற்றுக்கொள்கிறார். என்னை ஏற்றுக் கொள்பவர் என்னைமட்டும் அல்ல, என்னை அனுப்பினவரையே ஏற்றுக் கொள்கிறார்"

❖உங்கள் கை உங்களைப் பாவத்தில் விழச் செய்தால் அதை வெட்டி விடுங்கள். நீங்கள் இரு கையுடையவராய் அணையாத நெருப்புள்ள நரகத்துக்குள் தள்ளப்படுவதைவிட, கை ஊனமுற்றவராய் நிலைவாழ்வில் புகுவது உங்களுக்கு நல்லது

❖உப்பு நல்லது. ஆனால், அது உவர்ப்பற்றுப் போனால் எதைக்கொண்டு அதை உவர்ப்புள்ளதாக்கு [illegible] ருங்கள். ஒருவரோடு ஒருவர் அமைதியுடன் வாழுங்கள். [illegible] திருக்கட்டும்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒரு நாளில் மட்டும் 3,73,661 பேருக்கு தடுப்பூசி

(கொழும்பு)

நாட்டில் நேற்று முன்தினம் மட்டும் 3 இலட்சத்து 73 ஆயிரத்து 661 பேருக்கு கொரோனா தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.


22,939 பேருக்கு அஸ்ட்ரா செனெகா தடுப்பூசியின் முதல் டோஸ் வழங்கப்பட்டதாகவும் 1,086 பேருக்கு இரண்டாவது டோஸ் வழங்கப்பட்டதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் 66,722 பேருக்கு சினோபோர்ம் தடுப்பூசியின் முதல் டோஸ் வழங்கப்பட்டதுடன் 276,476பேருக்கு இரண்டாவது டோஸ் வழங்கப்பட்டது.

இதற்கிடையில், 164 பேருக்கு பைசர் தடுப்பூசியின் முதல் டோஸும் 6,274 பேருக்கு இரண்டாவது டோஸும் செலுத்தப்பட்டது.

# சுய பாதுகாப்பை உறுதிப்படுத்துங்கள்

## பேராசிரியர் திஸ்ஸவிதாரண



(கொழும்பு)

கொவிட் -19 வைரஸ் தாக்கத்தை கட்டுப்படுத்தும் தீர்மானங்கள் உரிய நேரத்தில் முன்னெடுக்கப்படுகின்றதா? என்பது தொடர்பில் சந்தேகம் நிலவுகிறது.

ஆகவே நாட்டு மக்கள் தங்களின் சுய பாதுகாப்பை இயலுமான அளவிற்கு உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். என லங்கா சமசமாஜ கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கொவிட்-19 வைரஸ் தொற்றாளர்களின் எண்ணிக்கையும் பதிவாகும் மரணங்களின் எண்ணிக்கையும் நாளாந்தம் அதிகரித்துள்ளதே தவிர குறைவடையவில்லை. மாகாணங்களுக்கிடையிலான பயணத்தடை தற்போது மீண்டும் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

கடந்த காலங்களிலும் மாகாணங்களுக்கிடையில் பயணத் தடை விதிக்கப்பட்டது. இருப்பினும் அது முழுமையாக சாத்தியப்படவில்லை.

மாகாணங்களுக்கிடையில்பயணத்தடை விதிக்கப்பட்டிருந்த காலத்தில் கொவிட் -19 வைரஸ் தொற்று கட்டுப்படுத்தப்படவில்லை.

நாட்டு மக்கள் பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டார்கள். ஏப்ரல் மாதம்சுகாதார பாதுகாப்பு கட்டுப்பாடுகளை தளர்த்தாமலிருந்திருந்தால் தற்போதைய நெருக்கடியான நிலை ஏற்பட்டிருக்காது.

நாட்டை முழுமையாக முடக்கினால் பொருளாதார ரீதியில் பாதிப்பு ஏற்படும் என கருதப்படுகிறது. நாட்டு மக்கள் உயிருடன் இருந்தால் தான் பொருளாதாரத்தை முன்னெடுத்து செல்ல முடியும் என்பதை பல முறை எடுத்துரைத்துள்ளோம். இருப்பினும் எமது கருத்துக்களுக்கு முன்னுரிமை வழங்கப் படவில்லை.

உங்களின் அருமையை உங்களின் குடும்பத்தார் மாத்திரமே அறிவார்கள். ஆகவே இயலுமான அளவு சுய பாதுகாப்பை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள் எனத் தெரிவித்தார். ( நி-8)

## கைக்குண்டுடன் கைது

(கொழும்பு)

விடுதலைப் புலிகள் அமைப்பின் முன்னாள் உறுப்பினர் வெளிநாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட கைக்குண்டுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

களுவாஞ்சிக்குடி பொலிஸ் விசேட அதிரடிப்படையினருக்கு கிடைத்த தகவலுக்கமைய மட்டக்களப்பு - ஒந்தாச்சிமடம் பிரதேசத்தில் நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின் போது குறித்த நபர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட நபரிடமிருந்து வெளிநாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட கைக்குண்டொன்று கைப்பற்றப்பட்டுள்ளது.

இது தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (நி-8)

## இரத்ததானம் செய்வோருக்கான விசேட அறிவுறுத்தல்கள்

(கொழும்பு)

கொரோனா அறிகுறிகளைக் கொண்டவர்கள், கொரோனா தொற்றாளர்களுடன் நெருங்கிய தொடர்பைப் பேணியவர்கள் மற்றும் கடந்த 3 மாதங்களுக்கு முன்னர் வெளிநாடுகளில் இருந்து வருகை தந்தவர்கள் இரத்ததானம் செய்ய வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர்சந்திப்பின்போது தேசிய இரத்த மாற்று சேவைகளின் பணிப்பாளரான மருத்துவர் லக்ஷ்மன் எதிரிசிங்க இவ்வாறு தெரிவித் தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கொரோனா வைரஸ் இரத்தத்தால் அல்லது அதன் கூறுகளால் பரவுகிறது என்பது குறித்து அறிவியல்பூர் வமாக நிரூபிக்கப்படவில்லை.

எனினும் தொற்றாளர்களிடமிருந்து வைத்திய சாலை ஊழியர்களுக்கு பரவுவதைத் தடுக்கும் வகையிலேயே மேற்படி தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

தற்போதைய சூழ்நிலையில் குருதியைச் சேகரிப்பதில் நாம் சிக்கல்களை எதிர்நோக்குகின்றோம்.

ஆகையால்அனைவரும்அறிவுறுத்தலுக்கமைய இரத்ததானம் செய்ய முன்வருமாறும் அவர் கோரிக்கை விடுத்தார். (நி-8)

## மட்டக்களப்பில் அதிகரிக்கும் கொரோனா அபாயம்

### இறுக்கமாகும் சுகாதார நடைமுறைகள்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த சில தினங்களாக கொவிட் தொற்றாளர்களின் தொகை அதிகரித்துவருவதன் காரணமாக பொதுமக்களை இறுக்கமான சுகாதார நடைமுறைகளை பின்பற்றுமாறு மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் கே.கருணாகரன் கேட்டுக்கொண்டுள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் மரணச்சடங்கு மற்றும் திருமண நிகழ்வுகளில் ஒரே தடவையில் 15 பேர் மட்டுமே கலந்துகொள்ள முடியும் எனவும் ஆகஸ்ட் 31 வரை ஆலயங்களுக்கு செல்லத் தடை எனவும் மாவட்ட கொவிட் செயலணி கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (நி-8)

## உப பொலிஸ் பரிசோதகர் கொரோனாவால் பலி

(கொழும்பு)

நோய்நிலைமை காரணமாக உடுகம வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த உப பொலிஸ் பரிசோதகர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

அவருக்கு மேற் கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனையில் தொற்று உறுதி செய்யபபட்டுள்ளது.

அவர் கடந்த 12 ஆம் திகதி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

உடுகம பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிய 53 வயதுடைய ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். (நி-8)

## சுகாதார அமைச்சர் பதவியில் மாற்றமில்லை

### கொழும்பு ஊடகம் தகவல்



(கொழும்பு)

அமைச்சரவை மாற்றம் விரைவில் இடம்பெறவுள்ளதாக தெரிவிக்கப்பட்ட நிலையில்நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை அந்த மாற்றம் நடைபெற உள்ளதாக கொழும்பு ஊடகமொன்று தெரிவித்துள்ளது.

இந்த அமைச்சரவை மாற்றத்தின் கீழ் ஒரு சில அமைச்சர்களின் பதவிகள் மாற்றியமைக்கப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

எனினும், பரபரப்பாக பேசப்பட்ட சுகாதார அமைச்சர் பதவியில் எந்த மாற்றமும் இல்லை என்று ஜனாதிபதி செயலகத்தை மேற்கோள்காட்டி அந்த ஊடகம் தெரிவித்துள்ளது.

சுகாதார அமைச்சை பவித்ரா வன்னியாராச்சியிடமிருந்து நீக்கிய பின்னர் தற்போதைய பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் மருத்துவர் ரமேஷ் பத்திரண புதிய சுகாதார அமைச்சராக நியமிக்கப்பட உள்ளதாக தகவல் வெளியானது.

எனினும் அவரது பதவியில் மாற்றம் எதுவும் செய்யப்பட்ட மாட்டாது.

மாறாக ஜி.எல். பீரிஸ் வெளிவிவகார அமைச்சராகவும் தினேஷ் குணவர்தன கல்வி அமைச்சராகவும் நியமிக்கப்பட உள்ளனர் என அந்த ஊடகம் மேலும் தெரிவித்துள்ளது.(நி-8)

## 50 சதவீத கட்டில்களை கொவிட் நோயாளர்களுக்கு ஒதுக்குங்கள்

(கொழும்பு)

நாட்டில் உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் அனைத்து அரச வைத்தியசாலைகளிலும் உள்ள மொத்த நோயாளர் கட்டில்களில் 50 சதவீத கட்டில்களை கொரோனா நோயாளர்களுக்கு ஒதுக்குமாறு சுகாதார அமைச்சு சுற்றறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அவசர நோயாளிகள், கர்ப்பிணி தாய்மார்கள் போன்றோருக்கு மேற்கொள்ளப்படும் அறுவை சிகிச்சை மற்றும் சிசேரியன் போன்ற வழமையான நடவடிக்கைகளில் தலையிடாமல் கொவிட் நோயாளர்களுக்கு வைத்தியசாலைகளில் இடம் ஒதுக்குவதற்காகவே நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் அசேல குணவர்தன தெரிவித்தார்.

இதேவேளை, கொரோனா நோயாளர்களுக்கு சிகிச்சையளிக்கும் பிரதான வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று குணமடைகின்ற நோயாளர்களை மேலதிக சிகிச்சைகளுக்காக இடைநிலை வைத்திய சாலைகளுக்கு அனுப்புவதன் மூலம் பிரதான வைத்திய சாலைகளில் தொடர்ச்சியாக புதிய நோயாளர்களுக்கு இடமளிக்கும் வகையில் ஒழுங்குகள் மேற்கொள்ளப்படும் என்று மருத்துவர் அசேல குணவர்தன மேலும் தெரிவித்தார். (நி-8)

## சிங்கப்பூர், இந்தியாவிலிருந்து ஒட்சிசனை இறக்குமதி செய்கிறது இலங்கை

(கொழும்பு)

நாட்டில் கொரோனா தொற்று நோயாளர்களுக்கான ஒட்சிசன் தேவை அதிகரித்துவரும் நிலையில் இந்தியா மற்றும் சிங்கப்பூரில் இருந்து ஒட்சிசனை இறக்குமதி செய்ய அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

தற்போதுள்ள தொற்று நோயாளர் தொகையைச் சமாளிக்கப் போதுமான ஒட்சிசன் தற்போது நாட்டில் கையிருப்பில் உள்ளது.

[illegible] நோயாளர் தொகை அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுவதால் ஒட்சி சனை இறக்குமதி செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளதாக ஔடத உற்பத்தி வழங்கல் மற்றும் ஒழுங்குமுறை இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமன தெரிவித்தார்.

ஒவ்வொன்றிலும் 20 -தொன் கொள்ளளவு கொண்ட 12 பாரிய திரவ ஒட்சிசன் கொள்கலன்களை 6 நிறுவனங்கள் மூலம் இறக்குமதி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை தற்போது கடுமையான அறிகுறிகளுடன் மருத்துவமனைகளில் அனுமதிக்கப்படும் தொற்று நோயாளர்களில் குறைந்தது 30 வீதமானவர்களுக்கு ஒட்சிசன் ஆதரவு தேவைப்படுவதாக சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் ஹேமந்த ஹேரத் தெரிவித்திருந்தார்.

நோயாளிகளின் திடீர் அதிகரிப்பிற்கு டெல்டா திரிபு பரவலே காரணமாக இருக்கலாம் என்று அவர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வல்லிபுரம்...

ஆலய மகோற்சவத்திற்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ள நிலையில், ஆலய தர்ம கர்த்தா சபை மகோற்சவத்தை எதிர்வரும் மாசி மாதத்திற்கு ஒத்திவைத்துள்ளது.

ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி ஆலய மகோற்சவ கால ஏற்பாட்டுக் கூட்டம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை வடமராட்சி வடக்கு பிரதேச செயலாளர் ஆழ்வாப்பிள்ளை சிறீ தலைமையில் இடம்பெற்றது.

குறித்த கூட்டத்தின் முடிவில், இவ்வருடம் மகோற்சவம் நடத்துவதற்கான அனுமதி மறுக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் ஆலய தர்ம கர்த்தா சபையினர், ஆலய நிர்வாகம், திருவிழா உபயகாரர்களுடன் ஆலய வளாகத்தில் நேற்றைய தினம் சனிக்கிழமை கலந்துரையாடல் ஒன்றினை நடத்தி இருந்தனர்.

அக்கலந்துரையாடலின் முடிவில், ஆலய மகோற்சவத்தை அடுத்த வருடம் மாசி மாதம் வரும் பூரணை மகம் நாளிற்கு ஒத்திவைக்க தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. (ம-3)

## சுய கட்டுப்பாடு...

சுயமாகப் பின்பற்றி பொதுமக்கள் ஒத்துழைக்குமாறு இலங்கை பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

பயணக் கட்டுப்பாடுகளை விதிக்க அரசையோ அல்லது அதிகாரிகளையோ கட்டாயப்படுத்தியும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண தெரிவித்தார்.

இலங்கையில் கொரோனா பரவுவதைக் கட்டுப்படுத்த உலக சுகாதார நிறுவனம் பரிந்துரைத்த நடவடிக்கைகள் எதுவும் வெளியிடப்பட்ட புதிய வழிகாட்டுதல்களில் சேர்க்கப்படவில்லை என அவர் சுட்டிக் காட்டினார். (ம-3)

## கிளிநொச்சியில்...

மேற்கொள்ளப்பட்ட அன்ஜன் பரிசோதனைகளில் 43 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

196 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட எழுமாற்றான பரிசோதனையிலேயே குறித்த தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சியில் அண்மைய நாட்களில் பெருமளவான தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

## 160 பேர்...

முன்தினம் அமைந்துள்ளது.

இதுவரையில் கொரோனாத் தொற்றினால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 5 935 ஆக அதிகரித்துள்ளது.

கடந்த 3 நாட்களாக 150ஐக் கடந்த தொற்றாளர்கள் நாளாந்தம் உயிரிழந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

## கொரோனாவால்...

இதேவேளை கிளிநொச்சியில் உயிரிழந்த இருவருக்கு கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் வீதியில் வீழ்ந்து உயிரிழந்த கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபை ஊழியரான விஜயகுமார் கொரோனாத் தொற்றின் பாதிப்பினாலேயே உயிரிழந்துள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் கடந்த 9ஆம் திகதி அனுமதிக்கப்பட்ட மன்னார் கீரி பகுதியைச் சேர்ந்த 77 வயதுடைய வயோதிபர் ஒருவர் கொரோனா தொற்று காரணமாக நேற்று சனிக்கிழமை காலை உயிரிழந்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று மேலும் ஒருவர் கோவிட்-19 தொற்றால் உயிரிழந்துள்ளார். (ம-3,100,285)

## கொரோனா...

அவரின் பதிவில்,

அவிசாவளை மாவட்ட பொது மருத்துவமனையில் கோவிட்-19 சிகிச்சை விடுதி தொடங்கப்பட்ட நாளிலிருந்து நான் பணிபுரிந்து வருகிறேன். மருத்துவர்களாக நாங்கள் பன்னிரண்டு கோவிட்-19 நோயாளர் விடுதிகளில் கடமையாற்றுகின்றோம்.

இப்போது அவை நிரம்பி விட்டன. தினமும் சுமார் 100 கோவிட்-19 நோயாளிகள் நாற்காலிகள் மற்றும் தரையில் சிகிச்சை பெறுகிறார்கள்.

இந்த விகிதத்தில் இன்னும் இரண்டு வாரங்களுக்கு நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரித்தால், ஒட்சிஜன் இல்லாததால் மக்கள் நாற்காலிகளிலும், தரையிலும் முற்றத்திலும் இறந்து விடுவார்கள்.

இந்தப் பதிவை இங்கே நிறுத்துகின்றேன். ஏனென்றால் எனக்குத் தடையற்ற மொழியில் எழுதத் தெரியாது. முடிந்தவரை கவனமாக இருங்கள்! முடிந்தால், எல்லா வேலைகளையும் இடைநிறுத்தி வீடுகளுக்குச் செல்லுங்கள்! மக்கள் ஈக்களைப்போல இறக்கிறார்கள்! என்றுள்ளது. (ம-3)

## யாழ்ப்பாணத்தில்...

செய்யப்பட்டுள்ளது.

அவற்றின் விபரம் வருமாறு,

யாழ்.மாவட்டத்தில் 86 பேரும் முல்லைத்தீவு மாவட்டத்தில் 20 பேரும் கிளிநொச்சி மாவட்டத்தில் 11, வவுனியா மாவட்டத்தில் 07, மன்னார் மாவட்டத்தில் 12 பேரும் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர். (ம-3)

## செஞ்சோலை...

நடத்திய தாக்குதலில் படுகொலை செய்யப்பட்ட சிறுவர்களின் 15ஆம் ஆண்டு நினைவேந்தல் கெடுபிடிகளுக்கும் மத்தியில் வல்வெட்டித்துறையில் இடம்பெற்றுள்ளது.

வல்வெட்டித்துறையிலுள்ள தமிழ்த் தேசியக் கட்சியின் அலுவலகத்திற்கு முன்பாக அதன் பொதுச் செயலாளர் எம்.கே. சிவாஜிலிங்கத்தின் ஏற்பாட்டில் குறித்த அஞ்சலி நிகழ்வு இடம்பெற்றுள்ளது.

செஞ்சோலை படுகொலையின் 15ஆம் ஆண்டு நினைவேந்தலை குறிக்கும் பதாதை முன்பாக சுடரேற்றி, மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டுள்ளது. குறித்த நிகழ்வு தொடர்பான தகவல் கிடைத்து அவ்விடத்திற்கு விரைந்த இராணுவம், வல்வெட்டித்துறை பொலிஸார் நினைவேந்தலை செய்யவிடாது இடையூறு ஏற்படுத்தினர்.

இதனையும் மீறி சுடரேற்றி அஞ்சலி செலுத்தப்பட்டுள்ளது. (ம-3)

*(முன்னர் வந்த செய்தி உள்ளே)*

## காணாமல்போன...

டுள்ளார்.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

மன்னாரைச் சேர்ந்த குறித்த நபர் குருநகரிலுள்ள உறவினர் வீட்டில் தங்கி இருந்த நிலையில் இரு நாட்களுக்கு முன் கடற்றொழிலுக்கு சென்றுள்ளார்.

இந்த நிலையில் அவர்கள் தொழிலுக்கு சென்ற படகு இரணைதீவில் விபத்திற்குள்ளானது. அதில் பயணித்த மூவரில் இருவர் நீந்திக் கரையேறி வீடு திரும்பிய நிலையில் மற்றையவர் காணாமல் போயிருந்தார்.

காணாமல் போனவரை தேடும் பணியினை கடற்படையினர் முன்னெடுத்திருந்தனர்.

இதன்போது அவரது சடலம் மண்டைதீவு கடலில் மிதந்து கொண்டிருந்த வேளை சடலத்தினை கடற்படையினர் மீட்டனர்.

மீட்கப்பட்ட சடலம் பிரேத பரிசோதனைகளுக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளது. (ம-3,104)

## 250...

கோவிட் [illegible]

[illegible] வேகமாக

பரவி வருவதால், அடுத்த சில தினங்களில் இந்த எண்ணிக்கை மேலும் இரண்டு மடங்காக அதிகரிக்கலாம் என அந்த சங்கத்தின் உதவி செயலாளர் மருத்துவர் நவீன் டி சொய்ஸா கூறியுள்ளார்.

இந்த நிலைமையை குறைக்க தடுப்பூசி வழங்கப்பட வேண்டியவர்களின் முன்னுரிமை பட்டியலை தமது சங்கம் முன்வைத்த போதிலும் வெளியிலிருந்து கொடுக்கப்படும் அழுத்தங்கள் காரணமாக அது சரியாக நடப்பதில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தடுப்பூசி வழங்கும் முறையை சரியாக மேற்கொண்டால், சனத் தொகையில் 45 வீதமானவர்களுக்கு நோய் எதிர்ப்பு சக்தியை உருவாக்கி இருக்கலாம். அப்போது இறப்போரின் எண்ணிக்கை குறையும் எனவும் நவீன் டி சொய்ஸா குறிப்பிட்டுள்ளார். (ம-3)

## வவுனியாவில்...

கோவிட் தொற்றாளர்களுடன் தொடர்புகளைப் பேணியோர், வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டோர் மற்றும் எழுமாறாக மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனையின் முடிவுகள் சில நேற்று வெளியாகின.

இதில் 76 பேருக்கு கோவிட் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. (ம-3)

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 14/08/2021
சீட்டிழுப்பு இலக்கம் 1136
வெற்றி இலக்கங்கள்
மீனம் 4 2 3 5 3 1
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 14/08/2021
சீட்டிழுப்பு இலக்கம் 0884
வெற்றி எழுத்து E சுப்பர் இலக்க 18
வெற்றி இலக்கங்கள் 03 11 19 79

மஹஜன சம்பத
திகதி 2021/08/14
சீட்டிழுப்பு இலக்கம் 4536
ஆங்கில எழுத்து 0
வெல்லப்பட்ட இலக்கங்கள் 5 4 5 7 5 9
தேசிய லொத்தர் சபை

கொவிசெத
உத்தியோகபூர்வ முடிவுகள்
NLB
சீட்டிழுப்பு திகதி 14.08.2021
சீட்டிழுப்பு இலக்கம் 2831
ஆங்கில எழுத்து Y
வெற்றி இலக்கங்கள் 05 14 41 56
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி -2021.08.14
சீட்டிழுப்பு இலக்கம் - 566
H 05 46 49 82
ஆங்கில எழுத்து
வெற்றி இலக்கங்கள
தொலைபேசி : 011 460 7800 / 011 232 4324
உத்தியோகபூர்வ முடிவுகளுக்கு : 011 466 9416

சீட்டிழுப்பு வாரம் 088
சீட்டிழுப்பு திகதி 14.08.2021
வெற்றி இலக்கங்கள் 12 21 30
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 1,435,660/=
அபிவிருத்தி லொத்தர் சபை
நீலம், செம்மஞ்சள் நிற டிக்கட்டுகள் முறையே புதன்கிழமை மற்றும் சனிக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அத கோடிபதி
ADA KOTIPATHI
கிழமை: சனிக்கிழமை
சீட்டிழுப்பு இல: 1339
வர்ணம் :
சீட்டிழுப்பு திகதி: 14.08.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 53,444,166
வெற்றி இலக்கங்கள் 12 24 26 61
ஆங்கில எழுத்து Z
அபிவிருத்தி லொத்தர் சபை
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சனிதா
Shanida
கிழமை: சனிக்கிழமை
சீட்டிழுப்பு இல: 8674
வர்ணம் :
சீட்டிழுப்பு திகதி: 14.08.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 33,426,963.60
வெற்றி இலக்கங்கள் 03 13 45 74
ஆங்கில எழுத்து K
ரூ. 500/- பரிசுக்கான விசேட இலக்கம்
அபிவிருத்தி லொத்தர் சபை
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ராசி
சுப்பர் ஜக்பொட் 5,255,739.20/=
திகதி : 14.08.2021
வெற்றி வாரம் : 3225
வர்ணம் :
வெற்றி இலக்கங்கள் 01 02 16 58
விருச்சிகம்
6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
அபிவிருத்தி லொத்தர் சபை
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை 8,300,920/=

SUPER BALL
சுப்பர் போல்
சீட்டிழுப்பு வாரம் 1513
நிறம்
சீட்டிழுப்பு திகதி 14/08/2021
தினம் சனிக்கிழமை
வெற்றி எழுத்தும் இலக்கங்களும் L 05 12 27 41
அடுத்த சுப்பர் ஜக்பொட் 63,465,048.80/=
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
அபிவிருத்தி லொத்தர் சபை

உத்தியோகபூர்வ முடிவுகள்
அபிவிருத்தி அதிர்ஷ்டம்
வெற்றி வாரம் 445
திகதி 14.08.2021
வர்ணம்
ஆங்கில எழுத்து X
வெற்றி இலக்கங்கள் 09 24 36
விதி எண் 9
வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 14,028,860
6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
தொ. பே. : 0112 333 546/47
Web: www.dlb.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உடனடி வேலை வாய்ப்பு

நிர்வாக உத்தியோகத்தர்

விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்

V2 TRAVELS

எமது கிளைகள்
கிளிநொச்சி, சுன்னாகம், சாவகச்சேரி, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, திருகோணமலை, வல்வெட்டித்துறை, கோப்பாய், புத்தூர்

வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 15'000/-
பயிற்சியின்போது - 10'000/-

16/1, மாநகரசபைக்கட்டடம் கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
0777-068-777
v2vacancies@gmail.com
(C-2532)

## UK-STUDENT VISA

லண்டன்

A/L எடுத்த மாணவர்கள் மற்றும் DIPLOMA/DEGREE முடித்த மாணவர்கள் குறைந்த செலவில் இங்கிலாந்தில் கல்வி கற்க இலவச ஆலோசனைகள்/அனுமதிகள் மற்றும் விசா ஏற்பாடுகள். (C-2533)

ENGLISH MEDIUM ல் கல்வி கற்றவர்களுக்கு IELTS தேவையில்லை

WHY UK IS A POPULAR STUDY DESTINATION?

IELTS இலவசமாக கற்பிக்கப்படும் (நிபந்தனைக்குட்பட்டது)

COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
49A,சப்பல் லேன், யாழ்ப்பாணம்.
0777-068-777

## சிங்களம் கற்போம்

பேச்சு மற்றும் எழுத்து (2மாதத்தில் - எளிதான நுட்பங்கள் முறையில்) அரச, தனியார் நிறுவனங்களில் பணிபுரியும் உத்தியோகத்தர்கள் மற்றும் பாடசாலை மாணவர்கள், O/L பரீட்சைக்கு தோற்ற உள்ளவர்கள் அனைவருக்கும் கற்றுத் தரப்படும். (7643)

077 695 4530

## விற்பனைக்கு

ஜேசி இன பசுக்கன்று விற்பனைக்கு உண்டு. (7651)

தொடர்பு
077 663 1742

## வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

## பணிப்பெண் தேவை

கொழும்பு தெகிவளையில் உள்ள மூன்று பேர் கொண்ட வைத்தியரின் வீட்டிற்கு வேலை செய்வதற்கு ஒரு துப்புரவான, நேர்மையான பணிப்பெண் வேண்டும். சம்பளம் 35,000/= இற்கு மேல் (7638)

Dr.தேவா
077 217 7995 | 076 764 6888

## அண்ணா

EXPRESS Courier Service
விரைவுப் பொதிகள் சேவை

3-6 நாட்கள்
லண்டன் 1000/=
070 3305500
077 888 9388
(C-2488)

976,கே.கே.எஸ் வீதி நாச்சிமார்கோவிலடி யாழ்ப்பாணம்

சங்கானை, ஆவரங்கால், நெல்லியடி, சங்கத்தானை | பளை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, முல்லை | மல்லாவி, மன்னார், வவுனியா, கொழும்பு

லண்டன்,பிரான்ஸ்,ஜேர்மனி உட்பட 20 நாடுகளுக்கு மேலதிக கட்டணமாக வரிகள் ஏதும் இல்லை

15,000 /= பெறுமதி வரை காப்புறுதி இலவசம்

உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் பெற்றுக்கொள்ளப்படும்.(யாழ் மாவட்டம் முழுவதும்)

## விரைவு பொதிகள் சேவை

V2 TRAVELS


UK-975 /=Kg

எமது நேரடிக்கிளைகள்
- யாழ்ப்பாணம்
- புத்தூர்
- கோப்பாய்
- நெல்லியடி
- கொடிகாமம்
- மானிப்பாய்
- புதுக்குடியிருப்பு
- சுன்னாகம்
- கிளிநொச்சி
- பருத்தித்துறை
- வல்வெட்டித்துறை
- சாவகச்சேரி

(C-2438)

0768226240 DHL


# கண்ணீர் அஞ்சலி



எமது நிலைய உறுப்பினரும்
முன்னாள் மாவட்ட வைத்திய
அதிகாரியும் வைத்திய மற்றும்
ஆன்மீகத்துறையில்
அரும்பெரும்
சேவை ஆற்றியவருமான
மண்ணின் மைந்தன்

**வைத்திய கலாநிதி**
**சின்னத்துரை**
**கதிரவேற்பிள்ளை**

இறைவனடி சேர்ந்துள்ளார்.
அன்னாரின் ஆத்மா
சாந்தியடைவதாக!

(C-2529)

மேலைப்புலோலி சதாவதானி கதிரைவேற்பிள்ளை
சனசமூக நிலையத்தினர்


## வேலை வாய்ப்பு

சாதிக்கத்துடிக்கும் இளைஞர். யுவதிகளுக்கு அரியதோர் வாய்ப்பு எமது WEC இல் நிரந்தரமான ஓர் வேலையுடன் நிலையான வருமானத்தையும் பெற்றுக்கொள்ள முடியும்.

- 40 வயதிற்கு குறைந்த இருபாலரும் விண்ணப்பிக்கலாம்.
- தகுதிகள் தரம் 10 தொடக்கம் O/L, A/L மற்றும் மேற்தகைமைகள்.

பதவிகள்
- Administative
- Clark
- Stock keeper
- Electeric Repairing
- Distributer
- Accountant


- பயிற்சியின் போது 15,200/= தொடக்கம் 22,000/=
- இலவசமாக தங்குமிட வசதி வழங்கப்படும்.
- வெளிநாட்டு சுற்றுப்பயணங்கள் பெற்றுத்தரப்படும்
- பயிற்சியின் பின்னர் அடிப்படை சம்பளம் (52,000) மற்றும் EPF, ETF, Instrance பெற்றுக்கொள்ளமுடியும்.

(7650)

021 722 3317 | 077 985 8580 | 076 636 0924


# இரண்டாம் ஆண்டு

## நினைவலைகளுடன்



அமரர்
**கந்தப்பு கந்தசாமி**
(சாலை முகாமையாளர், இ.போ.ச - பருத்தித்துறை)

ஈராண்டு மறைந்தாலும்
ஆறாது எம் துயரம்
ஆண்டாண்டு ஆனாலும்
நீங்காது உம் நினைவலைகள்

ஞானாசாரியார் வீதி,
துன்னாலை மேற்கு, கரவெட்டி. (C-2524)
குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்

தோற்றம்
13 – 08 – 1936



மறைவு
14 – 08 – 2021

## திருமதி வள்ளியம்மா சோமாலை

அனுராதபுரத்தைப் பிறப்பிடமாகவும் வள்ளுவர்புரம், விசுவமடுவை வசிப்பிடமாகவும் தற்காலிகமாக தங்காலை வீதி, தும்பளையை வசிப்பிடமாகவும் கொண்டவருமான வள்ளியம்மா சோமாலை நேற்று (14.08.2021) சனிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற மாரியாசாரி - பார்வதி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற லோ. சோமாலையின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற ஜெயராணி, ந. பத்மாவதி, காலஞ்சென்ற சோ. கணேசமூர்த்தி, காலஞ்சென்ற மங்களேஸ்வரன், செ. வசந்தகுமாரி, சோ. இராமதாஸ், காலஞ்சென்ற பாஸ்கரன், காலஞ்சென்ற செல்வமலர் ஆகியோரின் அன்புத் தாயாரும் க. கதிர்காமநாதன், மு. நம்பிராஜலிங்கம், கா. செல்வராசா, க. நாகராணி, ம. நாகம்மா, இ. மோகனா ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (15.08.2021) ஞாயிற்றுக்கிழமை தங்காலை வீதி, தும்பளை என்ற முகவரியில் உள்ள அன்னாரின் இல்லத்தில் காலை 10.00 மணியளவில் இடம்பெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கோரியடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். (C-2530)

தங்காலை வீதி,
தும்பளை.
077 711 4405
தகவல்:-
சோ. இராமதாஸ் (மகன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 15.08.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

விலை : 30.00
Registered as a Newspaper in Srilanka
வலம்புரியின் வாரமலர்

# சங்குநாதம்

நாதம் 314
Viber 076 636 3378
வள்ளுவர் ஆண்டு 2052 15.08.2021 தொலைபேசி : 021 222 3378

## நாவலர் மண்டபத்தை மீளக் கையளியுங்கள்







## நெருக்கடி தரும் வாகன லைசன்ஸ்

உங்கள் சங்குநாதத்தில் அரசியல் - அறிவியல் - ஆன்மிகம் - ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு

**வா**த்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது.

மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறைவணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து பண்டிதர் பரமலிங்கம் எழுந்தார்.

கொரோனாத் தொற்றால் அருமந்த உயிர்கள் காவு கொள்ளப்படுகின்றன.

தவிர, கொரோனாத் தொற்றால இறந்தவர்களை வீட்டில வைத்து அழுது புலம்பி இறுதிக் கிரியைகள் செய்து ஆறுதல் அடையலாமென்றால் அதுவும் முடியாத காரியமாயிற்று.

இதனால் கொரோனாத் தொற்றால இறந்தவர்களின் உறவுகள் தாளா வேதனையில் தவிக்கினம். இந்த நேரத்தில அவர்களுக்கு எங்கட ஆழ்ந்த அனுதாபதங்களைத் தெரிவித்துக் கொள்ளுவம். இவ்வாறு பண்டிதர் கூற, ஆலடியில் இருந்த அத்தனை பேரும் எழுந்து மௌனமாக நின்று அமர்ந்தனர்.

ஆலடியில் சிறிது நேரம் மௌனம் நிலவியது. மௌனத்தைக் கலைக்க விதானையார் விசுவலிங்கம் குரல் கொடுத்தார்.

**விதானையார்:** கொரோனாத் தொற்றால இறக்கிறவர்களின்ர கதி ஒருபுறம்; மறுபுறத்தில் விபத்து, தற்கொலை, மாரடைப்பு என்ற காரணங்களினால் இறக்கின்றவர்களுக்கும் கொரோனாத் தொற்று இருப்பதாக யாழ்ப்பாணப் போதனா வைத்தியசாலை றிப்போட் கூறுவதுதான் இடி விழுந்த கதையாக இருக்குது.

**கங்காணி:** விதானையார் சொல்லுறது நூறுவீதம் உண்மை. கடந்த சில தினங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணம் பண்ணைக் கடலில தவறி விழுந்து இளம் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்தார்.

முதல் நாள் மாலை 5 மணியளவில பண்ணைப் பாலத்திற்குள்ள விழுந்தவற்ற உடல் மறுநாள் காலை 7 மணியளவிலதான் மீட்கப்பட்டது.

ஆக, குறைந்தது 14 மணித்தியாலயம் கடலுக்குள்ள அந்த இளம் குடும்பஸ்தரின் உடம்பு கிடந்திருக்குது.

இருந்தும் அவற்ற உடலில பி.சி.ஆர். பரிசோதனை செய்தபோது கொரோனாப் பொசிற்றிவ் என்ற முடிவு வந்ததாம்.

**சாத்திரியார்:** இதென்ன நாசமறுப்பு. கொரோனா அறிகுறிகள் இருந்தால் உப்புத்தண்ணியால கொப்பளியுங்கள் எண்டு சொல்லுப்படுகுது. ஆனால் இஞ்ச கடல் நீருக்குள்ள 14 மணித்தியாலம் அமிழ்ந்து கிடந்த உடலில கொரோனாத் தொற்றுப் பொசிற்றிவ் எண்டால் அப்ப நாங்கள் என்னதான் செய்யிறது.

சாத்திரியார் இவ்வாறு கூறியதும் ஆலடியில மீண்டும் மௌனம். மௌனத்தைக் கலைக்க சிறாப்பர் கனகசபை குரல் கொடுத்தார்.

**சிறாப்பர்:** விபத்து மரணங்கள் மற்றும் தற்கொலை மரணங்கள் தொடர்பில செய்யப்படுகின்ற பி.சி.ஆர். பரிசோதனைகளைச் சரியாகச் செய்ய வேணும். எழுந்தமானமாக பி.சி.ஆர். பொசிற்றிவ் என்று சொல்லிவிடலாம். ஆனால் உயிரிழந்தவர்களின்ர உறவுகள் அதால படுகின்ற வேதனை கொஞ்சமல்ல.

ஆகையால இவ்விடயத்தில யாழ்ப்பாணப் போதனா வைத்தியசாலை மிக அவதானமாகச் செயற்படவேண்டும் எண்டு இந்த இடத்தில ஒரு தீர்மானத்தை நிறைவேற்றுவம்.

இவ்வாறு சிறாப்பர் கூற, அந்தத் தீர்மானம் ஆலடி மாநாட்டில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

**பண்டிதர்:** வாத்தியார் நாங்கள் இன்னுமொரு தீர்மானத்தை நிறைவேற்ற வேணும்.

**வாத்தியார்:** என்ன பண்டிதர் சொல்லுறியள்.

**பண்டிதர்:** கொரோனாத் தொற்றை அடிப்படையாகக் கொண்டு சைவக் கோயில்களுக்குச் சீல் வைக்கின்ற வேலைகள் நடக்கின்றன. இந்த வேலைகளை சுகாதாரத் தரப்பு அடியோட கைவிடவேணும் என்ற ஒரு தீர்மானத்தை நிறைவேற்ற வேண்டிய தேவையுள்ளது.

பண்டிதர் சொல்லி முடிப்பதற்குள் குறுக்கிட்ட கங்காணி கார்த்திகேயன் அப்படியொரு தீர்மானத்தைக் கட்டாயம் நிறைவேற்ற வேண்டும் என்றார்.

**மூப்பர்:** கொரோனாத் தொற்று ஏற்படுகிற போது அந்த இடத்திற்குச் சீல் வைக்கிற நடைமுறை ஒன்று உள்ளது தானே!

**பண்டிதர்:** மூப்பர் சைவாலயங்களின்ர கிரியை முறைகள், ஏனைய சமயங்களை விட வித்தியாசமானது.

சைவாலயங்களில தெய்வங்களுக்கு அபிஷேகம் செய்து நைவேத்தியம் படைக்கின்ற விதிமுறை உண்டு. இது ஒழுங்கு சீராகப் பின்பற்றப்பட வேண்டும்.

அவ்வாறு நித்திய பூசை கிரமமாக நடக்க வில்லையெண்டால், அந்த விக்கிரகங்களில இருக்கின்ற தெய்வீகம் குறையத் தொடங்கி விடும்.

எனவே மீண்டும் கும்பாபிஷேகம் செய்து தான் அதற்குப் பரிகாரம் தேட முடியும்.

**வாத்தியார்:** அதுமட்டுமல்ல மூப்பர், சைவ ஆலய மகோற்சவங்களும் அப்படித்தான்.

உரிய காலப்பகுதியில கொடியேற்றம், தேர், தீர்த்தம் ஆகிய மகோற்சவத்தை நடத்தாமல் விட்டால், பின்னர் பாலஸ்தாபனம் செய்து மகா கும்பாபிஷேகம் நடத்த வேணும். இது மிகப்பெரிய வேலைப்பாடும் பெரும் செலவும் கொண்டது.

ஆகையாலதான் எப்படியும் திருவிழாவை நடத்தி முடிக்கவேணும் எண்டு ஆலய நிர்வாகங்கள் விடாப்பிடியாக நிற்கினம்.

**சாத்திரியார்:** பண்டிதரும் வாத்தியாரும் சொன்னமாதிரி, ஆகம விதிப்படி ஆலய பூசை வழிபாடுகளை ஒழுங்காகச் செய்யாவிட்டால், அது அந்த ஊருக்கும் மக்களுக்கும் நாட்டுக்கும் கேடு என்று சாஸ்திர நூல்கள் எடுத்துரைக்கின்றன.

நம்பிக்கைதானே வாழ்க்கை. ஆகையால ஆலயங்களுக்குச் சீல் வைக்கிறது என்ற நடைமுறையைக் கைவிட்டு கோயில் பூட்டியவாறு இருக்க வேனும் பூசை நடப்பதற்கு அனுமதி வழங்க வேணும்.

இவ்வாறு சாத்திரியார் கூற, உங்கட இந்தத் தீர்மானத்தை எங்கட சுகாதாரப் பகுதியினர் ஏற்றுக் கொள்ளுவினமோ. விதானையார் விசுவலிங்கம் கேள்வி எழுப்பினார்.

ஏன்? விதானையார் அப்படியொரு சந்தேகம். பண்டிதர் மறுவினா தொடுத்தார்.

**விதானையார்:** ஆடி அமாவாசை விரதத்திற்கு கீரிமலை புனித தீர்த்தத்தில நீராடச் சென்றவர்களுக்கு அன்டிஜன் சோதனை செய்துவிட்டு அவர்களைத் துரத்திவிட்ட சுகாதாரப் பகுதியினர் உங்கட தீர்மானத்தை எப்படி ஏற்றுக்கொள்ளுவினம்.

**மூப்பர்:** உண்மைதான். சைவமக்கள் எண்ட படியால் பிதிர்க்கடனுக்காக விரதம் இருப்பவர்கள் எண்டும் பாராமல், அவர்களுக்கு அன்டிஜன் சோதனை செய்தவியள். ஆனால் பௌத்தர்கள், கத்தோலிக்கர்கள், இஸ்லாமியர்கள் எண்டால், இவர்கள் அன்டிஜன் சோதனை செய்ய ஏலுமோ அல்லது செய்யத் தான் விடுவினமோ.

இவ்வாறு மூப்பர்கூற அதனை வாத்தியார் வைத்திலிங்கம் ஆமோதிக்க, அதற்குத் தனது ஆதரவும் இருப்பது போல ஆலடிப்பிள்ளையார் கோயில் கண்டாமணியும் ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.



**கீரிமலையில நீராடப் போனவியளுக்கு அன்டிஜன் சோதனை செய்தவியளாம்**

ஆதித்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாவலர் கலாசார மண்டபத்தை மீள ஒப்படையுங்கள்

## சமயத் தலைவர்களும் கல்விமான்களும் கூட்டாகக் கோரிக்கை

**நாவலர் கலாசார மண்டபம் இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்திற்குச் சொந்தமானது. அதனை அவர்களிடமே ஒப்படைத்துவிடுங்கள்" என்று சமயத்தலைவர்களும் கல்விமான்களும் யாழ்.மாநகரசபையிடம் கூட்டாகக் கோரிக்கை ஒன்றினை முன்வைத்துள்ளனர். நல்லை ஆதீன முதல்வர், சர்வதேச இந்துமத பீடத்தின் செயலாளர், கலாநிதி ராமச்சந்திர குருக்கள் பாபு சர்மா, யாழ்.பல்கலைக்கழக வேந்தர் பேராசிரியர் சி.பத்மநாதன், யாழ்.பல்கலைக்கழகப் பேராசிரியர் சி.க.சிற்றம்பலம், கலாநிதி ஆறு.திருமுருகன், ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சபையின் தலைவர் சி.தனபாலா ஆகியோர் இந்தக் கோரிக்கையினை முன்வைத்துள்ளனர்.**

### நல்லை திருஞானசம்பந்தர், ஆதீன முதல்வர், ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்



இந்த மண்டபம் அமைக்கப்பட்டதன் நோக்கம் இன்றுவரை நிறைவேறவில்லை. இது நம்மவரே நாவலரின் ஆத்மாவை வேதனைப்படுத்த வைக்கும் விடயம்.

நாவலர் கலாசார மண்டபம் யாழ். மாநகர சபை நிர்வாகத்தினால் பராமரிக்கப்பட்டு வருகிறது.

மண்டபத்திற்கு உரியவர்கள் அதனை ஒரு நல்ல நோக்கத்திற்காகவே மீண்டும் கோருகிறார்கள். உரியவர்களிடமே அதனைக் கொடுப்பது சாலச்சிறந்தது என்று குறிப்பிட்டுள்ளார்.

### ஸ்ரீலஸ்ரீஆறுமுகநாவலர் சபையின் தலைவர் திரு சின்னத்துரை தனபாலா



கிழக்கிலங்கையில் இன்று புனிதமாகப் போற்றப்படும் விபுலானந்தர் நினைவிடம் - இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின், பெருஞ்செலவிலான புனரமைப்பில், ஆன்மிகச் செழுமையோடும் வரலாற்றுப் பெருமையோடும் நிமிர்ந்து நிற்கிறது.

திணைக்களத்திற்கு உரிமமில்லாத இந்த வரலாற்று முக்கியத்துவம்வாய்ந்த இடம் எந்தவொரு எதிர்பார்ப்புமின்றி அந்தத் திணைக்களத்தால் புனரமைக்கப்பட்டமைக்கு - எமக்கு வழிகாட்டிய ஆன்மிகவாதிகளின் நினைவிடங்கள் என்றும் பூஜிக்கப்படவேண்டியவையே என்பது மட்டும்தான் காரணம்.

அவர்களின் உயர்ந்தவெண்ணம் இன்று நம்மனைவருக்கும் பெருமை சேர்த்திருக்கிறது. ஆனால் இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்திற்குச் சொந்தமான நாவலர் கலாசார மண்டபம் வெறும் பெயரோடு மட்டும் கட்டடமாக நிற்கிறது.

இதற்கான தடைக்கல் யார்? இது வரலாற்றுத் தவறு என்பதைச் சம்பந்தப்பட்டவர்கள் புரிந்து கொள்ளவேண்டும். தயவுசெய்து மண்டபத்தைத் திணைக்களத்திடம் ஒப்படைத்துவிடுங்கள் எனக் கோரிக்கை விடுத்துள்ளார்.

### சர்வதேச இந்து மத பீடத்தின் செயலாளர், கலாநிதி ராமச்சந்திர குருக்கள் பாபு சர்மா



இந்துக்கள் சார்பாக முன்வைத்த கோரிக்கையில், நாவலர் பிறந்த மண்ணில் - நாவலருக் குரிய பணிகளை - அவ ருடைய நினைவு மண்டபத்திலே முன்னெடுப்பதற்கு நம்மவரே தடை யாக விருப்பதென்பது. "நம்மவரே என்னைக் கண்ணீர் சிந்த வைத்தனர்" என்று நாவலரே தன் வாயாற் சொல்லி வேதனைப்பட்டதை நினைவு கூர்வதாய் உள்ளது.

உரியமுறையில் அவர் பணிகளை முன்னெடுக்க மண்டபத்தைத் திணை க்களத்திடம் வழங்குங்கள் என்று கேட்டுக் கொண்டார்.

### செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன்



இந்து மாமன்றத்தின் சார்பில் நாவலரின் புனிதமான நினைவு மண்டபம் ஆன்மிகச் சூழலில் நல்ல முறையில் இது வரை பேணப்படவில்லை.

நாவலரின் மண்டபத்தில் அவரது ஒரு புகை ப்படங்கூட இல்லை.

நாவலரின் மண்டபம் என்ன நோக்கத்திற்கு உருவாக்கப்பட்டதோ அவையெதுவும் நிகழ்ந்தேறவில்லை.

தொல்லியல் அரும்பொருட் காட்சியகத்திற்கு வரும் சுற்றுலாப் பிரயாணிகள் இங்கு வைத்து அசைவ உணவுகள் உட்கொள்வது அடிக்கடி நிகழும் விடயம்.

இந்த அவலங்கள் தொடராது மண்டபத்தைத் திணைக்களத்திடம் ஒப்படையுங்கள் என்று தெரிவித்தார்.

### யாழ்.பல்கலைக்கழக வேந்தர் பேராசிரியர் சி.பத்மநாதன்



நாவலரின் எண்ணங்கள் நம்மவர் ஒற்றுமையில் நிலைக்க வேண்டும் என்றார். எங்களுடைய சமூகம் மீண்டெழ நாவலரைப் பற்றுக்கோடாய்க் கொள்ளவேண்டும். உணர்ச்சியோடு பலரும் பேசலாம். அவை செவிக்கு இன்பமூட்டுவதாகவும் அமையலாம்.

தமிழ் வாழவேண்டும் என்று விரும்பினால், தமிழர்கள் இங்கே வாழவே ண்டும். அதுபோல நாவலருடைய எண்ணங்கள் ஈடேறவேண்டும் என்றால் அவருடைய சேவை களுக்குச் செயலூக்கந்தரவேண்டும்.

நம்மவரே அதற்குத் தடையாக இருப்பது நன்றன்று. நாவலர் வழிகாட்டிய பணியைத் தீவிரப்படுத்த இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் முனைப்புக் காட்டுகிறது.

அவர்களின் செயலூக்கத்திற்கு உந்துசக்தியாக இருங்கள். திணைக்களத்திடம் உரியமுறையில் நாவலர் கலாசார மண்டபத்தை ஒப்படைத்து நீங்களும் ஒரு பங்காளியாயிருந்து செயற்படுங்கள். நாவலரின் எண்ணங்களுக்கு நாம் ஒன்று சேர்ந்து வழிசமைப்போம் என குறிப்பிட்டுள்ளார்.

### யாழ்.பல்கலைக்கழகப் பேராசிரியர் சி.க.சிற்றம்பலம்



அற்ப சலுகைகளுக்கு விலைபோகாத செந்நெறியாளன் -ஈழத்திற் தோன்றிய முதல் இயக்கவாதி ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான். அவரது சேவை என்றும் நினைவு கூரப்படவேண்டுமென்ற எண்ணத்தில் உருவாக்கப்பட்ட மண்டபம், இன்றுவரை நின்றுபோன கதையாகவே உள்ளது. வரலாறு ஆரம்பித்த காலம் முதல் நம் இனமே எமது முன்னேற்றத்திற்கான தடைக்கல் என்பதில் மட்டும் இன்றுவரை ஒற்றுமை நிலவுகிறது.

நிபந்தனைகளோடு வழங்கப்பட்ட நாவலர் கலாசார மண்டபத்தை மீளவும் அதற்குரிய அரசநிர்வாகம் நியாயபூர்வமான செயற்பாடுகளை முன்னெடுக்கப் பல தடவைகள் கோரியிருந்தது. இதனால் எந்தப் பலனும் இல்லை. வழங்குவதற்கு எது தடை என்பது புரியவில்லை என்று தனது ஆதங்கத்தினைத் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நித்திலம் தொகுத்து வழங்கும்'

சுகமான விடியல்

வலம்புரியின் மருத்துவச்சுடர் 258

# கல்வியால் உயர்வுபெற

கற்றல் கற்பிதலுக்கான மறுமலர்ச்சி வீழ்ந்து கிடக்கின்ற எமது சமூகத்தை, தேசத்தை தலை நிமிரவைக்கும் என்ற நம்பிக்கை இன்னும் இருந்து கொண்டிருக்கிறது.

கல்வி மேம்பாட்டால் உருவாகும் பொறியியலாளர்களின் திட்டமிலால் எமது தொழில்நுட்பமும் கட்டுமானமும் வளர்ச்சி பெறும். உருவாகும் எமது கணக்கியல் வல்லுநர்களால் பொருளாதாரம் தழைத்தோங்கும், தினந்தோன்றும் எம்மிடையே உருவாகும் மனச்சாட்சி மேம்பட்ட சட்டவல்லுநர்களால் நீதி நிலைபெறும் கல்வியால் உருவாகும் நல்ல மனிதர்களின் வழிகாட்டலில் மனிதத்துவம் மேம்படும், நல்ல வைத்தியர்களின் கைகளில் மக்கள் சுகம் பெறுவர். உருவாகும் விவசாய வல்லுநர்களின் திட்டமிடலால் எம்மண் பொன் கொழிக்கும் பூமியாகும்.

இவை அனைத்திற்கும் எதிர்மறையாக எமது கல்வி நிலையில் ஏற்படும் வீழ்ச்சி எமது சமூகத்தையும் தேசத்தையும் அழித்து விடும்.

கற்றலில் வெற்றிபெற மனதின் புத்தாக்கம் முக்கியமாகி நிற்கிறது. வெற்றிக்காக கற்பது மட்டும் கல்வி அல்ல. தோல்விகளை எதிர்கொள்ள கற்றுக் கொள்வதும் கல்விதான். விழுந்து போகும் ஒவ்வொரு தடவையும் எவ்வாறு எழுகிறோம் என்பதே எமது வெற்றியின் முத்திரை. எமது கஷ்டங்களையும் கஷ்டம் தருபவர்களையும் புன்சிரிப்புடன் கடந்து செல்ல கற்றுக் கொடுப்பதும் கல்விதான்.

எமது பாதையில் குனிந்து போக வேண்டியிருக்கலாம், பணிந்து போக வேண்டியிருக்கலாம், துணிந்து போக வேண்டியிருக்கலாம். ஆனால் எமது முயற்சித் தீ தணிந்து போகாமலிருக்க கற்றுக் கொள்வதே கல்வியின் அடிநாதம்.

எமது முயற்சிகளை இன்றே, இப்பொழுதே ஆரம்பிப்போம். அதற்கான செயற்பாடுகளை தொடங்கிய பின்பே பலவற்றை கற்றுக் கொள்ள முடியும். அப்பொழுதே அதற்கான வாய்ப்புகளும் விரியும்.



கற்றல் முயற்சி என்பது புத்தகக் கல்வி என்று அர்த்தப்படாது. துயரம் வரும் பொழுது எவ்வாறு தெளிவை தேடுவது, உயர்வு வரும்பொழுது எவ்வாறு பணியை தேடுவது, நெருப்பாக கோபம் வரும் பொழுது எவ்வாறு நிதானம் தேடுவது, தடைகள் வரும் பொழுது அதிலே எவ்வாறு உடைவை தேடுவது என பல நடைமுறைகளைக் கற்றுக் கொள்வதும் கல்வியின் படிநிலைகளே!

நேற்றைய இழப்புகளினால் கற்றுக் கொண்டவை இன்றைய முயற்சிகளுக்கும் கற்றலுக்கும் உரம் சேர்க்கும். தானாகக் கிடைத்தால் அது அதிஷ்டம் என்று சொல்வார்கள். முயற்சித்துக் கிடைத்தால் அது வெற்றி. முயற்சித்தும் கிடைக்காமல் போனால் அது அனுபவம். இவை அனைத்துமே எம் உயர்வுக்கு வழிவகுக்கும். கிடைக்கும் வாய்ப்புகளை பயன்படுத்திக் கொள்ள கற்றுக் கொள்வது மட்டும் போதுமானதாக அமைந்து விடாது. புதிது புதிதாக வாய்ப்புகளை உருவாக்கவும் கற்றுக்கொள்வோம். பட்டம் பெறுவதற்காக கற்பதுதான் கல்வி என்று கருதிவிட முடியாது.


வாழ்வில் பட்டுத் தெளிந்து வெற்றிபெற்ற பலர் நமக்கு முன்னுதாரணமாக திகழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளின் பொழுது நல்ல மனிதத்துவப் பண்புகள் உள்ள, திறமையுள்ள, மனோவலிமையுள்ள மனிதர்களை உருவாக்குவது எப்படி? என்பது சம்பந்தமாக சிந்திக்க வேண்டிய தேவை இருக்கிறது.

Dr.சி.சிவன்சுதன்
பொது வைத்திய நிபுணர்

பலருக்கு பயன்படக்கூடிய ஆரோக்கியம் சம்பந்தமான அல்லது உளவியல் சமூகமேம்பாடு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களை thamilhealth@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிப் வைக்கவும். [illegible] பதில்கள் இங்கு பிரசுரிக்கப்படும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஒலிம்பிக் போட்டியின் இறுதியில் சீனாவை வென்று விட்டதே அமெரிக்கா?

**தருஷ் — மீசாலை**

**நாட்டை முடக்கும் எண்ணம் இல்லை என்றால்...?**

நாடு முடங்காது, அதை முடக்கவும் மாட்டோம் என்கிறது அரசு.

நாட்டை முடக்குங்கள். இல்லையேல் இலங்கையில் இறந்த உடல்களை எரிக்க மயானங்கள் உருவாக்கப்பட வேண்டிய நிலை வரும் என்கிறது சுகாதாரத்துறை.

இந்த இரண்டிற்கும் நடுவே மக்கள் அல்லல் படுகின்றார்கள்.

இந்த நிலை எங்கு போய் முடியுமோ தெரியவில்லை. எல்லாம் இறைவன் செயல்.

**சிராஸ் — மானிப்பாய்**

**துரியோதனன்கள் இருக்கும் வரை பாண்டவர்கள் உருவாகிக் கொண்டுதான் இருப்பார்களோ?**

குண்டூசி அளவு இடம் கூட பாண்டவர்களுக்கு இல்லை என்று எகத்தாளமிட்ட துரியோதனன் இறுதியில் மாண்டுபோனதாயே வரலாறு.

ஒரு துரியோதனன் உருவாகினால் ஆயிரம் பாண்டவர்கள் அவதரிப்பர் என்பதே உண்மையானது.

இதைப் புரியாதவரை துரியோதனன்கள் எகத்தாளமிட்டுக் கொண்டு தான் இருப்பார்கள்.

ஆனால் தர்மம் ஒருநாளும் தோற்றதில்லை என்ற வரலாறு அவர்கள் கண்களுக்குத் தெரிவதே இல்லை.

அதனால் இறுதியில் அழிந்து போவதே மிச்சமாகும்.

**சுதன் — குப்பிழான்**

**நல்லாட்சியை சர்வதேசத்திடம் இருந்து காத்த கூட்டமைப்பு இம்முறை இந்த அரசையும் காப்பாற்றுமா?**

ஆட்சியாளர்களைச் சந்தித்து டீல் பேசுவதில் காட்டிய அக்கறையில் கொஞ்சமேனும் தமிழ் மக்கள் மீது காட்டியிருந்தால் இன்று தமிழ் மக்களுக்கு தீர்வு கிடைத்திருக்கும்.

என்ன செய்ய, தார்மும் குருவும் தலைவிதிப்படி என்பார்கள். இதில் தலைமையையும் சேர்த்து விடுங்களேன்.




**ராம்சி — வடமராட்சி**

**நான் ஒரு பெண்ணை விரும்புகின்றேன். என் காதலை எப்படிச் சொல்லலாம் வியாசர் மாமா?**

உயிரைக் காப்பாத்துறதுக்கு மூஞ்சைக்கு மாஸ்க் போட்டு மூக்கு சப்பையாகி காது இரண்டும் செம்மறியாட்டுக்காது போல மாறிப் போச்சு.

கையக் கழுவிக் கழுவி கைரேகையெல்லாம் அழிஞ்சு போகிற கணக்கில் இருக்க உமக்கு காதல் கேட்குதோ.

அட தம்பி, ஏன்ரா உந்த விபரீத வேலை. முதலில் அவவுக்கு பி.சி.ஆர். செய்து ரிப்போட்டக்கேள். அதுக்குப் பிறகு காதல் சொல்லுறதைப் பற்றி யோசிப்பபம். கடைசியில் என்னை மாமாவாவே ஆக்கிட்டீங்க போடா.

**தரன் — வதிரி**


**கொரோனாவின் நிலை என்ன வியாசரே?**

நாட்டை முடக்குங்கள் என்கிறது சுகாதாரத் துறை. நாட்டை முடக்கமாட்டோம் என்கிறது அரசு. நாங்கள் அடங்கமாட்டோம் என்கிறார்கள் மக்கள்.

நான் உங்களை அடக்காமல் விடமாட்டேன் என்கிறது கொரோனா வைரசு. இறுதியில் கொரோனாவே வெல்கிறது.

மயானங்கள் நிறைந்து வழிகிறது. மனிதனின் கதை முடிகிறது.

அன்பு வாசகர்களே!
உங்கள் எண்ணத்தில்
தோன்றிய கேள்விகளை
**021 567 1532**
என்ற இலக்கத்திற்கு
SMS செய்யுங்கள்



துரியோதனன்கள் இருக்கும் வரை பாண்டவர்கள் உருவாகிக் கொண்டுதான் இருப்பார்களோ?

**தமிழ் — யாழ்ப்பாணம்**

**நாட்டில் ஏதோ பாரதூரம் நடப்பது போல உணர முடிகிறது. நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள் மாமா?**

ஒரு நாளைக்கு சராசரி 155 பேர் கொரோனாவினால் இறக்கிறார்கள் எனின் ஒரு மணித்தியாலத்தில் சராசரியாக 6 பேர் இறக்கின்றார்கள்.

இந்த நிலை சாதாரணமான நிலை அல்ல. அதிக சனத்தொகை கொண்ட இந்தியாவில் கூட இவ்வாறான இறப்பு விகிதம் பதிவாகவில்லை.

இந்தப் போக்கு இன்னும் இறுக்கத்தை ஏற்படுத்தும் என எச்சரிக்கின்றது சுகாதாரப் பிரிவு.

இப்பொழுது இருக்கும் ஒரே தீர்வு, எமது பாதுகாப்பு எமது கையில் என்பது மட்டுமே.

**சிந்து — யாழ்ப்பாணம்**

**ஒலிம்பிக் போட்டியின் இறுதியில் சீனாவை வென்று விட்டதே அமெரிக்கா?**

சீனா- அமெரிக்காவின் அதிகாரப்போட்டி வலுத்துக் கொண்டே செல்வதை அவதானிக்க முடிகிறது.

சீனாவின் உச்ச வளர்ச்சியை அமெரிக்கா விரும்பவில்லை என்பது தெட்டத் தெளிவாகத் தெரிகிறது.

சீனாவும் அமெரிக்காவை மட்டுமல்லாமல் உலக நாடுகளையும் சீண்டும் அளவில் செயற்பட்டுக் கொண்டிருக்கிறது.

இதற்கிடையில் அமெரிக்கா கொரோனா உருவாக்கம் என்கின்ற விடயத்தைக்கையில் பிடித்திருக்கிறது.

என்ன ஆகும் என்பதை பொறுத்துத் தான் பார்க்க வேண்டும்.

**சிவன் — வதிரி**

**உங்களுக்கு என்னப்பா வியாசரே அலுவலகத்துக்குள் கண்ணாடி அறைக்குள் பாதுகாப்பாக இருக்கின்றீர்கள் போல?**

கண்ணாடி அறை பாதுகாப்பு என்பது வெள்ளையாய் இருப்பவன் பொய் சொல்லமாட்டான் என்பது போல இருக்கிறது சிவன்.

முகக்கவசத்தை கழற்றாமல் தேவையின்றி மூக்கு , கண் , வாய்க்குள் விரல்களை வைக்காமல் அடிக்கடி கைகளை திரவமிட்டு கழுவினால் அதுவே பூரண பாதுகாப்பான விடயம்.

என்னப்பா புரிகிறதா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவள்...



சந்தனத்தில் சாறு பிழிந்து
பொன் வதனத்தை அலங்கரிப்பாள்
ஒற்றை நிலவுபோல்
எப்போதும் நெற்றியில்
குங்குமம் குதூகலிக்கும்
அவள் சேலைக்கு
அவளே சீதனம் தான்

நாணுவாள்
நவினம் செத்துவிடும்
குழைவாள்
குழந்தமை கூத்தெடுக்கும்
பேசினாள்
இசை பெயர்த்து விழும்
புதிராய் சிரிப்பாள்- அதுவும்
அரிதாய் சிரிப்பாள்
பூவை நிகர்ப்பாள்

அபூர்வ பறவையாய்
அன்றாடம் தோன்றுவாள்
ஆனந்தம்கூட்டிப் பின்
அந்திக்குள் மறைந்திடுவாள்

பிரகாசன், வள்ளுவர்புரம்

# சூமும் நாமும்



சூமிலும் வைபரிலும் வட்ஸ் அப்பிலும்
கல்வியைத் தொடர்க எனக் கூற
நாமும் கையறு நிலையில் நின்றோம்
"கட்டாயம் எல்லோரும் கலந்து கொள்ள வேண்டும்
விட்ட அலகுகள் மீண்டும் கற்பிக்கப்படாது" என்ற
எங்கள் ஆசிரியரின் கண்டிப்பான கட்டளையை
அம்மா எப்படியோ அறிந்து கொண்டாள்
மறுநாள் என் கையில் புதியபோன் ஒன்றைத் தந்த
அம்மாவின் காதுகளில் தோடுகள் காணாமல் போயிருந்தன

நகரத்தை மட்டும் வைத்து
இணையக் கல்வியைத் திட்டமிடும்
எல்லோரும் எங்கள் ஊரின் உயரத்தையும்
கொஞ்சம் பாருங்கள்
பக்கேஜ் என்றனர், படு மலிவு என்றனர்
நிக்காமல் வேலை செய்யும் நிஜமாக என்றனர்
ஆனால் சிக்னலோ சுத்தும் சிலவேளை சுழலும்
விக்கும் பலவேளை விலகும் பத்து மணிக்கு முன்
பார்க்கவே முடியாது பரிதவிக்கும்
அடுப்புப் புகட்டின் மேலும் வீட்டு முகட்டின் மீதும்
வயல்வெளி பூவரசு மேலும்
அயல்வீட்டின் ஆவரசு மீதும் என
ஏறி ஏறியே போனோடு போராடுகிறோம் நிதமும்

என் கையிலுள்ள போனைத் தடவும் ஒவ்வொரு முறையும்
தோடுகளற்ற அம்மாவின் காதுகள்
கண்முன்னே வந்து போகின்றன
ஆனாலும் காண்டாவனத்தில் கருகும்
பத்தினி வேம்பைப்போல
மீண்டும் துளிர்ப்போம் எனும்
நம்பிக்கையோடு காத்திருக்கிறோம்...

போர் சதுராடிய காலத்தில் எம் அப்பா போய் முடிந்தார்
ஆயினும் நம் அம்மா தோட்ட
வேலை செய்து எங்களை மீட்டாள்
புல்லுப் பிடுங்குதல், மிளகாய் ஆய்தல்,
எள்ளு வெட்டுதல்,
எரு அள்ளுதல் எனச் சொல்லிய வேலையெல்லாம்
செய்தே நல்லாக நம்மை வளர்க்கின்றாள்

கொரோனா வந்து மரண பயத்தைத் தந்தபோதுதான்
வராத துன்பமெல்லாம் வந்தது
கஞ்சிக்கும் கூடக் காலம் நம்மை
வஞ்சிக்கும் நிலையைத் தந்தது
உரமில்லை, அடிப்பதற்கு மருந்தில்லை
ஆதலால் அம்மாவுக்கு வேலையுமில்லை
என்றான்து எம் நிலைமை

சென்ற முறை தேர்தல் காலம் ஆகையால்
நின்ற இடத்திற்கே வரிசை கட்டி வந்து
மாவும் சீனியும் அரிசியும் பருப்புமென நாலும் தந்த
பலரை இம்முறை காணமுடியவில்லை

தி.சாந்தகுமார்

# மௌனத்தின் தேடல்- 533



# உயர்ந்த கரங்கள்

ஏய் மனிதா!
கைகூப்பிக் கடவுளைத் தொழுதிடும்
உன் கரங்களை விட
இப்படிக் கைநீட்டி
இயலாத ஏழைகளுக்கு நீ
பிச்சையிடும் கரங்களே
உலகில் என்றும் உயர்ந்தது

சுப்பிரமணியம் ஜெயரூபன்
பருத்தித்துறை.

# கொடுமையில்...

கொடுமையில் கொடுமை
இளமையில் வறுமை
நிலாவைக் காட்டி உணவு ஊட்ட
தாயும் இல்லை தந்தையும் இல்லை
சிந்தைக்கெடுப்பீா
இச்சிறாரின் பசிக்கோ
கல்விப் பாதை காட்ட
விளக்காவீரே
விழிப்புடன் வாழ வகுப்பீராமே

தவகந்தன், தாவடி

# பாரியாய் வாழு

தேவைக்கதிகம்
தேடிய சொத்தும்
திருடன் கையில்
அகப்பட்ட பொருளும்
திருட்டே ஆயின் மனிதா
திருந்து பசிக்கு இடுவாய்
பரகதி அடையும் பக்குவம்
பாருக்கு பாரியாய் வாழு

கார்வண்ணன்
காவலூர்

# பிரமிப்பு

சோகம் தொடர்ந்தாலும்
சோர்ந்து போகாமல்
பெரும்பாலோரிடம்
அருகிக் கருகிப் போகும்
பூப்போன்ற மலரும்
புன்சிரிப்பு முகமும்
இன்னிசையை வெல்லும்
இனிய குரல் வளமும்
உங்களிடம் குறையாது
குறையின்றியிருப்பது
பரமன் கொடுத்த கொடையா!
பரம்பரை வழிச்சொத்தா!
இப்பரம ரகசியத்தை
பகிரங்கப்படுத்தாமல்
என்னிடத்தில் பகர்ந்தால்
இனிய கவிதை மூலம்
இவ்வுலகும் புனிதமாகும்
பிரபஞ்சமும் வியந்து
பிரமித்துப் பார்க்கும்

க.சாரங்கன்
சாவகச்சேரி.

# மௌனத்தின் தேடல்- 534



அன்பு வாசகர்களே உங்கள் மனதில் தோன்றும் கவிதை, வியாசர் பதில்களை
ஆசிரியர் மௌனத்தின் தேடல்
வலம்புரி- சங்குநாதம்
இல.03,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்

# இறைவனாய் ஆவீா

கோயில் உண்டியலில் கொட்டும் பணத்தால்
பாயில் படாமலா பரகதி அடைவீா
இறை எல்லாம் உள்ளது நீ இடல் வேண்டாம்
ஏழைக்கு இரங்கு இறைவனாய் ஆவீா

வைகதன், கொக்குவில்

# ஞானம்

குடிப்பழக்கம், புகைப்பழக்கம்
உடல் நலத்திற்கு பெரும் கேடென்று
அறிவுரை பகர்ந்தாலும் நடைமுறையில்
கடைப்பிடிப்பதில்லை
கடைசிக்காலத்தில் சுடலை ஞானம்

க.நாகராசா, சாவகச்சேரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தள்ளிப் போகும் தமிழரின் தீர்வு தமிழ் தலைமை செய்யவேண்டியது என்ன!

**ஆயுதப் போராட்டம் மௌனிக்கப்பட்டு ஒரு தசாப்தம் கடந்து விட்டது. ஆனால் தமிழினத்திற்கான அரசியல் தீர்வு என்பது எட்டாக் கனியாகவே உள்ளது. இதில் எங்கு தவறு உண்டென்பதை கண்டு கொள்ள வேண்டிய நேரம் இதுவே.**

எங்கு உரிமை தொடர்பில் பேசப்படுகிறதோ அங்கு ஒரு சாராரின் உரிமைகள் மறுக்கப்படுகிறது என்ற முடிவுக்கு வர முடியும்.

அந்தவகையில் உரிமை கேட்டுப் போரிட்ட தமிழினம் பட்ட துன்பங்கள் சொல்லி மாளாதவை.

தமது உரிமைகள் மறுக்கப்படுகிறன்றன. அதற்கு தீர்வு கேட்டதும் அது பயங்கரவாதமாகப் பார்க்கப்பட்டதும் அதன் முடிவு பல்லாயிரம் உயிர்களை காவு கொண்டதுமாக முடிவு அமைந்தது.

இதில் வேடிக்கை என்னவெனின், பயங்கரவாதம் அழிக்கப்பட்டதாக அறிவித்து ஒரு தசாப்தம் கடந்துவிட்ட நிலையிலும் தமிழருக்கான தீர்வென்பது கிடைத்தபாடாய் இல்லை.

ஏதோ தமிழினம் தீண்டத்தகாத இனமாக ஆட்சியாளர்களால் பார்க் கப்படுவது கொடுமையிலும் கொடுமை.

ஆட்சி மாற்றங்கள் மாறி மாறி நடைபெற்றாலும் அவை பெரும்பான்மைகளைச் சார்ந்தவையாக இருப்பதும் பெரும்பான்மை சார்ந்து ஆட்சியாளர்கள் முடிவெடுப்பதுமாக நிலை இருக்கிறது.

தமிழ் அரசியல் தலைமை என்பது வெறுமனே மழைகால சில் வண்டுகள் போல தேர்தல் காலங்களில் மட்டும் சலசலப்பவையாக இருக்கிறதே தவிர, தமிழ் மக்களுக்கு தீர்வைப் பெற்றுத் தருவதில் இறுக்கமான நடைமுறைகளைக் கையாள்வதாகத் தெரியவில்லை. மாறாக அவர்கள் ஒன்றில் அதிக இறுக்கத்தையோ அல்லது அதிக இளகல் தன்மையையோ கையாளும் போக்கினை அவதானிக்க முடிகிறது.

நல்லாட்சி காலத்தில் எதிர்க்கட்சி ஆசனத்தில் அமர்ந்து கொண்டு எதற்கும் தலையாட்டும் பொம்மையாய் இருந்ததும் ராஜபக்ஷ ஆட்சிபீடம் ஏறியதும் இறுக்கமான, எதற்கும் எதிர்ப்பு வெளியிடும் நிலையினை நாம் கவனிக்கலாம்.


தமிழர்களுக்கான தீர்வை பெரும்பான்மை அரசுகள் வழங்காததற்கு இதுவும் ஒரு காரணமாக அமைந்துள்ளது.

வெறும் சுய நல அரசியலையே நடத்துகின்றனரோ எனும் எண்ணம் தமிழ் மக்களின் மனங்களில் எழ ஆரம்பித்துவிட்டது உண்மை. கடந்த பாராளுமன்றத் தேர்தலில் தமிழ் மக்களின் மனநிலையை நன்கு உணரக்கூடியதாக உள்ளது. நீதியரசர் சி.வி.விக்கினேஸ்வரன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், கஜேந்திரன் ஆகியோரின் பாராளுமன்ற பிரவேசம் இவற்றையே எடுத்தியம்புகின்றது.

நிலைமை இதுவாக இருக்கையில் தமிழினத்திற்கான அரசியல் தீர்வு விடயம் தொடர்பில் கவனம் செலுத்த வேண்டியது காலத்தின் தேவையாகும்.

இது கொரோனாக் காலம். நாடு கொரோனாவின் கோரப்பிடிக்குள் சிக்குண்டு சின்னாபின்னப்படுகின்றது.

இந்த நேரத்தில் தமிழினத்திற்கான அரசியல் தீர்வு விடயத்தைப் பற்றிப் பேசுவதா என நீங்கள் முணுமுணுப்பது புரிகிறது.



ஆம் கொரோனாவின் உச்சம் இலங்கையின் தற்போதைய நிலை படுமோசமானதாக அமைந்துள்ளது.

நாளொன்றிற்கு மூவாயிரம் தொற்றாளர்கள், 150+ இறப்புக்கள், வைத்தியசாலைகளில் இடம் இல்லாத நிலை, புதிய புதிய பல கொரோனாக் கொத்தணிகள் கொரோனாவைக் கட்டுப்படுத்த முடியாமல் அரசு திக்குமுக்காடுகிறது. பொருட்களின் விலை என்றுமில்லாவாறு அதிகரித்துள்ளதுடன் வேலையின்றி மக்கள் அல்லாடுகின்றார்கள்.

கொரோனாத் தொற்றுள்ளவர்கள் குறைவாயும் தொற்றில்லாதவர்கள் அதிகமாயும் இருந்த காலம் மாறி கொரோனா தொற்றில்லாதவர்கள் அரிது என்ற இக்கட்டான ஆபத்து மிகுந்த கடுமையான நிலை இப்போது உள்ளது. உயிரைக் காப்பாற்றினால் போதும், உயிர் வாழ உணவு கிடைத்தால் போதும் என்ற மனநிலைக்கு மக்கள் வந்துவிட்டனர்.

ஆம், பெரும்பான்மை மக்களான சிங்கள மக்கள் தற்போது அனைத்தையும் உணர்ந்தவர்களான மனநிலையில் உள்ளனர்.

அடடா கண்ணுக்குத் தெரியாத இந்த வைரசு கத்தியின்றி, இரத்தமின்றி மகாபாரத்தில் அருச்சுனனுக்கு பகவத் கீதையை உபதேசித்த கண்ணனைப் போல சிங்கள மக்களுக்கு பலவற்றை உபதேசித்துள்ளது. நாடென்ன நாடு இன்று இருப்பவர் நாளை இருக்கமாட்டார். இறந்தாலும் உறவுகள் கூடி அழுது புலம்பிட முடியாமல் ஒரு பொலித்தீன் கவருக்குள் மனித வாழ்க்கை அடங்கி விடுகிறது என்ற தத்துவத்தை உணர்ந்து கொண்டிருக்கின்றார்கள்.

இந்த நேரத்தில் தமிழர்களுக்கான தீர்வை வழங்க வேண்டும் என்ற மனநிலையும் அவர்களுக்கு வந்திருக்கும். அத்துடன் பயங்கரவாதத்தை அழித்தொழித்து விட்டதாய் சிங்கள மக்கள் மனங்களில் உச்சத்தில் இருந்த ராஜபக்ஷ அரசுக்கு எதிராக பல எதிர்ப்புகள் எழ ஆரம்பித்துவிட்டதை உணர முடிந்துள்ள இவ்வேளையில் நாம் நமக்கான தீர்வை பெற்றுக் கொள்வது சாலச் சிறந்ததாகும்.

எனவே, இதை எமது தமிழ்த் தலைமை பற்றிப் பிடித்து சர்வதேசத்தின் அனுசரணையுடன் தமிழருக்கான தீர்வைப் பெற்றுத் தருவதற்கு முயற்சிகளைச் செய்ய வேண்டும். இதுவே இன்றைய தமிழ் மக்களின் மனநிலை.

அபிமன்யு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புது உலகுக்கு வழிகாட்டு

**நீ எதன் பெயரால் புறக்கணிக்கப்படுகிறாயோ அதன் பெயரால் மனவுறுதியுடன் விஸ்வரூபமாய் எழுந்து நில். அதுவே எதிரிகளிடம் இருந்தும் துரோகிகளிடம் இருந்தும் உனக்கு ஒரு நிரந்தரமான விடுதலையை பெற்றுத் தரும்.**



இவ்வுலகத்தில் படை கொண்டு, ஆயுதம் கொண்டு, கருத்துக்கள் கொண்டு, சிந்தனைகள் கொண்டு வீழ்த்த முடியாத மாபெரும் மனிதர்களை உளவியல் ரீதியான மன அழுத்தங்களைக் கொண்டு மட்டுமே வீழ்த்த முடியும் என்பதை கோழைகள் உள்ளம் நன்றாகவே அறிந்து வைத்திருக்கின்றது.

மனித வர்க்கத்தில் பல பரிமாணங்களிலும் வளர்ச்சியடைந்து ஒரு சக மனிதனை அவனிடம் இருக்கும் ஏதோ ஒரு குற்றத்தை அல்லது பலவீனத்தை பிற மனிதர்கள் அறிந்து கொண்டு அந்த மனிதனை மேலும் மேலும் பலவீனப்படுத்துவதற்காக இந்த மண்ணில் இருந்து அவனை முற்றாக அகற்றுவதற்காக ஏனைய மனிதர்களால் வசைபாடி இழிவுபடுத்தப்படும் செயல் என்பது காலம்காலமாய் நடந்து வரும் ஒன்றாகும். அந்த இழிசொற்களுக்கு இலக்காகி மனவுறுதியை இழந்து இரையானவர்கள் தான் இவ்வுலகில் அதிகம்.

மகாபாரத இதிகாசத்தை எடுத்துக் கொண்டால் அதில் வரும் கர்ணனின் கதாபாத்திரம் மட்டுமே தன் மீது வசைபாடப்பட்ட எல்லாவிதமான இழிச் சொற்களையும் தன் நண்பனான துரியோதனனின் துணை கொண்டு தன் வில்வித்தையின் வெற்றிக்கான் இலக்காக மாற்றி மகாபாரத வரலாற்றில் என்றுமே நீங்காத இடத்தையும் இறைவனின் அருளையும் பெற்றுக் கொள்ள முடிந்தது.நாம் ஒரு முறை குனிந்தால் மறுபடியும் நிமிர முடியாது என்பதும் நாம் ஒருமுறை நிமிர்ந்தால் மறுபடியும் குனிய முடியாது என்பதும் சரித்திர சித்தாந் தங்களில் இருந்து வரும் வெற்றி பெற்றவர்களின் உலக வரலாறாகும். அதனால்தான் பண்டைய இதிகாசங்களும் புராணங்களும் தனது அனைத்து கதாபாத்திரங்களிலும் இவ்வுண்மையை எமக்கு போதித்து வருகின்றது.

நீ ஒரு முறை எழுந்தால் மறுபடி மறந்தும் இருந்து விடாதே. உன்னை உயிருடன் புதைத்து விடுவார்கள், அல்லது எரித்து விடுவார்கள். இந்த சமூகம் விதைப்பதை விட புதைப்பதையே அதிகம் விரும்புகின்றது. தனக்கு நிகராய் ஒருவன் இருந்து விடக் கூடாது என்பதில் இந்த சமூகம் விழிப்பாய் இருக்கின்றது. அதனால்தான் இவ்வுலகத் தில் தீய மனிதர்களின் எண்ணிக்கையை விட நல்ல மனிதர்களின் கல்லறைகள் தான் அதிகம்.

அறிவியல் வளர்ச்சியடைந்த இந்த நவீன காலத்திலும் கூட இந்த இழிச் சொற்களும் வசைபாடும் தன்மையும் இனத்துக்குள் மதத்துக்குள் சாதிக்குள் மொழிக்குள் தொழிலுக்குள் படு வேகமாக ஊடுருவி வன்முறைக்கும் கலவரத்துக்கும் மனிதர்களுக்கு இடையிலான நிரந்தர பிரிவிற்கும் வழிவகுத்து விடுகின்றது.

இனத்தின் பெயராலும் மதத்தின் பெயராலும் சாதியின் பெயராலும் மொழியின் பெயராலும் தொழிலின் பெயராலும் உன்னை இழிவு படுத்தி புறக்கணித்தாலும் நீ எதன் பெயரால் புறக்கணிக்கப்படுகிறாயோ அதன் பெயரால் மனவுறுதியுடன் விஸ்வரூபமாய் எழுந்து நில். அதுவே எதிரிகளிடம் இருந்தும் துரோகிகளிடம் இருந்தும் உனக்கு ஒரு நிரந்தரமான விடுதலையை பெற்றுத் தரும்.

தர்மத்திற்கு தலைசாய்ப்பவன் பிறரால் தன் மீது வசைபாடப்படும் எந்தவித இழிச்சொற்களையும் தனக்குள் குடிகொண்டிருக்கும் திறமையால் ஒரு வனத்தையே எரித்து சாம்பலாக்கி விடும் தீபோல் அடியோடு இல்லாமல் செய்து விடுவான். அப்படிப்பட்ட உத்தமர்களைதான் இன்றைய தலைமுறையினர் கோயில் கட்டி வணங்குகிறார்கள். சிலை எழுப்பி மாலை போடுகிறார்கள். பாடப்புத்தகங்களில் வரலாற்றுப் பாடங்களாய் அவர்களைப் பற்றி படித்துக் கொண்டிருக்கின்றார்கள்.

கடந்த காலங்கள் கழியட்டும். நிகழ்காலங்கள் நினைவில் நிற்கட்டும். எதிர்காலம் உன் வாழ்வை அழிக்க நினைக்கும் எதிரிகளுக்கு ஏமாற்றமாய் அமையட்டும்.

நீ இமயமலைக்கு போகத் தேவையில்லை. உன் மனதை இமயமாக்கி உன்னை இழிவுபடுத்துவோர் அனைவரையும் உன் வாழ்க்கைக்கு உரமாக்கு. புது உலகுக்கு வழிகாட்டு.

## யூடியூபில் வருமானம் ஈட்டுவது எப்படி?

யூடியூபில் காணொலிகளைப் பதிவிடுவதன் மூலம் குறிப்பிட்ட அளவு வருமானத்தைப் பெற முடியும் என்பது அனைவருக்கும் தெரியும். ஆனால், அதை எப்படிச் சம்பாதிக்க வேண்டும், அதற்கான வழிமுறைகள் என்ன, அதற்கான அளவுகோல்கள் என்ன என்பது பற்றிப் பெரும்பாலும் நமக்குத் தெரிவதில்லை. யூடியூப் காணொலிகள் மூலம் பணம் சம்பாதிக்க நிறைய வழிகள் இருக்கின்றன. அதில் முக்கியமான ஒரு வழி யூடியூபில் மொனிடைசேஷன் **(Monetization)** செய்வது. யூடியூபில் அதை எப்படிச் செய்வது, அதற்கான வழிமுறைகள் என்ன என்பதைப் பார்க்கலாம்.

யூடியூப் பார்ட்னர் புரோகிராம் **(YouTube Partner Program)** என்ற திட்டத்தின் கீழ் பல வசதிகளை யூடியூபில் காணொலிகளைப் பதிவிடுபவர்களுக்கு வழங்கிவருகிறது. அதன் ஒரு பகுதியாக மொனிடைசேஷன் என்ற வசதியையும் வழங்கிவருகிறது யூடியூப். **YouTube Partner Program**-ல் இணைந்து உங்கள் சனலை மொனிடைஸ் செய்வதன் மூலம் நீங்கள் பதிவிடும் காணொலிகளின் மூலம் வருமானத்தைப் பெற முடியும்.

### அடிப்படை அளவுகோல்கள் என்ன?

யூடியூபில் மொனிடைஸ் செய்வதற்கு உங்களிடம் முதலில் ஒரு யூடியூப் சேனல் இருக்க வேண்டும். அந்த யூடியூப் சனலில் தொடர்ந்து காணொலிகள் பதிவிடப்பட்டிருக்க வேண்டும். குறைந்தபட்சம் 1000 சந்தாதாரர்களும், கடந்த ஒரு வருடத்தில் 4000 மணி நேரம் நீங்கள் பதிவிட்ட காணொலிகளும் பார்க்கப்பட்டிருக்க வேண்டும். இந்த இரண்டு அளவுகோல்களையும் நீங்கள் அடையும் பட்சத்தில் உங்கள் யூடியூப் சனலை உங்களால் மானிடைஸ் செய்ய முடியும்.

### யூடியூபில் மொனிடைஸ் செய்வதன் மூலம் எப்படி நம்மால் வருமானம் ஈட்ட முடிகிறது?

யூடியூபில் நாம் பெறக்கூடிய வருமானம் என்பது, நம் முடைய காணொலிகளில் எத்தனை விளம்பரங்கள் இடம் பெறுகின்றன, அந்த விளம்பரத்தை எத்தனை பார்வையாளர்கள் பார்க்கிறார்கள், எத்தனை பேர் அந்த விளம்பரத்தை கிளிக் செய்கிறார்கள் என்பதைப் பொறுத்தே அமைகிறது. சுலபமாகச் சொல்ல வேண்டும் என்றால், **Cost-per-view, Cost-per-click** என்பதன் அடிப்படையிலேயே நமது வருமானம் இருக்கும். நமக்கு அதிகமாகச் சந்தாதாரர்கள் இருந்தால் அதிக வருமானம் என்று சிலர் நினைப்பதுண்டு. ஆனால் நமது சந்தாதாரர்களுக்கும் யூடியூபில் மொனிடைஸ் செய்வதன் மூலம் பெறும் வருமானத்திற்கும் தொடர்பில்லை. ஒரு குறிப்பிட்ட காணொலியில் எத்தனை பேர் விளம்பரங்களைப் பார்க்கிறார்கள் என்பதைப் பொறுத்தே அது அமைகிறது.

மேலும் தொடர்ந்து நமது காணொலிகளில் விளம்பரங்கள் இடம்பெற வேண்டுமானால் அதற்கும் பல விதிமுறைகள் இருக்கின்றன. அவற்றைப் பின்பற்ற வேண்டியதும் அவசியம். உதாரணமாக நம்முடைய காணொலிகளில் வன்முறை, பாலியல் குறித்த தவறான கருத்துகள், சர்ச்சைக்குரிய கருத்துகள் ஆகியவை இடம்பெற்றிருந்தால் அந்தக் காணொலிகளை மொனிடைஸ் செய்ய முடியாது. அவற்றை யூடியூப்பே மானிடைசேஷனில் இருந்து நீக்கிவிடும்.



### AdSense என்றால் என்ன?

யூடியூபில் நமது வருமானம் முழுவதும் விளம்பரத்தைச் சார்ந்துள்ளது எனக் கூறியிருந்தோம். நமது காணொலியில் என்ன விதமான விளம்பரங்கள் இடம்பெற வேண்டும் என்பது **AdSense**மூலம்தான் தீர்மானிக்கப்படுகிறது. இந்த **AdSense** ஆனது யூடியூபுக்கு மட்டுமல்லாமல் கூகுளின் அனைத்து சேவைகளிலும் என்ன விதமான விளம்பரங்கள் பயநர்களுக்குக் காட்டப்பட வேண்டும் என்று தீர்மானிக்கப் பயன்படுத்தப்படுகிறது. எனவே **AdSense** கணக்கைத் தொடங்குவதன் மூலமே நம்முடைய காணொலிகளில் இடம்பெறுவதற்கான விளம்பரங்களை நாம் பெறமுடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சலிப்பும் சந்தோசமும்

நம் மனதில் தோன்றும் எண்ணங்களே நம்மை உயர்த்தும் தன்மை கொண்டவை. தாழ்வான சிந்தனை நம்மைத் தாழ்த்திவிடும். இதற்கு உபநிடதங்கள் மற்றும் புராணங்களில் பல உதாரணங்கள் உள்ளன.

இந்திரன் ஒருமுறை பூலோகத்துக்கு வந்தான். வனத்தில் ஒருவன் தவம் இருப்பதைக் கண்டான். அந்த மனிதன், இதுவரை செய்த பாவங்களுக்குப் பிராயச்சித்தம் செய்யும் விதமாகத் தவம் செய்து கொண்டிருந்தான். நீண்ட கால தவத்தால் அவனைச் சுற்றிலும் புற்று வளர்ந்துவிட்டது.. இந்திரனின் வரவால் அவன் தவம் கலைந்தது.

இந்திரனைக் கண்டதும் "நான் முக்தி அடைய இன்னும் எவ்வளவு காலம் தவம் செய்ய வேண்டும்?" என்று கேட்டான் அந்த மனிதன்.

அவன் செய்த பாவங்களில் பெரும்பாலானவை நீங்கி விட்டதை அறிந்த இந்திரன் "இன்னும் பத்து ஆண்டுகளில் நீ முக்தி அடையலாம்" என்று சொன்னார்.

அதைக் கேட்டதும் மனிதன் சலிப்புடன் "என்ன... இன்னும் பத்து ஆண்டுகளா?" என்றான். உடனே அவன் நரகத்துக்குப் போய்விட்டான்.

இந்திரன் அதே வனத்தில் மற்றொருவனைக் கண்டான். அவனும் தவம் செய்ய வந்தவனே. ஆனாலும் அதுபற்றிய பிரக்ஞை இன்றி சந்தோஷமாக மரத்தைச் சுற்றிச் சுற்றி வந்து ஆடிக் கொண்டிருந்தான். அவனுக்கு தன்னுடைய தவறுகள் குறித்து எதுவும் தெரியவில்லை. ஆனால், அவனுக்குக் கொஞ்சம் ஆன்மிக தாகம் இருந்தது.

அவனும் இந்திரனிடம், "நான் முக்தி (விடுதலை) பெற இன்னும் எவ்வளவு காலம் தவம் செய்ய வேண்டும்?" என்று மகிழ்ச்சியுடன் கேட்டான். இந்திரன் அவனுடைய பாவ புண்ணியக் கணக்குகளைப் பார்த்துவிட்டு, "இன்னும் ஆயிரம் ஆண்டுகள் தவம் செய்ய வேண்டும்" என்றான்.



இதைக் கேட்ட அந்த மனிதன் "அட, வெறும் ஆயிரம் ஆண்டுகள்தானா!" என்று சொல்லிவிட்டுத் தாவிக் குதித்து மகிழ்ந்தான்.. என்ன விந்தை, அடுத்த நொடியில் அவன் சொர்க்கத்துக்குச் சென்றுவிட்டான்.

இந்தக் கதையில் உள்ள நீதி... யாரும் தன்னையும் தன் செயல்களையும் வெறுக்கக் கூடாது. தன்னால் முடியாது என்று நினைப்பவன், சலித்துக் கொள்பவன் எவ்வளவு திறமையானவராக இருந்தாலும் செயலைத் தொடங்கும் முன்னரே தோற்று விடுவான்.

அதேநேரம் திறமை இல்லாத ஒருவன் 'தன்னால் முடியும்' எனும் நம்பிக்கையோடும் சந்தோஷத்துடனும் ஒரு செயலைத் தொடங்கினான் எனில், அதில் அவன் நிச்சயம் வெற்றி பெறுவான். இதையே 'புத்தியுள்ள மனிதர் எல்லாம் வெற்றி காண்பதில்லை. வெற்றி பெற்ற மனிதர் எல்லாம் புத்திசாலியில்லை' என்று பாடினார்கள் போலும்!

# அகதியின் முகம்



இரவும், பகலும் தங்களது பெற்றோர்களுடன் உலகின் ஏதாவது ஒரு முனையில் அகதியாக செல்லும் இளம் குழந்தைகளின் அடையாளமாக மாறியிருக்கிறாள் அமல்.

குழந்தை அகதிகள் குறித்து உலக நாடுகளுக்கிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் விதமாக அமல் என்ற சிறுமி வடிவலான பொம்மையை **Handspring Puppet Company** வடிவமைத்துள்ளது. சுமார் 3.5 மீற்றர் உயரம் கொண்ட அமல், துருக்கி - சிரியா எல்லையிலிருந்து மான்செஸ்டர்வரை நடந்தே பயணம் செய்ய இருக்கிறாள்.

அதாவது சுமார் 8,000 ஆயிரம் கிலோ மீற்றர். ஜூலை மாதம் தனது பயணத்தை தொடங்கிய அமல் நவம்பர் மாதம் நிறைவு செய்கிறாள். தான் பயணம் செய்யும் 8 நாடுகளின் கலாசார விழாக்களிலும் அமல் பங்கேற்று வருகிறார்.

அமல் தனது பயணத்தை முடிக்கும் தினத்தில் பெரு விழாவாக நடத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது. இந்நிகழ்வில் சிரியா, துருக்கியைச் சேர்ந்த கலைஞர்கள் கலந்து கொண்டனர். அமல் மூலமாக விழிப்புணர்வு ஏற்படுத்தும் முயற்சியை அனைவரும் பாராட்டி வருகின்றனர்.

தனிமனித இடைவெளியும், தனித்திருத்தலும் சாத்தியமற்றதாக உள்ளது. அவர்களின் வேலையும் குறைந்தபட்ச வாழ்வாதாரமும் மோசமாக இந்தக் கொரோனா காலத்தில் பாதிக்கப்பட்டுள்ளது. அவர்களைப் பாதுகாக்கும் நடவடிக்கைகளை அரசாங்கங்கள் மேற்கொள்ளவேண்டுமென்று தொழிற்சங்கங்களின் சர்வதேசக் கூட்டமைப்பு ( **World Federation Of Trade Unions**) வலியுறுத்தியுள்ளது.

# உலக யானைகள் தினம்

பல்லாயிரம் ஆண்டுகளாக மனிதனுடன் உறவாடி வரும் யானைகளுக்கு மரியாதை தரும் வகையில் ஆண்டுதோறும் ஓகஸ்ட் 12ஆம் திகதி யானைகள் தினம் கொண்டாடப்படுகிறது.

ஆபிரிக்க யானைகள், ஆசிய யானைகள் என்று யானைகளை இரண்டு பிரிவாக வகைப்படுத்தியுள்ளனர். ஆசிய யானைகள் இந்தியா, இலங்கை உள்ளிட்ட 13 நாடுகளில் வசிக்கின்றன. 7 அடி முதல் 12 அடிவரை உயரமும் 5 ஆயிரம் கிலோ வரை எடையும் கொண்டவையாகும். பிரமாண்டத்திற்கு யானைகள் ஓர் உதாரணம்.

காட்டிலிருந்த யானைகளை மனிதன் பிடித்து வந்து பழக்கினான். "மாடு கட்டிப் போரடித்தால் மாளாது என்று சொல்லி யானை கட்டிப் போர் அடித்த சோழநாடு" என்ற சொற்றொடர் முற்காலத்தில் விவசாயத்திற்கு யானைகள் எவ்வாறு பயன்பட்டன என்பதை எடுத்துக்காட்டுகிறது. பண்டைய தமிழ் மன்னர்களின் நான்குவகை படைகளில், குஞ்சரப் படை எனப்படும் யானைப்படை மிகவும் முக்கியமான ஒன்றாகும்.

கி.பி. 1225இல் சீன புவியியலாளர் சா யூ-குவா சோழ நாட்டைப் பற்றியும் சோழர் படையைப் பற்றியும் பின்வருமாறு எழுதியுள்ளார்.

"சோழநாடு மேற்கிந்திய நாடுகளுடன் போரிட்டுக் கொண்டிருக்கிறது. சோழ அரசிடம் அறுபது ஆயிரம் போர் யானைகள் உள்ளன. ஒவ்வொரு யானையும் 7 அல்லது 8 அடி உயரம் உள்ளது. போரிடும்போது யானைகளின் மீது அம்பாரிகள் அமைத்து அவற்றில் வீரர்கள் அமர்ந்து கொண்டு நெடுந்தொலைவிற்கு அம்பு எய்துகிறார்கள். சோழர்களின் வெற்றிக்கு முக்கிய காரணம் இப்படைதான்" என்று குறிப்பிட்டுள்ளார்.

போரிடுவதற்கும், விவசாயத்திற்கும் பயன்பட்ட யானைகள், ஆலயங்களில் தெய்வ காரியங்களுக்காகப் பயன்படுத்தப்பட்டன. துப்பாக்கி கண்டுபிடிக்கப்பட்ட பிறகு தந்தத்திற்காக யானைகளைக் கொல்வது அதிகரித்த காரணத்தால் 1872ஆம் ஆண்டு அப்போதைய பிரிட்டிஷ் அரசு, யானைகளைப் பாதுகாக்கப்பட்ட உயிரினமாக அறிவித்தது. அதன்பிறகு சர்க்கஸ், ஆலயங்கள், திருமடங்கள் ஆகியவற்றில் மட்டுமே யானைகள் வளர்க்கப்பட்டு வந்தன. சர்க்கஸ்கள் தங்கள் செல்வாக்கை இழந்த பிறகு, ஆலயங்களிலுள்ள யானைகளின் எண்ணிக்கையும் மிகவும் குறைந்து வருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காஸ்ட்ரோ எனும் வரலாற்று நாயகன்

**பிடல் காஸ்ட்ரோ என்ற வரலாற்று நாயகனைப்பற்றி எப்போது நினைக்கும்போதும் மனதில் எழும் பிம்பம், ஒரு கையில் புத்தகமும் மறுகையில் துப்பாக்கியும் ஏந்தி நிற்கும் உருவமே.1926 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 13 ஆம் திகதி பிடல் காஸ்ட்ரோ பிறந்தார். அவரின் பிறந்த தினத்தை முன்னிட்டு இக்கட்டுரை பிரசுரமாகின்றது.**



ஆயுதப்புரட்சியின் மூலம் கியூபாவைக் கைப்பற்றி அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கு முடிவுகட்டியது காஸ்ட்ரோவின் ஒரு முகம். மறுமுகமோ, மகத்தான இலக்கியவாதிகளான ஹோசே மார்த்தி, ஹெமிங்வே, கேப்ரியல் கார்சியா மார்க்வெஸ், பாப்லோ நெருதா போன்றோரின் எழுத்தை நேசிக்கும் ஆளுமையின் அடையாள மாக விளங்கியது. உலகில் வேறு எந்தத் தேசத்தின் ஜனாதிபதியை விடவும் அதிகம் எழுத்தாளர்களை, கலைஞர்களை நேசித்தவர் பிடல் காஸ்ட்ரோ.

பாடிஸ்ட்டா அரசால் காஸ்ட்ரோ கைது செய்யப்பட்டு நீதிவிசாரணை செய்யப்பட்ட போது பிடல் காஸ்ட்ரோ புரட்சிகரமான உரை ஒன்றை நிகழ்த்தினார். அதில், "நீங்கள் என்னைத் தண்டியுங்கள், அதைப் பற்றி எனக்குக் கவலை இல்லை, வரலாறு என்னை விடுதலைசெய்யும்என்றார். அது வெறும் வீரவசனம் இல்லை. காலத்தின் குரலையே காஸ்ட்ரோ ஒலித்திருக்கிறார். பிடல் காஸ்ட்ரோவும் சேகுவேராவும் புரட்சியின் கதாநாயகர்களாக இன்று உலகெங்கும் கொண்டாடப்படுகிறார்கள்.

கியூபாவில் 1926ஆம் ஆண்டு ஓகஸ்ட் 13 ஆம் திகதி பிடல் காஸ்ட்ரோ பிறந்தார். இயேசு சபையினர் நடத் திய பாடசாலையிலும், ஹவானா பல்கலைக்கழத்திலும் பயின்ற அவர், சட்டம் மற்றும் சமூக அறிவி யலைக் கற்றார். கல்லூரி நாட்களில் கம்யூனிஸக் கருத்துகள்மீது கொண்ட ஈடுபாடு காரணமாக அரசு எதிர்ப்புப் போராட்டங்களில் கலந்து கொள்ளத் தொடங்கினார்.

அமெரிக்கக் கைக்கூலியான பாடிஸ்ட்டா கியூபாவில் ஆட்சியைக் கைப்பற்றினார். அவரது சர்வாதி கார ஆட்சியை எதிர்த்து கல்லூரி மாணவர்கள் போராடினார்கள். அந்தப் போராட்டத்தில் காஸ்ட்ரோ தீவிர மாகச் செயற்பட்டார். இரவில் தொடர் ந்து வேலை செய்வதும் குறைவான தூக்கமுமே அவரது பழக்கம்.

லத்தீன் அமெரிக்கக் கண் டத்தின் விடுதலைக்கான போராட்ட த்திற்கு முதற்காரணமாக விளங்கிய ஹோசே மார்த்தியின் கவிதைகளும் அவரது போராட்டவாழ்வுமே காஸ்ட்ரோ உருவாக முக்கிய காரணமாக இருந்தன. மார்த்தியின் 28 தொகுதிகளையும் தனது படுக்கை அறையிலே வைத்திருந்தார் காஸ்ட்ரோ. "ஒரு மனிதன் உயிர் வாழ்வதற்குக் காற்றும் வெளிச்சமும் போலவே கவிதையும் தேவைப்படுகிறது" என்றவர் மார்த்தி.

பாடிஸ்ட்டாவின் சர்வாதிகார ஆட்சியைக் கவிழ்க்கும் முயற்சியாக, காஸ்ட்ரோ 1953ஆம் ஆண்டு மன்காடா இராணுவ முகாம் மீது தனது கூட்டாளிகளுடன் தாக்குதல் நிகழ்த்தினார். இம் முயற்சி தோல்வி அடைந்தது. அவரது கூட்டாளிகள் களத்திலேயே கொல்லப்பட்டனர். காஸ்ட்ரோவும் அவரது சகோதரர் ரவுல் காஸ்ட்ரோவும் கைது செய்யப்பட்டார்கள். நீதிவிசாரணை நடைபெற்றது. ஓராண்டுக்குப் பிறகு பொது மன்னிப்பு வழங்கப்பட்டு விடுவிக்கப்பட்டார்.

கியூபாவிலிருந்து தப்பி மெக்சிக்கோவுக்குச் சென்றார் காஸ்ட்ரோ. அங்கே இருந்தபடியே இளைஞர்களைத் திரட்டி புரட்சிப் படையை உருவாக்கி, 1956 ஆம் ஆண்டு கியூபா திரும்பினார். புரட்சிகரப் பணியில் அவரோடு இணைந்து கொண்டவர்தான் புரட்சியாளர் சேகுவேரா. அர்ஜென்டினாவைச் சேர்ந்த மருத்துவரான சே, கியூப புரட்சிக்குத் தனது பங்களிப்பை வழங்க போராளியாக உருமாறினார்.

மெக்சிக்கோ வளைகுடா வழி யாகப் படகில் கியூபாவுக்குள் நுழை ந்த பிடல் காஸ்ட்ரோ இராணுவத்தை எதிர்த்து சண்டையிடத் தொட ங்கினார். அவர் தரப்பில் ஏராளமான உயிரிழப்புகள் ஏற்பட்டன. ஆனாலும் போராட்டத்தைக் கைவிடவில்லை. மெள்ள மக்கள் மத்தியில் காஸ்ட்ரோவுக்கான ஆதரவு பெருகியது. மூன்று ஆண்டுகள் மக்களைப் புரட்சிக்கு தயார்படுத்தினார். 1959ஆம் ஆண்டு தலைநகர் ஹவானா வீதிகளுக்குள் காஸ்ட் ரோவின் புரட்சிப் படை நுழைந்தது. பாடிஸ்ட்டா தோற்றோடிப் போனார். அத்துடன் சர்வாதிகார ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது.

பிடல் காஸ்ட்ரோ தலைமையிலான புதிய அரசு உருவாக்கப்பட்டது. கியூபாவுக்குச் சொந்தமான எல்லா வளங்க ளும் கியூப மக்களுக்கே சொந்தம் என அறிவித்தார் பிடல். தொழிற்ச லைகள் யாவும் நாட்டுடைமை யாக்கப்பட்டன. அமெரிக்காவின் சூதாட்டக்கூடங்கள், கேளிக்கை அமைப்புகளை ஒழித்தது காஸ்ட் ரோவின் அரசு. இலவசக்கல்வி, மருத்துவம் எனத் தனது பொதுவுடைமைச் சிந்தனைகளால் பெரும் மாற்றங்களைக் கொண்டுவந்தார் காஸ்ட்ரோ.

அதைச் சகித்துக்கொள்ள முடியாத அமெரிக்கா, கியூபாமீது பொருளாதாரத் தடைகளை விதித் தது. அத்தோடு கியூபாவுடனான தூதரக உறவையும் துண்டித்துக் கொண்டது. இதனால், கியூபாவில் உற்பத்தியான பொருட்கள் அனைத்தும் தேக்கம் கொண்டன. இந்த இக்கட்டான சூழலில் கியூபாவுக்கு ரஷ்ய அரசு கைகொடுக்க முன்வந் தது. கியூபப் பொருட்களை ரஷ்யா வாங்கிக் கொண்டது. இதனால் கியூபாவிற்கும் ரஷ்யாவிற்குமான நட்புறவு வலிமையாகியது. தன்னை ஒரு கம்யூனிஸ நாடாக அறிவித்துக் கொண்டது கியூபா. சர்வாதிகார ஆட்சிக்கு எதிராகக் கியூபா ஆயுதம் ஏந்திப் போராடி வென்ற நிகழ்வு உலகிற்கே புதுவெளிச்சத்தைக் காட்டியது.

ரஷ்யப் புரட்சி ஏற்படுத்திய தாக்கத்திற்கு நிகரானது காஸ்ட்ரோவின் வெற்றி. காஸ்ட்ரோவின் வளர்ச்சியைத் தாங்கிக்கொள்ள முடியாத அமெரிக்கா, பிடலைக் கொல்லத் திட்டம் தீட்டியது. சி.ஐ.ஏ ஆல் 650 இற்கும் அதிகமான கொலை முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அத்தனை யும் தோல்வியடைந்து போனதே வரலாறு.

1959 முதல் 1976 வரை கியூபாவின் பிரதமராகவும் அதன் பின் 1976 இலிருந்து ஜனாதிபதியாக வும் திகழ்ந்து வந்த பிடல் 2008 ஆம் ஆண்டு தனது தம்பி ரவுல் காஸ்ட்ரோவிடம் ஒப்படைத்துவிட்டு ஓய்வெடுத்துவந்தார். கடந்த ஒகஸ்ட் மாதம் தனது 90 ஆவது பிறந்தநா ளைக் கொண்டாடினார். உடல்நலக் குறைவு ஏற்பட்டு சிகிச்சை அளிக் கப்பட்ட காஸ்ட்ரோ, நவம்பர் 25இல் மரணம் அடைந்தார். கியூபா அவரது மறைவை பேரிழப்பாக துக்கம் அனுஷ்டிக்கிறது.

காஸ்ட்ரோவைப் பற்றி நினைக்கும் போது கூடவே நினைவில் இருப்ப வர் புரட்சியாளர் சேகுவேரா. அவர் களின் நட்பு அபூர்வமானது. இலட் சியத்தால் ஒன்றிணைந்தது. ஆயு தம் ஏந்திப் போரிட்ட நாட்களிலும் அதிகாரத்தைப் பகிர்ந்துகொண்ட நாட்களிலும் இருவரும் இணை பிரியாத நெருக்கத்துடனே இருந் தார்கள். கொரில்லா போர்ப் பயிற்சியில் இணைந்து செயற்படத் தொட ங்கியபோது 'சேகுவேராவுக்கு வயது 27. காஸ்ட்ரோவுக்கு 32. இருவரும் இணைந்தே கியூபாவில் புரட்சியைச் சாத்தியப்படுத்தினார்கள். சேகுவேரா இறந்தபோது, அவருக்கு வயது 40. கியூப தேசமே அவரது மரணத்திற்காகக் கண்ணீர் வடித்தது. காஸ்ட்ரோ மிகவும் உணர்ச்சிபூர்வமான அஞ்சலி உரையாற்றினார்.

நோபல் பரிசு பெற்ற கவிஞரான பாப்லோ நெருதா, கியூபாவை மிக வும் நேசித்தார். அது போலவே நெரு தாவின் கவிதையைக் காஸ்ட்ரோ, விரும்பிப் படித்திருக்கிறார். 1971 ஆம் ஆண்டு சிலிக்குச் சென்றிரு ந்த காஸ்ட்ரோ நெருதாவைச் சந்தித்தார். சர்வாதிகார ஆட்சியால் நெருதா உயிருக்கு ஆபத்து ஏற்படா மல் இருக்க வேண்டும் என்று காஸ்ட்ரோ கவலை தெரிவித்திருக்கிறார்.

காஸ்ட்ரோவைப் பாராட்டி பாப்லோ நெருதா ஒரு கவிதை எழுதியிருக்கிறார். அதில் "மகத்துவத்தின் முழுமையான உருவம் நீ, கியூபா வின் நெற்றியை எவராவது தொட முயன்றால், மக்களின் முஷ்டி உயர்ந்து அதைத் தடுக்கும். கியூபாவைப் பாதுகாப்பது எங்கள் கடமை" எனப் பாராட்டு மழை பொழிந்திருக்கிறார் கியூபாவில் கல்வி முற்றிலும் இலவசம். கியூபா தனது பட்ஜெட்டில் 10 சதவீதத்தைக் கல்விக்கு ஒதுக்குகிறது.

அமெரிக்கா, மற்றும் இங்கிலாந்துடன் ஒப்பிடும்போது இது மிக அதிகம் என்கிறது யுனெஸ்கோ.13 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர். ஆசிரியர்களுக்கு அவர்களின் பணிக்காலம் முடியும் வ்ரை தொடர் பயிற்சி அளிக்கப்படுகிறது. மாணவர்கள் பாடத்துடன் கைத்தொழில்களும் கற்றுக்கொள்கிறார்கள். மாற்றுத்திறனாளிகளுக்காக 545 சிறப்புப் பள்ளிகள் செயற்படுகின்றன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடல் புறா

## கை சொன்ன கதை



காலத்தின் பதிவு 78

சாண்டில்யன்

“இங்கு பலியாகப் போவது தனி மனிதரா, நாடா?” என்று கூறினாள் காஞ்சனாதேவி.

“தனி மனிதர் பலியானால் நாடுகள் பலியாகா; இல்லையேல் இரண்டும் பலியாகும்” என்றான் இளைய பல்லவன்.

“நீங்கள் சொல்வது புரியவில்லை” காஞ்சனாதேவியின் குரலில் வருத்தம் துளிர்த்து நின்றது.

“புரியச் சொல்கிறேன், கேளுங்கள்” என்று துவங்கிய இளைய பல்லவன், மற்றவர்களுக்கு முன்னால், தனக்கும் காஞ்சனாதேவிக்கும் சென்ற இரண்டு நாட்களுக்குள் வளர்ந்துவிட்ட காதலை வெளிப் படுத்த இஷ்டப்படாமல் அவளைக் “கேளுங்கள்” என்று மரியாதையா கவே அழைத்தான். மேற்கொண்டு அநபாயன் திட்டத்தை அவன் விபரித்த போதும் அவளைச் சற்று மரியாதையாகவே விளித்து விடயங்களை விளக்கலானான்.

“தேவி! இன்று இந்த அறையில் நாம் விவாதிக்கிறோம் நமது விடுதலை பற்றி. ஆனால் நமது விடுதலையில் பிணைந்திருப்பது நமது உயிர்கள் மட்டுமல்ல கடாரம், சோழ நாடு இவற்றின் நலன்களும் கலந்திருக்கின்றன.

நாம் அனைவரும் இந்த இடத்தில் பலியானால் நாடுகளின் நலன்களும் பலியாகும். உதாரணமாக உங்கள் தந்தையும் நீங்களும் பலியானால் கடாரத்தை ஜெயவர்மன் கையிலிருந்து மீட்பது யார்? குணவர்மன் வேண்டுகோளின்றி ஏன், வற்புறுத்தலின்றி சோழநாடு கடாரத்தின் மீது மரக்கலங்களை ஏவுமா? அநபாயர் பலியானால் சோழநாடு கலிங்கத்துடன் மோதாதிருக்குமா? அது மோதுவது இருக்கட்டும்.

இங்குள்ள தமிழர் வாளாவிருப்பார்களா? அடுத்த விநாடி இரத்தக் களறி ஏற்படும் தேவி! நீங்கள் நினைப்பதுபோல் கூடி வீழும் தத்துவம் நாம் இன்றுள்ள நிலைக்குப் பயன்படாது. தவிர, திட்டத்தில் அநபாயர் எதிர்பார்ப்பது போல் அப்படிப் பலி கொடுக்க வேண்டிய அவசியமும் இல்லை” என்றான் இளையபல்லவன்.

“பலிக்கு அவசியமில்லையா!” காஞ்சனாதேவியின் குரலில் சற்று நம்பிக்கை தொனித்தது.

“அவசியமில்லை. ஆனால் ஏற்படாது என்று திட்டமாகச் சொல்ல முடியாது. அதோ அந்தக் கோடுகளையும் புள்ளிகளையும் கவனியுங்கள்” என்று திட்டத்தை விளக்க முற்பட்ட இளையபல்லவன், “மேற்குக் கோடியிலிருக்கும் புள்ளிதான் இந்த வீட்டின் கொல்லைப்புறம். அதற்கு அடுத்து, குறுக்கும் நெடுக்குமாக இழுக்கப்பட்டுள்ள கோடுகள் இந்தக் கொல்லைப்புறத்தை அடுத்த சிறு தோப்பைக் குறிக்கின்றன.

தோப்புக்கு அடுத்தபடி பட்டையாக இழுக்கப்பட்டுள்ள மூன்று கோடுகளும் மூன்று பெரு வீதிகள். அந்த வீதிகளைக் கடக்கும் வரையில் அதிக ஆபத்தில்லை. ஏனென்றால் முதல் சோதனை அந்த முப்பெரும் வீதிகளைத் தாண்டி, கடல் முகப்பிலிருக்கும் கிழக்குக் கோட்டை வாசலில்தான் நடக்கும். அங்கு நமது வண்டி மட்டும் இருந்தால் மாடுகளை வேகமாக முடுக்கி நீர்க்கரையை அடைய முயலலாம்.

ஆனால் வண்டிகள் பல நீர்க்கரைக்குச் செல்லும். அப்படிச் செல்லும் வண்டிகள் ஒன்றன்பின் ஒன்றாக நிறுத்திப் பரிசோதிக்கப்படும். அந்தப் பரிசோதனையில் நீர்க்குடங்களை வீரர்கள் அதிகமாகத் தட்டிப் பார்க்காமல் விட்டு விட்டால் தப்பி விடலாம். பலிக்கு அவசியமிருக்காது. அப்படியில்லையேல், சோதனையில் சிறிது சந்தேகம் ஏற்பட்டாலும், வண்டியின் பின்புறம் உட்கார்ந்திருக்கும் நானோ அநபாயரோ கீழே குதித்து வீரர்களை மறித்து வண்டி வேகமாக நீர்க்கரைக்குச் செல்ல அவகாசம் கொடுக்க வேண்டும். அப்படி அவகாசம் கொடுக்கும்போது வீரர்களைத் தடுத்து நிற்பவனுக்குத் தப்ப அவகாசமிருக்காது. போரிட்டு மடிய வேண்டியதுதான்...” என்று சொல்லிக் கொண்டு போன இளையபல்லவனை இடைமறித்த காஞ்சனாதேவி, “ஏன் மடிய வேண்டும், இந்த ஊருக்கு வந்த புதிதில் அதே கோட்டை வாசலிலிருந்து நீங்கள் தப்பவில்லையா?” என்று வினவினாள்.

இளையபல்லவன் இம்முறை அவளைத் திரும்பி நோக்கினான். அவன் கடை இதழ்களில் புன்முறுவலொன்றும் தவிழ்ந்து நின்றது. “அந்த நிலைமை வேறு இன்று நிலைமை வேறு தேவி. அன்று நிகழ்ந்த சம்பவம் திடீரென்று நிகழ்ந்தது. இன்றிருப்பதுபோல் அத்தனை காவல் எச்சரிக்கையும் இல்லை. அன்று தப்புவதற்கும் அடைக்கலம் புகுவதற்கும் இடமொன்று கிடைத்தது...”

என்று அர்த்த பாவத்துடன் அந்த அஞ்சன விழியாளைப் பார்த்த இளையபல்லவன் அநபாயனை நோக்கிக் கேட்டான்... “கிழக்குக் கோட்டை வாசலில் வீரர்களை நான் சில நிமிடங்கள் தடுக்கலாம். அதற்குள் நீர்க்கரைக்கு வண்டி போய்விட முடியுமா? நீர்க்கரைக்கும் கோட்டை வாசலுக்குமுள்ள பாதை நீண்டதாயிற்றே. என்னை வெட்டிப் போட்டு வீரர்கள் தொடர்ந்தால் என்ன செய் வீர்கள்?”

அநபாயன் கண்கள் இளையபல்லவன் கண்களுடன் சில விநாடிகள் கலந்தன. “அதையும் யோசித்தேன் கருணாகரா! நம்முடைய வண்டிக் காளைகள் என்ன தான் முடுக்கப்பட்டாலும் கோட்டை வாசலிலிருந்து நீர்க்கரையை அடைய நிமிடங்கள் பல ஆகும்.

உன்னைச் சுற்றிக்கொண்டே கலிங்கத்து வீரர்கள் வண்டி போகும் திசையையும் எண்ணத்தையும் புரிந்து கொண்டால் கண்டிப்பாக வண்டியைத் துரத்தி மடக்கப் பார்ப்பார்கள். ஆனால் மடக்க முடியாது” என்று திட்டமாகத் தெரிவித்த அநபாயன், காஞ்சனாதேவியை நோக்கி, “தேவி! இந்த இடத்தில்தான் உங்கள் சேவை தேவையாயிருக்கும்” என்றான்.

“என்ன சேவை அநபாயரே?” என்று கேட்டாள் காஞ்சனாதேவி.

“உங்கள் நாட்டில் பெருவில் மட்டும் உண்டு. எங்கள் நாட்டில் உண்டை வில் என்ற சிறு வில் உண்டு” என்றான் அநபாயன்.

சோழர்குல இளவல் எதற்காக இதைச் சொல்கிறான் என்பதைப் புரிந்துகொள்ளாத காஞ்சனாதேவி குழப்பத்துடன் கேட்டாள்: “உண்டை வில்லா?” என்று.

“ஆம் தேவி! உண்டை வில் உங்கள் பெரு வில் நீர்க்குடத்தில் பிடிக்காது. ஆனால் தமிழகத்தில் சிறுவர்கள் சிறு விற்களில் களிமண் உருண்டைகளை வைத்து மரக் கனிகளை அடிப்பது உண்டு. சாதாரண வில் போன்றதுதான் அது. ஆனால் நாண் நல்ல சருமத்தைச் சுருட்டிச் செய்யப்படுவதால் பெரு வில்லின் வேகமுடையது. அந்த வில் மூலம் நன்றாக இழுத்து எய்யப்படும் அம்பு ஆகாயத்தில் நீண்ட தூரம் செல்லும்.”

“எதற்கு அது இப்பொழுது”

“ஒரு வேளை நமது வண்டி தேக்கப்பட்டு, கருணாகரன் கீழே குதித்து வீரர்களைத் தடுத்து நின்றால் அமீர் தமது வண்டியைக் கடும் வேகத்தில் துரத்துவான். அந்த வண்டி அப்படிப் பறந்து ஐம்பதடி தூரம் சென்றதும் நீங்கள் நீர்க்குடத் தின் மறைவிலிருந்தே உண்டை வில் மூலம் எரியம்பு ஒன்றை ஆகாயத்தில் அனுப்ப வேண்டும். அதற்கான வசதிகள் உண்டை வில், நீண்ட துணி சுற்றி எண்ணெய் தோய்த்த அம்பு, இவை உங்களுடன் நீர்க்குடத்தில் வைக்கப்படும். உங்கள் குடத்துக்குப் பக்கத்தில் வண்டியில் வெளிச்சத்துக்காகத் தீப்பந்தம் ஒன்றும் செருகப்பட்டிருக்கும். அம்மை மட்டும் வெளி நீட்டிப் பற்றவைத்துக் குடத்திற்குள் கொண்டுபோய் உண்டை வில்லில் நாணிழுத்து ஆகாயத்தில் பறக்க விடுங்கள்.”

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காலத்தால் அழியாத கானங்கள்

திரைப்படம் : நீங்கள் கேட்டவை
இயற்றியவர் : வைரமுத்து
இசை : இளையராஜா
பாடியவர் : கே.ஜே.யேசுதாஸ்



கனவு காணும் வாழ்க்கை யாவும்
கலைந்து போகும் கோலங்கள்

கனவு காணும் வாழ்க்கை யாவும்
கலைந்து போகும் கோலங்கள்
துடுப்புக்கூட பாரம் என்று
கரையைத் தேடும் ஓடங்கள்

கனவு காணும் வாழ்க்கை யாவும்
கலைந்து போகும் கோலங்கள்

பிறக்கின்ற போதே...
பிறக்கின்ற போதே இறக்கின்ற தேதி
இருக்கின்றது என்பது மெய்தானே
ஆசைகள் என்ன...
ஆசைகள் என்ன ஆணவம் என்ன
உறவுகள் என்பதும் பொய்தானே
உடம்பு என்பது...
உடம்பு என்பது உண்மையில் என்ன
கனவுகள் வாங்கும் பை தானே

கனவு காணும் வாழ்க்கை யாவும்
கலைந்து போகும் கோலங்கள்
துடுப்புக்கூட பாரம் என்று
கரையைத் தேடும் ஓடங்கள்

கனவு காணும் வாழ்க்கை யாவும்
கலைந்து போகும் கோலங்கள்

காலங்கள் மாறும்...
காலங்கள் மாறும் கோலங்கள் மாறும்
வாலிபம் என்பது பொய் வேஷம்
தூக்கத்தில் பாதி...
தூக்கத்தில் பாதி ஏக்கத்தில் பாதி
போனது போக எது மீதம்
பேதை மனிதனே...
பேதை மனிதனே கடமையை இன்றே
செய்வதில் தானே ஆனந்தம்

கனவு காணும் வாழ்க்கை யாவும்
கலைந்து போகும் கோலங்கள்
துடுப்புக்கூட பாரம் என்று
கரையைத் தேடும் ஓடங்கள்

கனவு காணும் வாழ்க்கை யாவும்
கலைந்து போகும் கோலங்கள்

# விரல் சொல்லும் விந்தை

**பூ**மியில் பிறவியெடுக்கும் மனிதர்களின் உடலும் பஞ்ச பூதங்களின் கலவையே ஆகும். நம் உடலுக்கு உயிர்ச் சத்தை சூரியனும், மன வளர்ச்சியைச் சந்திரனும் கொடுக்கின்றனர். இப்படியாக உடம்பும் உயிரும் மனதும் பெற்ற மனிதனுக்கு உற்றத் துணையாக விளங்குபவை பஞ்ச இந்திரியங்கள். எனினும், மூளையின் கட்டளைக்கு ஏற்ப அமையும் அவனுடைய செயல்பாடுகளை முன்னெடுக்கும் கருவிகள் விரல்களே என்றால் மிகையாகாது.

உண்பது, உடுப்பது முதல் விமானத்தை இயக்குவது வரை அனைத்துச் செயல்களையும் முன்னெடுப்பவை விரல்களே. மூளையின் நேரடிச் சேவகன் கைவிரல்கள் என்பார்கள். அவற்றைச் சுத்தமாகப் பராமரிப்பது எவ்வளவு அவசியமோ, அந்தளவுக்கு கைவிரல், நகம், உள்ளங்கை அமைப்புகளையும் பாதுகாக்கவேண்டும் என்கின்றன சில ஞானநூல்கள்.



கை விரல் நக அமைப்புகள் மனிதனின் குண இயல்புகளை அடையாளம் காட்டுவதில் பெரும் பங்கு வகிக்கின்றன. விரல்களில் கட்டை விரலைச் சுக்கிர விரல் என்பார்கள். அப்படியே மற்ற விரல்களும் பின்வரும் விபரப்படி ஒவ்வொரு கிரகத்துக்கு உரியதாகத் திகழ்கிறது.

சுட்டுவிரல் - குரு
நடு விரல் - சனி
மோதிர விரல் - சூரியன்
சுண்டு விரல் - புதன்

பொதுவாக சுட்டு விரல் நடு விரலைக் காட்டிலும் அளவில் குறைவாக இருக்கும். இந்த வழக்கத்துக்கு மாறாக சிலருக்கு இரண்டும் சம அளவில் இருக்கும். அப்படியான அன்பர்கள், அனைவரது கவனத்தையும் காந்தம் போல் கவர்ந்திழுக்கும் வல்லமை பெற்றிருப்பார். தலைமை தாங்கும் தகுதியுடன் இருப்பார். இதற்குச் சிறந்த உதாரணமாகத் திகழ்ந்தவர் மாமன்னர் நெப்போலியன் என்பார்கள்.

மோதிர விரலும் நடு விரலும் சரிசமமாக அமைந்துவிட்டால், அந்த அன்பர், துணிச்சலாக முடிவெடுப்பார். தயக்கம் இருக்காது. சில நேரங்களில் இவர்களின் செயல்பாடுகள் எல்லை மீறிப் போய்விடுவதும் உண்டு.

கங்கணரேகையிலிருந்து நடுவிரலின் நுனிவரையிலுமான நீளமே உள்ளங்கை நீளம் ஆகும். இதில் நடுவிரலில் தனிபட்ட நீளமானது உள்ளங்கையின் மொத்த நீளத்தில் முக்கால் பங்கு அமையவேண்டும் என்பது பொதுவிதி. இதை அடிப்படையாகக் கொண்டே கைவிரல்கள் நீளம் குறைந்தவையா அதிகம் கொண்டவையா என்பதைக் கணக்கிடுவர்.

அவ்வகையில் நீளமான விரல்களைப் பெற்றவர்கள் நிதானமாகச் செயல்படுவார்கள். முடிவெடுப்பதில் தயக்கம் இருக்கும். எனினும் தீவிரமாக சிந்தித்துச் செயல்படுவார்கள். இவர்கள் ஏரி, குளங்களில் உள்ள நீரைப் போன்றவர்கள் என்றே கூறலாம். இவ்வகையான விரல்களைப் பெற்றோர் விஞ்ஞானிகளாக, மேதைகளாக, சிந்தனையாளர்களாக, ஆராய்ச்சியாளர்களாக விளங்குவர்.

மேற்சொன்ன பொதுவிதிப்படி நீளம் குறைவான... அதாவது குட்டையான விரல்களைப் பெற்றவர்கள், எந்த ஒரு விஷயத்திலும் உடனடியாகத் தீர்வு காண்பதில் ஆர்வம் கொண்டவர்களாக இருப்பார்கள். காட்டாற்று வெள்ளம் போன்று வேகமாகச் செயல்படுவார்கள். அதிகார அந்தஸ்து பதவிகளில் உள்ளோர், அரசியல்வாதிகள், மருத்துவம், பாதுகாப்பு - இராணுவம், காவல் துறையில் இருப்பவர்கள் இவ்வகை விரல் அமைப்பைப் பெற்றிருப்பார்கள்.

விரல் அமைப்பு அடிப்படையில் பலன் சொல்வார்கள். சிலரின் விரல்கள், அவற்றின் கணுக்களுக்கு இடையேயான பகுதி உடுக்கை போன்று ஒடுங்கி காணப்படும்.

இதுபோன்ற அமைப்புள்ளவர்கள் எதிலும் ஓர் ஒழுங்கினை எதிர்பார்ப்பார்கள் சிறிய விஷயத்திலும் அதிக அக்கறை எடுத்துக் கொள்வார்கள். சதைப் பற்றுடன் விரல் முழுவதும் சமமாக இருந்தால் மேம்போக்காகவே செயல்படுவார்.

நகங்களும் ஒருவரின் குணாதி சயங்களைச் சொல்லும். இளஞ்சிவப்பு வண்ணத்தில் நகங்கள் அமைவது ஆரோக்கியமான அமைப்பு. இவர்களுக்குச் சீரான ரத்த ஓட்டம் இருக்கும்.


பிணிகள் வந்தாலும் விரைவில் குணமாகும் எனலாம். நகங்களின் கீழ்ப் பகுதியில் உள்ள பிறைச் சந்திர வடிவம் உடல்நலத்தை எடுத்துக் காட்டும்.

நகங்கள் நீளமாக அமைந்தால் அமைதி, மென்மை, கலைகளில் ஈடுபாடு, கற்பனை வளம் அமையும். இப்படியான அமைப்புள்ள அன்பர்களுக்கு உயர்ந்த எண்ணமும் குறிக்கோளும் இருக்கும். இவர்களுக்கு மார்பு, நுரையீரல், தலை பாகங்களில் பாதிப்புகள் வரும் வாய்ப்புகள் உண்டு.

நகங்கள் சிறிதாக அமைந்தால் எதையும் விமர்சனம் செய்யும் கெட்டிக்காரத்தனம், அரசியல், சினிமா விமர்சனங்களில் ஆர்வம் இருக்கும். இதய நோய் வரும் வாய்ப்பு உண்டு. அடிக்கடி நகங்களை கடிக்கும் பழக்கம் கொண்டவர், வீண் பதற்றம் மற்றும் கவலை கொண்ட நபராக இருப்பார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நடிகர் சிம்புவா இது?



சிம்புவின் அர்ப்பணிப்பை ரசிகர்கள் பாராட்டுகிறார்கள். இந்நிலையில் திருச்செந்தூரில் நடந்து வந்த முதல் கட்ட படப்பிடிப்பு நிறைவடைந்து விட்டதாம்.

கவுதம்மேனன் இயக்கத்தில் சிம்பு நடித்து வரும் படத்திற்கு வெந்து தணிந்தது காடு என்று தலைப்பு வைத்து பர்ஸ்ட் லுக் போஸ்டரை அண்மையில் வெளியிட்டார்கள். கூலிங் கிளாஸ், பைக், ஜீன்ஸ், டி சர்ட்டில் ஸ்டைலாக இருப்பார் சிம்பு என்று எதிர்பார்த்தால் அழுக்கு பிடித்த சட்டையில் வித்தியாசமாக இருந்தார்.

போஸ்டரில் சிம்பு சின்னப் பையன் போன்று இருந்தது தான் அனைவரையும் வியக்க வைத்தது. வெந்து தணிந்தது காடு படத்திற்காக தன் உடல் எடையை 15 கிலோ குறைத்திருக்கிறார் சிம்பு.

இந்நிலையில் அவர் சட்டை இல்லாமல் இருக்கும் புகைப்படம் வெளியாகி ரசிகர்களை ஆனந்தக் கண்ணீர் வடிக்க செய்துள்ளது.

முன்னதாக சிம்புவுக்கு தொப்பை பெரிதாகிவிட்டது. அவரால் குனிந்து சாப்பிடக் கூட முடியவில்லை என்று கிண்டல் செய்தார்கள். இந்நிலையில் தற்போது வெளியாகியிருக்கும் புகைப் படத்தில் தொப்பை இருந்த இடமே தெரியவில்லை.

சிம்புவின் அர்ப்பணிப்பை ரசிகர்கள் பாராட்டுகிறார்கள். இந்நிலையில் திருச்செந்தூரில் நடந்து வந்த முதல் கட்ட படப்பிடிப்பு நிறைவடைந்துவிட்டதாம்.

## ஓடிடி-யில் வெளியான நெற்றிக்கண் திரைப்படம்

தொரோனா காரணமாக தற்போது ஓ.டி.டி. தளங்களில் தொடர்ந்து பல முன்னணி பிரபலங்களின் படங்கள் வெளியாகி வருகிறது.

அப்படி சமீபத்தில் நயன்தாராவின் நடிப்பில் நேரடியாக ஹொட்ஸ்டார் ஓடிடி தளத்தில் வெளியான திரைப்படம் தான், நெற்றிக்கண்.

திரையரங்குகளில் வெளியாகும் படங்களை தான், திருட்டுத்தனமாக வீடியோ எடுத்து இணையத்தில் வெளியிடுகிறார்கள் என்றால், தற்போது ஓடிடி-யில் வெளியாகும் படங்களுக்கும் இந்த நிலை வந்துள்ளது.

சமீபத்தில் பாலிவுட் திரையுலகில் வெளியான, மிமி எனும் படமும் ஓடிடி ரிலீஸுக்கு முன்பே, திருட்டுத்தனமாக இணையத்தில் வெளியிடப்பட்டது.

இந்நிலையில் நயன்தாரா பார்வையற்றவராக நடித்து ஓடிடி தளத்தில் வெளியான நெற்றிக்கண் படத்தையும் ரிலீஸுக்கு முன்பு, திருட்டு தனமாக இணைய தளத்தில் வெளியிட்டு உள்ளனர்.

இதனால் நயன்தாரா உள்ளிட்ட படக்குழுவினர் அதிர்ச்சியாகியுள்ளார்கள் என்று செய்து வெளியாகியுள்ளது.

## விஜயை சந்தித்த டோனி



நடிகர் விஜயை இந்திய அணி யின் முன்னாள் கட்டன் மகேந்திரசிங் டோனி சந்தித்து பேசிய புகைப்படங்கள் இணையத்தில் வைரலாகியுள்ளன.

நடிகர் விஜய் தற்போது இயக்குநர் நெல்சன் திலீப்குமார் இயக்கத்தில் 'பீஸ்ட்' படத்தில் நடித்து வருகிறார். இதன் 2 ஆம் கட்ட படப்பிடிப்பு சென்னையில் உள்ள கோகுலம் ஸ்டுடியோவில் விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது.

இதனிடையே விளம்பர பட ஷூட்டிங் தொடர்பாக அங்கு வருகை தந்த இந்திய அணியின் முன்னாள் கப்டனும், சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் கப்டனுமான தோனி விஜயை சந்தித்து பேசினார். இதன் புகைப் படங்கள் இணையத்தில் வைரலாகியுள்ளன.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகமே கொண்டாடும் மாவீரனை ஏன் வெளியேற்றியது பார்சிலோனா?

**“பார்சிலோனா அணியில் மெஸ்ஸியின் இடத்தை யாராலும் நிரப்ப முடியாது என்பதே நிதர்சனம். அந்த பத்தாம் எண் ஜெர்சியை இனி யார் அணியப் போகிறார்கள், மெஸ்ஸி இல்லாத பார்சிலோனா அணியால் முன்பு போல் கோப்பைகளை வெல்ல முடியுமா, இப்படி நிறைய கேள்விகளுக்கு காலம்தான் பதில் சொல்ல வேண்டும்.”**




அண்மையில் நடைடபெற்ற பார்சி லோனா கிளப் ஃபேர்வெல் நிகழ்ச் சியில் கால்பந்து சுப்பர் ஸ்டார் மெஸ்ஸி தேம்பித் தேம்பி அழுதது அவரது ரசிகர்களையும் அழவைத்திருக்கிறது. சிறு வயதிலேயே மெஸ்ஸியின் திறமைகளைக் கண்டறிந்து அவரை கால்பந்து உலகின் ஜாம்பவனாக மாற்றிய பார்சிலோ கிளப் ஏன் அவரைக் கைவிட்டது?

இப்போதல்ல கடந்த இரண்டு ஆண்டுகளாகவே பார்சிலோனாவில் இருந்து மெஸ்ஸி வெளியேறப்போகிறார் என்கிற தகவல்கள் வந்துகொண்டேதான் இருந்தன. ஆனால், எப்படியும் இருதரப்பும் சமாதானம் ஆகிவிடும், மெஸ்ஸி தொடர்ந்து பார்சிலோனாவுக்கு விளையாடுவார் என்றே ரசிகர்கள் எதிர்பார்த்தார்கள். ஆனால், 21 ஆண்டுகால மெஸ்ஸி - பார்சிலோனா உறவு 2021இல் இறுதியாக முடிவுக்கு வந்துவிட்டது.

“நான் உண்மையில் சோகமாக இருக்கிறேன். ஏனென்றால் இங்கிருந்து வெளியேற நான் விரும்பவில்லை. அந்தளவுக்கு இந்த கிளப்பை நான் நேசிக்கிறேன். கடந்த வருடம் நான் வெளியேற விரும்பியது உண்மைதான். ஆனால் இந்த முறை எனக்கு வெளியே செல்ல விருப்பமில்லை” எனக் கண்ணீர் மல்க மெஸ்ஸி கூறியபோது எந்தளவுக்கு அவர் பார்சிலோனா அணியின் மீது பற்றுக்கொண்டிருந்தார் என்பதை உணர முடிந்தது.

இளம் வயதில் மெஸ்ஸிக்கு இருந்த ஓமோன் குறைபாட்டை தீர்ப்பதற்கான சிகிச்சையின் மொத்த செலவையும்பார்சிலோனா அணியே ஏற்றுக்கொண்டது. இந்த ஒரு காரணத்திற்காகவே காலம் முழுவதும் பார்சிலோனா அணிக்காக மட்டுமே மெஸ்ஸி விளையாடுவார் என்றெல்லாம் கூறப்பட்டது. ஆனால் இந்த வருடம் ஜூன் 30ஆம் திகதியோடு பார்சிலோனா அணியுடனான ஒப்பந்தம் காலாவதியாகிவிட்ட நிலையில், நிதிச்சுமை காரணமாக தங்களால் மெஸ்ஸியின் ஒப்பந்தத்தை நீட்டிக்க முடியாது என பார்சிலோனா தெரிவித்தது.

“என்னுடைய சம்பளத்தை வேண்டுமானால் 50 சதவிகிதம் குறைத்துக் கொள்கிறேன்” என மெஸ்ஸி சொல்லியும் அசைந்து கொடுக்கவில்லை பார்சிலோனா அணி நிர்வாகம். “எல்லோரையும் விட கிளப்பே பெரியது” என ஒரே வரியில் 21 வருட பந்தத்தை முடிவுக்கு கொண்டுவந்துவிட்டார் பார்சிலோனா கால்பந்து கிளப் அணியின் தலைவர் ஜோன் லாபோர்டா.

2015ஆம் ஆண்டு பெர்லினில் வைத்து நான்காவது முறையாக சம்பியன்ஸ் லீக் கோப்பையை வென்ற பிறகில் இருந்தே பார்சிலோனா அணியின் இறங்குமுகம் தொடங்கிவிட்டது. இந்தக் காலகட்டத்தில்தான் யாரை வேண்டுமானாலும் ஒப்பந்தம் செய்துகொள்ளும் வல்லமையை எட்டியது பார்சிலோனா. இதற்கு முன்பு வரை தங்களுக்கு சொந்தமான யூத் அகடமி மூலம் சிறந்த வீரர்களை உருவாக்கி போட்டிகளில் ஆதிக்கம் செலுத்தி வந்தது. எந்தவொரு தொழிலிலும் முக்கியமான விடயம் திறமையான ஆட்களைத் தேர்ந்தெடுப்பது. அதில் கோட்டை விட்டது பார்சிலோனா. இது முதல் சறுக்கல்!

2014 முதல் 2020 வரை பார்சிலோனா கிளப்பின் தலைவராக இருந்தவர் ஜோசப் மரியா பர்த்லமேயு. மிகப்பெரிய தொழிலதிபர். மெஸ்ஸி வெளியேறுவதற்கும், இந்தளவுக்கு பார்சிலோனா அணி நிதிச்சுமையில் தள்ளாடி வருவதற்கும் முக்கிய காரணம் இவர்தான். கால்பந்து விளையாட்டு பற்றியோ அல்லது கால்பந்து தொழில் பற்றியோ இவருக்கு தெரிந்திருக்கவில்லை என்பதோடு, பதவிக்கு வந்ததில் இருந்தே இவருக்கும் மெஸ்ஸிக்கும் ஒத்துவரவில்லை.

இவரின் கீழ் ஸ்போர்டிங் டைரக்டராக இருந்த புகழ்பெற்ற ஸ்பெயின் கோல்கீப்பர் அண்டோனி ஜூபிதான் நெய்மர் மற்றும் சாரெஸ் போன்ற வீரர்களை ஒப்பந்தம் செய்தார். இவர்கள் இருவரும் மெஸ்ஸியோடு இணைந்து MSN அட்டாக் என எதிரணிக்கு கிலியை ஏற்படுத்தினார்கள். சிறிது காலத்திலேயே ஜூபியை பதவியிலிருந்து தூக்கினார் பர்த்லமேயு.

2017இல் நெய்மரும் அணியிலிருந்து விலக, அடுத்த இறங்குமுகத்தை சந்தித்தது பார்சிலோனா. இந்த சமயத்தில்தான் இரண்டு மிகப்பெரும் தவறுகளைச் செய்தார் பர்த்லமேயு. ப்ரெஞ்ச் வீரர் கைலியன் எம்பப்பே மற்றும் நார்வே வீரர் எர்லிங் ஹாலண்ட் இருவரையும், “பார்சிலோனா மொடலுக்கு ஒத்து வர மாட்டார்கள்” என ஒப்பந்தம் செய் யாமல் நிராகரித்தார். இன்று இந்த இரு வீரர்களும் கால்பந்து உலகில் மிகப்பெரிய வீரர்களாக ஜொலித்து வருகிறார்கள்.

இன்னொரு பக்கம் தேவையே இல்லாமல் இளம் வீரர்களை அதிக விலை கொடுத்து ஒப்பந்தம் செய்தார். இவர்களும் பார்சிலோனாவில் கையாளப்படும் அழுத்தத்தை தாங்க முடியாமல் தோல்வியுற்ற வீரர் களாக வெளியேற ஆரம்பித்தார்கள். இதனால் இவர்களுக்கு செலவழித்த தொகையும் வீணானது.

அடுத்து மெஸ்ஸியின் சம்பளம். 2017 முதல் 2021 வரையிலான இடைப்பட்ட காலத்தில் 555 மில்லியன் யூரோவை வருமானமாக ஈட்டியுள்ளார் மெஸ்ஸி. இந்த காலகட்டத்தில்தான் அவரது சம்பளம் மும்மடங்கு அதிகரித்தது.

பல கோப்பைகளை அணிக்கு பெற்றுக் கொடுத்துள்ளார், கால்பந்து உலகின் ஜாம்பவான், ஒற்றை ஆளாக அணிக்கு வெற்றி தேடி தருபவர் போன்றவற்றால் மெஸ்ஸிக்கு அதிக சம்பளம் கொடுக்கலாம். ஆனால் மெஸ்ஸிக்கு அதிக சம்பளம் கொடுக்கும்போது மற்ற வீரர்களும் தங்களுக்கான சம்பளத்தை உயர்த்த போர்க்கொடி தூக்க ஆரம்பித்தார்கள்.

அணியின் வருமானத்தில் 75 சதவிகிதத்துக்கு மேல் வீரர்களின் சம்பளத்துக்காக செலவழிக்கக் கூடாது என லா லீகா அமைப்பு தடை விதித்துள்ளதால், மேலும் சிக்கலை சந்திக்க ஆரம்பித்தது பார்சிலோனா.

வீரர்களை ஒப்பந்தம் செய்வதற்கு மட்டுமே 2014 முதல் 2019 வரை ஒரு பில்லியன் யூரோவை செலவழித்துள்ளது பார்சிலோனா அணி. எந்தவொரு அணியும் நினைத்துப் பார்க்க முடியாத தொகை இது. இப்படி தொடர்ந்து எடுத்த தவறான முடிவுகள் காரண மாகவே இன்று நிதிச்சுமையில் தள்ளாடி வருகிறது பார்சிலோனா கிளப்.

இதற்கிடையில் மெஸ்ஸியை இரண்டு வருடத்திற்கு பி.எஸ். ஜி. அணி ஒப்பந்தம் செய்துள்ளது. ஆனால், மெஸ்ஸி எந்த அணிக்குப்போனாலும் பார்சிலோனா போல வருமா என கலங்குகிறார்கள் மெஸ்ஸி ரசிகர்கள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீனப் பெருஞ்சுவர்



சீனப் பெருஞ்சுவர்

மெங்க் சியாங்க் நு தனது தந்தையுடன் வசித்துக் கொண்டிருந்த போது ஒரு நாள் அவர்களது தோட்டத்தில் சுரைக்காய்ச் செடியின் பின்னே ஒரு உருவம் மறைந்து, மறைந்து செல்வதை பார்த்தார்கள். சுரைக்காய்ச் செடி அவர்களது உயிருக்கு நிகராய் வளர்க்கப்பட்டது. எனவே அதனை சிதைக்கத்தான் வருகிறார்களோ என அருகே சென்று பார்த்தனர்.

அங்கே ஒரு அழகான இளைஞன் அச்சத்துடன் மறைந்திருந்தான். அப்போதைய சீன அரசை ஆண்டு வந்த சின் ஷிஹூ வாங்கின் படைகள் சுவரைக் கட்டுவதற்காக அடிமைகளைத் தேடி வலை வீசிக் கொண்டிருந்தது. வலுவான இளைஞர்களைக் கண்டால் பிடித்துக் சென்று விடும்.

அவர்களுக்கு ஊதியம் எதுவும் கிடையாது. வெறும் உணவு மட்டும்தான். அதுவும் மூன்று வேளைக்கு கிடையாது. அவர்களை அந்தக் குடும்பம் அத்தோடு மறந்து விட வேண்டியது தான்.

அவ்வாறு தேடி வந்தவர்களின் கண்களுக்கு அகப்படாமல் தப்பி அங்கு மறைந்திருந்தான். மெங்க் சியாங்க் நு வும் அவளது தந்தையும் அவனுக்கு அடைக்கலம் தந்தனர். அவன் பெயர் ஃபான் சிலியாங்க்;

அரசுப்படைகள் போன பிறகு அவன் மெங்க் சியாங்க் நு இல்லத்திலேயே தங்கிவிட்டான். இருவருக்கிடையே காதல் அரும்பியது. திருமணமும் நடந்தேறியது. மூன்றாவது நாளிலேயே அவன் அரசுப் படைகளிடம் பிடிபட்டு விட்டான். நீண்ட நாட்களாகியும் கணவன் வராததால் அவனைத் தேடி மெங்க் சியாங்க் நு சுவர் கட்டும் இடத்துக்குச் சென்றாள். அங்கு போன பிறகுதான் அவளது கணவன் புான் சிலியாங்க் இரண்டு நாட்களுக்கு முன் இறந்து போனது தெரிய வந்தது.

கணவனுக்காக ஒரு பாறையின் மீது அமர்ந்து அழுது கொண்டே இருந்தாள். அவளது துக்கத்தின் வெப்பம் தாளாது சுவரின் ஒரு பகுதி இடிந்து விழுந்தது.

செய்தி கேள்விப்பட்ட அரசன் சின் ஷிஹூவாங் அவளைக் கொன்றுவிட தீர்மானித்து கோபத்துடன் இந்த சுவர் இடிய நீ தான் காரணமா? என்று கேட்டான். அவள் திரும்பி பார்த்தபோது அவளது அழகிய முகத்தைப் பார்த்துப் பிரமித்து போனான். அவளது அழகில் மயங்கினான். தன்னை மணந்து கொள்ள முடியுமா? என்று கேட்டான்.

அதற்கு மூன்று நிபந்தனைகளை விதித்தாள். ஒன்று ஃபான் சிலியாங்க் உடலைத் தேடி எடுக்க வேண்டும். அவனது இறுதிச் சடங்கு அரசு மரியாதையுடன் மன்னார் முன்னிலையில் நடத்தப்பட வேண்டும். மூன்றாவதாக கடலில் பிரயாணம் செய்ய வேண்டும் முதலிரண்டு நிபந்தனைகள் மீது மன்னனுக்கு உடன்பாடு இல்லை என்றாலும் அவள் மீது கொண்ட காதலால் சின் ஷிஹூவாய் சம்மதித்துவிட்டான்.


அவள் கேட்டுக் கொண்டபடி அவளது கணவனின் இறுதிச் சடங்கு நடந்து முடிந்தபின் அவள் கடலில் பிரயாணம் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டது. நடுக்கடலில் அவள் விழுந்து தற்கொலை செய்து கொண்டாள். சியாங்க் நு கடலில் விழுந்து இடம் ஷாண்டாங் மாகாணத்தில் உள்ள சிபோ நகரம் அவள் அழுது கொண்டிருந்த பாறை மற்றும் அவள் காலடித் தடங்கள் ஆகியன இன்றைக்கும் ஒரு சில சீனர்களால் வணங்கப்படுகிறது.

(தொடரும்)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2382

**றுக்மணி**

வெளிப்படையாக இருப்பவர்களைவிட



வேஷம் போடுபவர்களுக்குத்தான் இந்த உலகில் மதிப்பு அதிகம்...!

**நரேன்**

மனசு முழுக்க வலியோடு இருந்தாலும் எதுவுமே நடக்காதது போல



சிரித்து சமாளிக்கும் குணம் கொண்டவர்கள் தான் பெண்கள்...!

**ராகினி**




**தனன்**

நீ சொன்னாயேயென்று அந்த டாக்டரிடம் போனேன். அவர் என்னை ரொம்ப நேரம் உத்து உத்துப் பார்த்தாருடி...



நான்தான் சொன்னேனே இந்த ஏரியாவுலேயே அவர்தான் நல்லாப் பார்ப்பாருன்னு

**புனிதா**



ஒரே ஒரு Photo தான் ஒட்டுமொத்த Social Media வுலயும் Trending

**அபி**

கொடுப்பது சிறிது என்று தயங்காதே வாங்குபவருக்கு அது பெரிது



எடுப்பது சிறிது என்று திருடாதே இழப்பவருக்கு அது பெரிது...

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# airtel 4G

## ரீலோட் பிடியிலிருந்து விடுபடுங்கள்



### AIRTEL FREEDOM

PACKS களுக்கு நீங்களும் மாறுங்கள்

மாதத்திற்கு 1
ஒரு Reload

ANY TIME 24h
4G Data

Unlimited அழைப்பு நேரம்

| PRICE | VALIDITY | 4G DATA | AIRTEL CALLS | OTHER NETWORK MINUTES | EXCESS USAGE RATE |
|---|---|---|---|---|---|
| Rs. 999 | 30 DAYS | 2GB Per Day (60GB Per Month) | UNLIMITED | 300 | 50 CENTS TAX/MIN |
| Rs. 599 | | 1GB Per Day (30GB Per Month) | | 300 | |
| Rs. 399 | | 500MB Per Day (15GB Per Month) | | 200 | |
| Rs. 199 | | 1GB Per Month | | 100 | |

Work From Home மற்றும் Social Media தளங்களுக்கு செல்லலாம்

இந்த Packs மூலம் எந்தவொரு வலையமைப்பிற்குமான 50 உள்நாட்டு SMS களைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள்: 075 5 555555

www.airtel.lk

TRC/AIR/PRO/21/05

(C-1470)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org